20 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 | பாலம் 15 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | August 01, 2010

# கனேடிய வான் பரப்பு அருகில் ரஷ்ய போர் விமானங்கள்

யூலை 28, 2010 இல் இரண்டு ரஷ்ய போர் விமானங்கள் (Russian Bear Bombers) கனடாவில் நியூ பவுண்லாந்தின் கரைக்கு அண்மையில் உள்ள வான்பரப்பில் வருவதை கனேடிய வான்படை அவதானித்தது. இதை அடுத்து கியூபெக்கில் உள்ள கனேடிய வான்படைத்தளத்தை (Bagotville) சேர்ந்த இரண்டு கனேடிய போர் விமானங்கள் (CF - 18) வானில் விரைந்து ரஷ்ய விமானங்களை திருப்பி அனுப்பியது.





நியூபவுண்லாந்தில் உள்ள Goose Bay இல் இருந்து 463 கிலோ மீற்றர் கிழக்கிலுள்ள வான்பரப்பில் கனேடிய போர் விமானங்கள் ரஷ்ய போர் விமானங்களை திருப்பி அனுப்பின. Tu - 95 என அழைக்கப்படும் நீண்ட தூரத்திற்கு வானிலிருந்து குண்டு போடவல்ல இரண்டு ரஷ்ய போர் விமானங்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட விமானங்களாகும். கனேடிய பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் மக்கே தெரிவிக்கையில் ரஷ்ய போர் விமானங்கள் கனேடிய வான் பரப்பிற்கு அருகில் கடந்த மூன்று வருடங்களில் வருடத்திற்கு 12 இல் இருந்து 18 தரம் வந்துள்ளன. ஆனால் இம்முறையே எமது வான்பரப்பிற்கு மிக அண்மையில் அதாவது கனேடிய வான்பரப்பு எல்லையிலிருந்து 93 கிலோ மீற்றர் தூரத்தில் வந்தன. இந்த சம்பவத்தை அடுத்து கனேடிய அதிகாரிகள் ரஷ்யாவிடம் கனேடிய வான்பரப்பிற்கு அருகில் ரஷ்ய போர்விமானங்கள் வரும் போது முன் அறிவித்தல் தரவேண்டும் என தெரிவித்தார்கள். இதற்கு பதிலளித்த ரஷ்ய அதிகாரிகள் இது ஒரு வழக்கமான பயிற்சிப் பறப்பு என தெரிவித்தார்கள்.

# கனேடிய குடிசன மதிப்பீட்டு முறையில் மாற்றம்

இதுவரை காலமும் கனடாவில் குடிசன மதிப்பீடு எடுக்கும் விண்ணப்ப படிவம் மிகவும் நீண்டதாகவும் பலவிதமான கேள்விகளைக் கொண்டதாகவும் இருந்தது. அத்துடன் இதை ஒவ்வொரு குடிமகனும் நிரப்பி அனுப்ப வேண்டும் என்பது கனேடிய சட்டமாகவும் இருந்தது. இப்போது அரசாங்கம் இந்த நீண்ட விண்ணப்பங்களை நிரப்பி அனுப்புவது கட்டாயம் அல்ல என்றும் அதை மக்கள் தாங்களாகவே விரும்பினால் மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும் என சட்ட மூலத்தை மாற்றி அமைக்க முன்வந்துள்ளது. இம் முயற்சிக்கு பலர் எதிர்ப்பும் ஆதரவும் தெரிவித்துள்ளார்கள். இம் முயற்சியை ஆதரிப்பவர்கள் அரசாங்கம் தனி ஒருவரின் சொந்த தகவல்களை சேகரிப்பது தவறு, அதனால் இவ் நீண்ட விண்ணப்பங்களிலுள்ள கேள்விகள் தேவையற்றவை என்கிறார்கள். அரசின் சட்ட மூலத்தை மாற்றும் முயற்சியை எதிர்ப்பவர்களோ பல அரிய தகவல்கள் இல்லாமல் போவதால் இனிவரும் காலத்தில் அரச சேவைகள் பாதிக்கப்படலாம் என்கிறார்கள். இக்குடிசன மதிப்பீட்டு நீண்ட விண்ணப்ப படிவத்தில் வீட்டில் உள்ளவர்களின் சனத்தொகை மட்டும் அல்லாமல் அவர்களது தாய்மொழி, அவர்களது வாகனங்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களும் இருந்தன. இவற்றின் மூலம் ஒரு நகரம் அல்லது கிராமம் எவ்வாறு மாறுகின்றது, அங்கு எவ்வாறு சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் அல்லது முதியோர் பராமரிப்பு நிலையங்கள் கட்டவேண்டும் போன்ற தகவல்கள் கணிக்கக் கூடியதாக இருந்தது. இத்தகவல்களிலிருந்து நகரசபைகள் தங்களது நகரமக்களின் தகவல்களை பொறுத்து 26 வகையான அட்டவணைகள் தயாரித்து வைத்திருந்தார்கள். இப்பத்திரங்கள் நிரப்புவது ஒரு கட்டாயம் அல்ல என சட்டமூலம் வந்தால் இதிலுள்ள 20 அட்டவணைகள் நகரத்தின் திட்டமிடலிற்கு பாவிக்க முடியாமல் போய்விடும்.

# இலங்கைக்கு உதவும் நாடுகளில் சீனா முன்னணியில்

இலங்கைக்கு உதவும் நாடுகளில் சீனா முன்னணியில் நிற்பதாக இலங்கையின் பிரதி நிதிமந்திரி சரத் அனுகம 30, 2010 நாள் கூறினார். சீன வங்கியான (Export and Import bank) ஒருவித நிபந்தனையும் இல்லாமல் $50 மில்லியன் டொலர் பண உதவியை தந்தது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியமோ பல நிபந்தனைகளை போடுகிறது என்றார்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

GSF Golden Store Fixtures
Friend for your Business
905-565-6555
1 877-565-6554
Store Planning, Design & Installation
» Acrylics
» Counter Top Displays
» Gift Bags & Ribbons
» Glass Displays
» Grid Panels & Accessories
» Mannequins
» Pegboard & Accessory
» Racks
» Shopping Cart & Baskets
» Showcases
» Sign & Sign Holders
» Slatwall & Accessories
» Steel Shelving
» Wood Displays
And Much More..........
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம்.
355 Admiral Blvd, Unit #5
Mississauga, Ont, L5T2N1
www.goldenstorefixtures.com
sales@goldenstorefixtures.com

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers.
• Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON
M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# கனேடிய வான்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

சீனாவிற்கு அடுத்து இலங்கைக்கு உதவி வழங்குவதில் இந்தியாவும் ஜப்பானும் முன்னுக்கு நிற்கின்றன. அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த ஆண்டில் (2009) மட்டுமே இலங்கைக்கு சீனா $2.2 பில்லியன் டொலர் உதவி வழங்கியுள்ளது. இதை விட இந்தியாவும் ஜப்பானும் சேர்ந்து மேலும் $1.2 பில்லியன் டொலர் உதவி வழங்கியுள்ளன. இவற்றுடன் ஒப்பிடுகையில் ஐரோப்பிய நாடுகளோ அல்லது வேறு மேற்குலக நாடுகளோ வழங்கும் உதவி மிகவும் சிறிய அளவு என்றார்.

இலங்கை எவ்வாறு இக்கடனை திருப்பி அடைக்கப்போகிறது என்ற பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கையில் பிரதி அமைச்சர் மற்றைய நாடுகளின் வங்கியுடன் ஒப்பிடுகையில் சீன வங்கியின் ஒப்பந்தம் மிகவும் வசதியானதும் ஏற்றுக் கொள்ள கூடியதும் என்றார்.

# பரமேஸ்வரனுக்கு பிரிட்டிஷ் பத்திரிகைகள் நஷ்டஈடு

மான நஷ்ட வழக்கில் நிரபராதியானார் பரமேஸ்.. பத்திரிகைகளிடமிருந்து பரமேஸ்வரனுக்கு 80,000 பவுண்ஸ் நஷ்ட ஈடு வழங்க நீதிமன்றம் தீர்ப்பு.



இலங்கைத் தமிழ் இளைஞரான பரமேஸ்வரன் சுப்ரமணியம், கடந்த வருடம் பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு வெளியே உண்ணாவிரதம் மேற்கொண்டபோது Burger தின்பண்டத்தை இரகசியமாக உட்கொண்டார் என செய்தி வெளியிட்ட பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் வெற்றி பெற்றுள்ளார். மேற்படி குற்றச்சாட்டு தவறானது என ஒப்புக்கொண்டுள்ள “த சன்” மற்றும் “டெய்லி மெயில்” ஆகியன சுமார் 80 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களை நஷ்ட ஈடாக வழங்க சம்மதித்துள்ளன.

29 வயதான பரமேஸ்வரன், கடந்த வருடம் இலங்கையில் தமிழர்கள் நடத்தப்படும் விதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு வெளியே 23 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் 5 நாட்கள் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்றார்.

மேற்படி உண்ணாவிரதத்தின் போது அவர் இரகசியமாக Burger களை உட்கொண்டார் என மேற்படி பத்திரிகைகள் செய்திவெளியிட்டிருந்தன. இது தொடர்பாக லண்டன் மேல் நீதிமன்றில் பரமேஸ்வரன் வழக்குத் தொடுத்தார். தற்போது, மேற்படி பத்திரிகைகள் தமது குற்றச்சாட்டை வாபஸ் பெற்றுள்ளதுடன் மன்னிப்பும் கோரியுள்ளன. அத்துடன் அச்செய்தியால் அவருக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடாக 80 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்களை வழங்கவும் சம்மதித்துள்ளன.

பரமேஸ்வரன் மேற்படி உண்ணாவிரதத்தின்போது எந்த உணவையும் உட்கொள்ளவில்லை என நீதிபதி டேவிட் இயடி தனது தீர்ப்பில் கூறியுள்ளார். '“உண்மையற்ற செய்திகள் காரணமாக பரமேஸ்வரன் உலகளாவிய தமிழர் போராட்டத்திற்கு நம்பிக்கைத் துரோகமிழைத்துவிட்டார் என நம்பிய தமிழர் சமூகத்தினால் பரமேஸ்வரன் ஒதுக்கப்பட்டிருந்தார்” எனவும் நீதிபதி டேவிட் இயடி கூறியுள்ளார்.

மேற்படி பத்திரிகைச் செய்திகளின் பின்னர் தான் தற்கொலை செய்துகொள்ளவும் யோசித்ததாக ஏ.எவ்.பி. செய்திச் சேவையிடம் பரமேஸ்வரன் கூறியுள்ளார். “தமிழ் சமூகத்திடமிருந்து செல்லிடத் தொலைபேசி குறுஞ்செய்திகள் மூலம் எனக்கு அச்சுறுத்தல்கள் வந்தன. பரமேஸ்வரனைக் கொல்லுங்கள் என குறுஞ்செய்திகள் பரப்பப்பட்டன” எனவும் பரமேஸ்வரன் கூறியுள்ளார்.

## வாசகர் எண்ணம்

கனடாவின் மூத்த தமிழ் இதழாக விளங்கும் விளம்பரம் பத்திரிகை சமூக நலன் கொண்ட பத்திரிகையாக எம் மனங்களில் இடம்பிடித்துள்ளது.

சம கால அரசில் சார்ந்த செய்திகளை பத்திரிகைத்தர்மத்துடன் சுடச்சுட வெளியிட்டு மக்களை அரசியலில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பாங்கு பாராட்டுக்குரியது. விளையாட்டுத்தகவல்கள், கனடாவில் கலை இலக்கிய முயற்சிகள், தாய் நாட்டுச் செய்திகள், உடல் நலம், உளநலம், கவிதைகள் போன்ற அம்சங்களில் அதிக கவனம் செலுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது. கனதியான கட்டுரைகள் இடம்பெற்றிருப்பது வாசகர்களின் மனதில் ஆத்மா திருப்தியை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. “பார்வைக்குருடர்கள்”, “உனை நீ அறி”, “குரு என்பவர் உயிருள்ள வரை படம்”, “வாழ்நாள் சாதனையாளர்” போன்ற ஆக்கப்பூர்வமான சமூகநலன் பேணும் கட்டுரைகள் வாசகர்கள் மனதை வளம்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

ஒரு பத்திரிகைக்கு இருக்க வேண்டிய அம்சங்கள் யாவும் நிறைந்த மனநிறைவுள்ள பத்திரிகையாக விளம்பரம் பத்திரிகை திகழ்கின்றது.

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் இன்றியே அதன் தரம் காரணமாக மக்கள் அபிமானம் பெற்று விளங்குகிறது.

வாழ்க வளமுடன். மலர்க மாதம் பல முறை. இன்னும் பல புதிய காலத்துக்கு ஏற்ற அம்சங்களுடன் வெளிவர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். - ரஞ்சி ஸ்ரீகதிர்



## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

Sales Reps. Welcome



For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



# வாழத் துடிக்கும் வன்னி

## - ஒரு நேரடி ரிப்போர்ட் பாகம் 4



> “தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதாகவே பொதுவாக குறை கூறப்படுகின்றது. ஆனால் மனிக்பாம் முகாமுக்குள் செல்வதற்குரிய அனுமதி மறுக்கப்பட்டதன் மூலம் அந்தக் கூற்று எவ்வளவு தூரம் உண்மையானது என்பதைத் தெளிவுபடுத்துவதாக இருந்தது.”

நாடாளுமன்ற உறுப்பினர்கள் முல்லைத்தீவு கச்சேரிக்குச் சென்ற வேளை, அங்கு அரச அதிபர் இருக்கவில்லை. அவர் லீவில் சென்றிருந்தார். அதனால் அவருடனான சந்திப்புக்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டது. அடுத்ததாக முல்லைத்தீவு நகரத்தைச் சுற்றிப்பார்க்க வேண்டும் என புறப்பட்டது குழு.

நகர வீதிகள் பெரும்பாலும் வெறிச்சோடிக் கிடந்தன. இடிபாடுகளுக்கிடையில் சிலர் கடைகளை ஆரம்பித்து வாழ்க்கையை மீளவும் கட்டியெழுப்புவதற்கான முயற்சி களில் ஈடுபட்டிருந்தார்கள். கடைகளை ஒரு கையால் விரல் விட்டு எண்ணிவிடலாம். எல்லாமே கொட்டில் அல்லது பெட்டிக் கடைதான். உடையாத கட்டிடத்தையும் கடையையும் காணவே முடியவில்லை. பல இடங்களில் கடை கட்டிடங்கள் தரைமட்ட மாகியிருந்தன. அங்கு கட்டிடங்கள் இருந்ததை நினைவூட்டுவதற்காகக் கற்குவியல்களே காணப்பட்டன. முல்லைத்தீவு நகர வீதிகளின் எந்த இடத்தில் இருந்தும் கடலை கண்ணால் பார்க்கக் கூடியதாக இருந்தது. சுனாமியின்போது சீறியெழுந்து நகரத்தை அழித்த முல்லைத்தீவு கடல் அமைதியாக இருந்தது. நான் மட்டும்தானா இந்த நகரத்தை அழித்தேன். இப்போது என்ன நடந்திருக்கின்றது என வினவுவது போல இருந்தது அந்த அமைதி. கரைகள் வெறிச்சோடிக் கிடந்தன. காகங்களின் சத்தத்தைக்கூட கேட்க முடியவில்லை. அப்படியோர் அமைதி அங்கு நிலவியது.

**- செல்வரட்ணம் சிறிதரன் -**

முல்லைத்தீவு நகரத்திற்கும் வெளிமாவட்ட நகரங்களுக்குமான பேரூந்து சேவைகள் நடைபெறுவதைக் காணக்கூடியதாக இருந்தது. பேரூந்து நிறுத்தத்தை கச்சேரிக்கு எதிரில் வைத்திருந்தார்கள். பழைய பேரூந்து நிலையம் பாழடைந்து கிடந்தது. பாழடைந்த நகரில் பேரூந்து நிலையம் பிரயோசனமில்லைத்தானே?

முல்லைத்தீவு நகரின் நிலைமையும், அங்கிருந்த மக்களின் நிலைமையும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் மனங்களைப் பெரிதும் பாதித்தன. கனதியான நெஞ்சங்களோடு வன்னிவிளாங்குளத்தை நோக்கி வாகன அணி தனது ஓட்டத்தை ஆரம்பித்தது. அது ஒரு நீண்ட புழுதி நிறைந்த வீதிப்பயணமாக இருந்தது. ஒட்டுசுட்டான் பகுதியில் வீதிகள் சிறிது நன்றாக இருந்தன. அங்கிருந்து மாங்குளம் சந்திக்கு வரும் வரையில் வீதியின் பெரும்பகுதி புழுதி வீதியாக இருந்தது. மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியின் 9 ஆம் கட்டையில் இராணுவத்தின் சோதனைச்சாவடி அமைந்திருந்தது. கேட் போட்டு வீதியை மறித்திருந்தார்கள். வாகன அணி கேட்டருகில் சென்று நின்றது. நிறுத்தப்பட்ட வான்களில் யார் பயணம் செய்வது என்று கேட்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்க்காவலர் ஒருவர் பதில் கூறினார். உடனடியாக கேட் உயர்ந்து பயணத்தைத் தொடர்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

பேரூந்துகள் தொடக்கம் அனைத்து வாகனங்களும் இவ்விடத்தில் போகும்போதும் சரி வரும்போதும்சரி பதிவு செய்து எங்கு செல்கின்றார்கள் என்பதைத் தெரிவித்து அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும் என்பது இந்த வீதிச் சோதனையின் நடைமுறை என்பதை பின்னர் கேள்வியுற்றோம். புளியங்குளம் சந்தியில் பிரிந்து நெடுங்கேணி, முல்லைத்தீவு பகுதிகளைப் பார்த்துவிட்டு மீண்டும் மாங்குளம் சந்தியில் வாகனத் தொடரணி ஏ9 வீதியைத் தொட்டபோது, வாழ்க்கை சுறுசுறுப்புமிக்கதாக மீண்டும் காணப்பட்டது. மாங்குளம் சந்தியை அடைந்ததுமே, அடுத்ததாக மல்லாவி – துணுக்காய் வீதியில் வாகன அணி திரும்பியது.

செப்பனிடப்பட்டிருந்த மல்லாவி – துணுக்காய் வீதியின் இரு பக்கங்களிலும் காடுகளும் இடையிடையே கொட்டில்களும், கூடாரங்களும் தென்பட்டன. மக்கள் அவற்றில் குடியிருந்தார்கள். அந்தப் பிரதேசம் காடடர்ந்து காணப்பட்டாலும், வாழ்க்கையின் துடிப்பையும் ஆரம்பத்தையும் அங்கு அவதானிக்க முடிந்தது. வன்னிவி-ளாங்குளம் அம்மன் கோவிலடியை வாகனத் தொடரணி சென்றடைந்தது.

அங்கு இரண்டு வருடங்களின் பின்னர் முதற்தடவையாக அம்மனின் பொங்கல் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. கூடியிருந்த மக்களது முகங்களில் திருப்தியும் பக்தியுணர்வும் மேலோங்கிக் காணப்பட்டன. சிலர் காவடி எடுத்திருந்தார் கள். ஒரு தந்தையும் இரு மகன்மார்களும் பறவைக்காவடி எடுத்திருந்தார்கள். நேர்த்திகளை நிறைவேற்றுவதற்காகப் பல பெண்கள் பால்குடம் ஏந்தியிருந்தார்கள். ஒலிபெருக்கி பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தது. குடும்பம் குடும்பமாக மக்கள் கோவிலுக்கு வந்திருந்தார்கள். சிறுவர் சிறுமிகள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். மொத்தத்தில் ஒரு மகிழ்ச்சியான ஒரு சூழல் அங்கு நிலவியது.

கோவில் திருவிழாக்களுக்கே உரிய களை அங்கு காணப்பட்டது. பொலிசார் காவல் கடமையில் நின்றிருந்தார்கள். அவர்களில் உயரதிகாரிகளும் இருந்தார்கள். பிளாஸ்டிக் கடைகள், கடலைக்கடைகள் உட்பட பேன்சி கடைகளும் போடப்பட்டிருந்தன.

கோவில் நிர்வாகிகள் நாடாளுமன்றக் குழுவினரை ஆலயத்தினுள் அழைத்துச் சென்று விசேட அர்ச்சனை செய்தார்கள். ஆலயம் முழுமையாகச் செப்பனிடப்பட்டு இருக்கவில்லை. ஆயினும் புனிதமாக அலங்கரிக்கப்பட்டு பக்தியுணர்வை ஏற்படுத்த வல்லதாக இருந்தது. பூசையின் பின்னர் ஆலய நிர்வாகிகள் திருவிழாவிற்கு வருகை தந்திருந்த ஊர் முக்கியஸ்தர்கள், அந்தப் பிரதேசத்து பிரதேச செயலாளர் மற்றும் ஒருசில அதிகாரிகளுடன் ஒரு சுருக்கமான சந்திப்பு. பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன. தொழில் முயற்சிக்கான உதவிகள், நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான யோசனைகள், பாடசாலைகளின் அபிவிருத்திக்கான ஆலோசனைகள் என்பன அவற்றில் முக்கியமாக இருந்தன. பெரியசாமி முகுந்தன் என்றோர் இளம் ஆசிரியர். அவர் ஒரு கோரிக்கையை முன்வைத்தார். அது தடுப்பில் உள்ளவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் சம்பந்தமானது.

“எங்கள் பகுதியில் நிறையபேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்தக் குடும்பங்களில் உள்ள பெண்களே தமது குடும்ப விடயங்கள் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும். தடுப்பில் உள்ளவர்கள் வவுனியாவில் மட்டுமல்லாமல் வேறு வேறு இடங்களில் எல்லாம் வைக்கப்பட்டிருக்கிறார் கள். அவர்களைப் பார்ப்பதற்காக இந்த குடும்பத் தலைவிகள் செல்லும் போதெல்லாம் அந்த வீடுகளில் உள்ள பிள்ளைகள் பாடசாலைக்கு வரமாட்டார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள். எங்கு தங்கியிருக்கின்றார்கள் எனத் தெரியாது. இவ்வாறு அவர்கள் தொடர்ச்சியாகப் பாடசாலைக்குச் சமூகம் தராத காரணத்தினால் அவர்களது கற்றல் ஒழுங்கு சீரில்லாமல் இருக்கின்றது. இதனால் பாடசாலைகளுக்கு வருகை தந்தும் கூட அவர்களால் தொடர்ச்சியான கல்வியைப் பெற முடியாமல் இருக்கின்றது. இந்தப் பெண்கள் தடுப்பில் உள்ள தமது கணவன்மாரைப் பார்க்கச் செல்லும்போது மட்டுமல்லாமல், அவர்கள் தொடர்பான பல்வேறு செயற்பாடுகளுக்கும், குடும்ப அலுவல்களுக்குமாக வெளியில் அலைய வேண்டியவர்களாக இருக்கின்றார் கள். அதனால் அவர்கள் தமது பிள்ளைக-ளின் ஒழுங்கான பாடசாலை வருகையை உறுதி செய்ய முடியாமல் இருக்கின்றது. ஆகவே இத்தகைய பிள்ளைகளின் முறையான - தொடர்ச்சியான கல்விச் செயற்பாட்டுக்கும் அவர்களது பராமரிப்பிற்கும் சமூக ரீதியிலான ஒரு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இந்தக் குடும்பங்களின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்வதில் உதவுவதற்கும் ஓர் ஏற்பாடு செய்ய வேண்டும்” என்ற கோரிக்கையை

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# வாழ்க்கை என்னும் விளையாட்டு



## சத்குரு வாசுதேவ்

மனித மனத்தில் சரியான எண்ணங்களைப் புகுத்தினால்தான் அதை தேவையான முறையில் நாம் இயக்க முடியும். இன்று பலரும் தங்கள் வாழ்க்கையிலிருந்து விலக்க வேண்டிய விஷயங்கள் பற்றியே திரும்பத் திரும்ப சிந்தித்து ஒரு பட்டியல் போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அதை விட என்னென்ன வேண்டும் என்ற எண்ணங்களைப் புகுத்துவதுதான் சரியான அணுகுமுறை. அப்படிச் செய்தால் தேவையில்லாதவை தானாகவே விடைபெற்று விலகிவிடும். வேண்டாத விஷயங்கள் பற்றி திரும்பத்திரும்ப சிந்திக்கும்போது, அவை வாழ்க்கையில் நிகழ்ந்து விடுவதற்கான வாய்ப்புகள்தான் அதிகம். எனவே மனம் என்கிற கருவியை சரியாகக் கையாள வேண்டும்.

நம் வீட்டில் இருக்கிற சில மின்சார சாதனங்களைப் போலவே தேவைப்பட்டால் இயக்குவதும், தேவை இல்லையென்றால் நிறுத்துவதும் மனித மனத்திற்கும் சாத்தியம். அந்த அளவிற்கு மனம் மீது ஆளுமை செலுத்துவது அவசியம்.

கனவு காணுவது நல்லது. அது உங்களுக்கு ஊக்கம் தருவது. ஆனால் நிறைய பேர் கனவு நிலையிலேயே நின்று கொண்டு வாழ்க்கைக்குள் இறங்க பயப்படுகிறார்கள். உங்களை கனவு நிலையிலேயே வைத்திருக்கக் கூடியவற்றில் ஒன்றுதான் ஜோதிடம். நிறைய இளைஞர்கள் கூட கண்களில் அச்சத்தோடும் கைகளில் ஜாதகக் குறிப்போடும் நாளை என்ன நடக்கும் என்கிற கேள்வியோடும் நடமாடுகிறார்கள். இன்னும் வாழ்க்கைக்குள்ளேயே இந்த வாலிபர்கள் வரவில்லை. இன்று என்ன நடக்கிறது என்ற தெரிந்தால்தான் நாளை என்ன நடக்கும் என்று சொல்ல முடியும். ஆனால் அவர்கள் அதை ஜோதிடம் வழியாக அறிந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள்.

ஒரு பிச்சைப் பாத்திரத்தை கையில் வைத்துக்கொண்டு அதில் என்ன வரப்போகிறது என்று எதிர்பார்ப்பது போல உங்கள் வாழ்க்கையை நீங்களே ஒரு பிச்சைப் பாத்திரமாக ஏந்திக் கொண்டு கிரகங்கள் அதிலே என்ன போடப் போகின்றன என்று பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது.

நீங்கள் உங்கள் வாழ்க்கையை சரியானபடி மாற்றியமைத்தால் தேசத்தின் வாழ்க்கையும் சரியானபடி மாறும். இன்று இந்த மண்ணில் நடக்கின்ற ஒவ்வொன்றும் மனித மனத்தில் நடைபெற்றதுதான். தன்னிடம் என்ன இல்லை என்பதை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்காமல், இருப்பதை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை நோக்கி நடைபோட வேண்டும்.

உங்கள் தகுதியை, ஆற்றலை அறிந்து கொள்ளாத போதுதான் அதிர்ஷ்டங்களை நம்பத் தொடங்குகிறீர்கள். வேகமாக ஒன்றை அடைய வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள், பதட்டப்படுகிறீர்கள். இந்தப் பதட்டத்தின் காரணமாகத்தான் ஜாதகத்தை நம்பிப் போகிறீர்கள். தன்னை அறிந்து கொள்ளாமல் சில வெற்றிகளைப் பெற்றால் அதை அதிர்ஷ்டத்தால் வந்தவை என்று நீங்களே நம்பத் தொடங்கி விடுவீர்கள். அதற்குப்பிறகு ஒவ்வொன்றுக்கும் உங்கள் ஜாதகத்தையோ கைரேகையையோ எண் கணிதத்தையோ பார்த்துக் கொண்டுதான் உங்களால் செயல்பட முடியும்.

தனது தனிப்பட்ட ஆற்றல் பற்றி இன்றைய மனிதர்களுக்கு எதுவும் தெரிவதில்லை. அதனால்தான் சில அற்புதங்கள் எதிர்பார்த்து அவர்கள் அலைமோதுகிறார்கள். இவையெல்லாம் பதட்டத்தின், அச்சத்தின் வெளிப்பாடுதான். ஒரு மனிதனின் வாழ்க்கையில் நடக்கக் கூடிய மிகப்பெரிய அற்புதம் என்ன தெரியுமா? வாழ்க்கையை விளையாட்டாய் நடத்திச் செல்வது. இது ஒவ்வொருவருக்கும் சாத்தியமே!


## Inner Engineering Program

Date: ***August 11th to 17th***

Location: ***Toronto Botanical Garden,*** 777 Lawrence Avenue East ,
(Lawrence & Leslie intersection), Toronto, ON M3C 1P2 - Canada

Free Introductory talk on August 11th at 6:30pm to 7:30pm
ALL ARE WELCOME

Session Info: ***Morning Session : 9:30 am to 12:30 pm*** OR
***Evening Session: 6:30 pm to 9:30 pm***

Website: www.ishafoundation.org / www.ishayoga.org

Email: toronto@ishafoundation.org Phone: 1-866-424 - ISHA (4742)





# அசையா ஆதன (வீடு காணி) உரித்துக் காப்புறுதி

## Title Insurance

கனடாவில் வீடு, காணி வாங்குபவர்களும், வீடு, காணிக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்களும் உரித்துக் காப்புறுதி சம்பந்தமாகக் கேட்கும் கேள்விகளுக்கு விளக்கம் அளிப்பதற்காக இக்கட்டுரையை எழுதுகின்றேன்.

வீடு, காணி வாங்குபவர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயங்களில் நில அளவையும் (Survey) ஒன்று. வீடு, காணி வாங்குகின்ற நேரத்தில் அவற்றின் பரப்பளவையும், எல்லைகளையும் சரியாகக் காட்டுகின்ற புதிய சில அளவைப் பெற்றுக் கொள்வதற்குக் காலத்தையும், நேரத்தையும் செலவழிக்க வேண்டும். சில வேளைகளில் சம்மந்தப்பட்ட வீடு, காணி தொடர்பான பழைய நில அளவைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாமலும் இருக்கலாம். இக்காரணங்களினால் வீடு, காணி வாங்குகின்ற நேரத்தில் அவற்றின் பரப்பளவிலும், எல்லைகளிலும் எற்கனவே எற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புக்கள், மாற்றங்களினால் வீடு, காணி வாங்குபவர்களுக்கு பண நட்டம் எற்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. இந்நட்டத்தை தவிர்ப்பதற்காகவே வீடு, காணி வாங்குபவர்கள் தமது உரித்தைக் காப்புறுதி செய்வது நல்லது.

உரித்துக் காப்புறுதி வீடு, காணி வாங்குபவர்களை மட்டமல்ல அது சம்பந்தமான அலுவல்களைச் செய்கின்ற அவர்களது சட்டத்தரணிகளையும் சில அளவையோடு தொடர்பான பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்கின்றது.

அத்தோடு வடு, காணி வாங்குபவர்கள் எந்த

## பகுதி 1

நிதி நிறுவனங்களிடம் (Financial Institution) தமது வீடு, காணியை அடமானம் வைக்கின்றார்களோ அந்த நிறுவனங்களும் நில அளவைக்குப் பதலாக இத்தகைய காப்புறுதிகளை ஏற்றுக்கொள்கின்றன.

சட்டத்தரணிகள் உரித்துகாப்புறுதி செய்யும் நிறுவனங்களின் விபரங்களையும் அவை எவ்வகையான உரித்துக்களைக் காப்புறுதி செய்கின்றன என்பன பற்றியும் வீடு, காணி வாங்கும் தமது வாடிக்கையாளருக்கு (Clients) தெளிவு படுத்துவார்கள்.

உரித்துக் காப்புறுதி ஏனைய காப்புறுதிகலிலிருந்து வேறுபட்டது. ஒரேயொரு கொடுப்பனவுதான் செய்யவேண்டும். இக்கொடுப்பனவு வீடு, காணியின் பெறுமதியிலும் எந்தக் காப்புறுதி கம்பனியில் காப்புறுதி செய்யப்படுகின்றதோ அந்தக் காப்புறுதிக் கம்பனியின் காப்புறுதி திட்டத்திலும் தங்கியுள்ளது. இக்காப்புறுதியானது வீடு, காணி வாங்குபவர்கள் அவற்றை வேறொருவருக்கு உரித்து மாற்றம் செய்யும் வரைக்கும் வலுவில் இருக்கும். ஏற்கனவே வீடு, காணி வாங்கும்பொழுது உரித்துக் காப்புறுதி எடுக்காமல் விட்டுவிட்டவர்கள் கூட பின்னர் அந்த வீடு, காணிகளுக்கு உரித்துக்காப்புறுதி எடுத்துக்கொள்ளலாம். (Existing Home Owners Policy)

இதில் முக்கியமாக கவனிக்கவேண்டிய விடயம் என்னவென்றால் இந்த உரித்துக்காப்புறுதி பண நட்டத்தை (Financial Loss) நிவர்த்தி செய்கின்றதே ஒழிய உரித்து அம்பந்தமான பிரச்சனைகளைத் தீர்ப்பதில்லை.



**தாரணி தர்மலிங்கம்,** LLB
Barrister solocitor & Notarypublic


## தாரணி சட்ட அலுவலகம்

* சட்டத்துறையில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவம்
* 45 நிமிட நேர இலவச ஆரம்ப ஆலோசனை
* *Real Estate Law* அசையா ஆதன (வீடு, காணி) உரிமைச் சட்டம்.
* *Family Law* குடும்பச் சட்டம்.
* *Wills & Estate* இறுதி விருப்பாவணமும், மரணச் சொத்தும் சட்டம்.
* *Power Of Attorney & Affidavit* தத்துவப் பத்திரம் & சத்தியக்கடதாசி
* *Immigration Law* குடிவரவுச்சட்டம்



**தாரணி தர்மலிங்கம்,** LLB
Barrister solocitor & Notarypublic

*GTA Square*
*5215 Finch Avenue East*
*#213*
***Tel: 416.291.4900***
***Fax: 416.291.4901***


# எனக்குள் இருப்பவற்றின் பிரதிபலிப்பே எனது அனுபவங்கள்

எனக்குள் மறைந்திருப்பவற்றின் பிரதிபலிப்பாகத்தான் வாழ்வில் எனது அனுபவங்களை நான் புரிந்து கொள்கிறேன் என்பது விளங்கியதும் வாழ்வைப்பற்றிய கூடிய புரிந்துணர்வு எனக்கு ஏற்படும்.

வேறொருவரின் சொல்லோ செயலோ உன்னைப் புண்படுத்தும்போது அது அவரின் செயற் பாட்டால் ஏற்படுவதல்ல. ஏற்கெனவே உனக்குள்ளிருக்கும் ஒன்றின் மேல் வெளியிலிருந்து வருவது மோதும்போது உனது உணர்வுகள் துண்டாடப்படுகின்றன. சுயஅலசல் செய்வதன் மூலம் தான் என்னை இப்படிக் குழப்பிவிடும். எதை எதையெல்லாம் நான் இப்படி எனக்குள் மறைத்து ஒளித்து வைத்திருக்கிறேன் என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியும்.

சற்றும் எதிர்பாராத நேரத்தில் உன்னைக் குத்தும் உண்மைகள் ஒருவர் வாயிலிருந்து தெறித்து விழும். உனது தற்காப்புக் கவசத்தைத் தவிடுபொடியாக்கும் அந்த வார்த்தைகள் உன்னைக் கதிகலங்க வைக்கும். இதுவரை நீ இல்லையென்று மறுத்து, புறக்கணித்து வந்ததை எடுத்துரைக்கும் அந்த நபரின் மேல் உனது கோபம் கொப்பளித்துப் பாய்ந்து பீறிடும். ஆனால் இவ்வாறு செய்யாது உனது பார்வையை உனக்குள் திருப்பி சுயஅலசல் செய்வது உனக்குள்ளே இருக்கும் குணப்படுத்தப்பட வேண்டிய தவறுகளைப் பற்றி நீ அறிந்து கொள்வதற்கு உனக்கு உதவியாயிருக்கும். உன் சூழலில் நடப்பவை உன் உணர்வுகளைக் கைப்பொம்மையாக்கி உன்னை ஆட்டிப்படைப்பதை நீ விரும்பாததையே உனது இந்த சுயஅலசல் விருப்பு எடுத்துக் காட்டுகின்றது. பிரச்சனையின் தன்மையை நன்கு புரிந்து நான் இப்போ என்ன உணர்கிறேன் எனும் கேள்வி உனக்குள் எழுந்தவுடன் உனது சுய அலசல் ஆரம்பமாகி விட்டது என்பது அர்த்தம். அதற்குப் பிறகு இந்த உணர்வு ஏன் எனக்கு ஏற்படுகின்றது என்று உன்னையே நீ கேட்டுக்கொள். அவள் அப்படிச் செய்ததால் அல்லது இவர் இப்படிச் செய்தபடியால் என்பதுதான் உனது பதில் என்றால் அது முற்றிலும் தவறு. உனது உணர்வுகளுக்குக் காரணம் மற்றவர்கள் அல்ல. உனது பிரச்சனையை நீதான் பொறுப்பேற்க வேண்டும். உனது பிரச்சனையை அடையாளங் கண்டு நீதான் அதைக் குணப்படுத்த வேண்டும்.

மற்றவர்கள் தான் உனக்குப் பிரச்சனை ஏற்படுத்துகிறார்கள் என இன்றுவரை நீ பிழையாக நம்பி வந்திருக்கலாம். ஆனால் உனக்குள் மறைந்திருக்கும் எந்த விடயம் உனது எதிர்மறை உணர்வுகளை இவ்வாறு கிளர்ந்தெழச் செய்கின்றது என்பதை விழிப்புணர்வுடன் இன்று புரிந்துகொள். ஏதாவது பிரச்சனை ஆரம்பித்தவுடன் தனிமையில் அமைதியாக சுயஅலசலை ஆரம்பித்து உன்னை நீயே குணப்படுத்திக்கொள்.

**பிறரின் செய்கைகளின் பிரதிபலிப்பாகச் செயற்பட்டு பிரச்சனைக்குள்ளாகும் எனது தேவையைக் கைவிட்டுக் குணப்படுத்தும் கைங்கரியத்தை இன்றுமுதல் நான் கடைப்பிடிக்கப் போகிறேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 175

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி


உங்கள் சகல விதமான கணணி சார்ந்த பிரச்சனைகளுக்கும் தேவைகளுக்கும் நம்பிக்கையுடன் உத்தரவாதத்துடன் கூடிய சேவை பெற அழையுங்கள் -Niruthan Nadarajah

FREE DIAGNOSE

REPAIR

Computer Repair, Upgrade, Virus Removal, Antivirus, Firewall, Data Recovery, Etc...

Computer Repair Services By Certified IT Professionals

Scanning, Printing, Browsing, Used & New Computers & Laptops & Accessories...



*Pro-Win Computer Services Ltd*
*919 Ellesmere Road, Suite # 302*
*Scarborough, M1P 2W7.*
*Tp: 647-3405568/ 416-8797489*
*(Kennedy & Ellesmere)(10am-8pm/Sun-4 pm)*

# 800 விக்கெட் வீழ்த்தி உலக சாதனை

## விளையாட்டுத் தகவல்கள் 287

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 800 விக்கெட் வீழ்த்தி உலக சாதனை படைத்தார்.

தனது கடைசி டெஸ்ட் போட்டியில் உலக சாதனை மற்றும் வெற்றியுடன் ஓய்வுபெற்றார் முரளீதரன். காலேயில் நடைபெற்ற இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டத்துடன் ஓய்வு பெறுவதாக முரளீதரன் சமீபத்தில் அறிவித்தார்.

ஏற்கெனவே 132 ஆட்டங்களில் விளையாடி 792 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார் முரளீதரன். கடைசி டெஸ்டில் 800 விக்கெட்டுகளை வீழ்த்தியாக வேண்டும் என்ற எண்ணத்தோடு கடும் பயிற்சியை மேற்கொண்டார். தான் விளையாடிய காலத்தில் மிகச்சிறந்த பேட்ஸ்மேன்கள் சச்சின் டெண்டுல்கரும், பிரையன் லாராவும் என்று முரளீதரன் கூறியிருந்தார். மேலும் தனது கடைசி டெஸ்டில் டெண்டுல்கருக்கு எதிராக பந்து வீசுவது மிகவும் மகிழ்ச்சியான விடயம் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் ஜாம்பவான் சச்சினை எல்.பி.டபிள்யூ முறையில் வீழ்த்தி 793-வது விக்கெட்டை வீழ்த்தினார். சச்சினை ஆட்டமிழக்கச் செய்தது அவருக்கு அதிக மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி 798 விக்கெட்டுகளை எட்டினார். இந்தியா பாலோ ஆன் பெற்றதால் தொடர்ந்து பேட் செய்தது. இந்த வாய்ப்பை பயன்படுத்திய முரளீதரன், யுவராஜ் சிங்கை வீழ்த்தி 799-வது விக்கெட்டை எட்டினார். இந்தியாவின் கடைசி விக்கெட்டான ஓஜா-இஷாந்த் சர்மா விளையாடியபோது, 800-ஐ எட்டுவாரா முரளீதரன் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களின் மனதில் தாண்டவமாடியது. 115-வது ஓவரை வீசிய முரளீதரன், ஓஜாவை ஆட்டமிழக்கச் செய்து, 800 விக்கெட்டை வீழ்த்தி உலக சாதனை படைத்ததோடு, இந்தியாவின் ஆட்டத்தையும் முடிவுக்கு கொண்டு வந்தார்.

கடைசி ஆட்டத்தில் வெற்றியோடு ஓய்வுபெறும் வாய்ப்பு கிரிக்கெட்டில் ஜாம்பவான்களாகத் திகழ்ந்த எல்லோருக்கும் கிடைத்ததில்லை. ஆனால் அந்தப் பெருமை சுழற்பந்து ஜாம்பவான் முரளீதரனுக்கு கிடைத்தது பெருமைக்குரியது.

சாதனை: 133 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 800 விக்கெட்டுகளை வீழ்த்தி யுள்ளார் முரளீதரன். டெஸ்ட் போட்டிகளில் 22 முறை 10 விக்கெட்டுகளையும், ஒரு இன்னிங்ஸில் 67 முறை 5 விக்கெட்டுகளை யும் வீழ்த்தியுள்ளார். 2002-ம் ஆண்டு ஜிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 51 ரன்களை விட்டுக்கொடுத்து 9 விக்கெட்டுகளை வீழ்த்தியதே இவரது சிறந்த பந்து வீச்சாகும்.
டெஸ்ட் போட்டிகளில் 11 முறை தொடர்நாயகன் விருதையும், 19 முறை ஆட்டநாயகன் விருதையும் வென்றுள்ளார்.




இந்தியாவுக்கு எதிராக 22 போட்டிகளில் விளையாடி 105 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் ஒரு நாட்டுக்கு எதிராக 100 விக்கெட் வீழ்த்திய இரண்டாவது வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். இதற்கு முன்னதாக ஆஸ்திரேலிய வீரர் வார்னே இச்சாதனையை படைத்துள்ளார்.

இலங்கை வெற்றி: லட்சுமண் ஆட்டத்தால் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தது இந்தியா

800-வது விக்கெட்டை வீழ்த்தியதை நடுவரிடம் உறுதி செய்கிறார் முரளீதரன்.
காலே, ஜுலை 22: இந்திய, இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையே தொடங்கிய இந்த ஆட்டத்தில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 520 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. ஆட்டம் மழையால் கைவிடப்பட்ட நிலையில் தனது முதல் இன்னிங்ஸ் துவக்கிய இந்தியா ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 140 ரன் எடுத்திருந்தது. இந்நிலையில் முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இந்தியா 276 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து ஃபாலோ ஆன் ஆனது.

2-வது இன்னிங்ஸ்: இரண்டாவது இன்னிங்ஸில் துவக்க ஆட்டக்காரர்களாக கம்பீரும் சேவாக்கும் களமிறங்கினர். ஆட்டத்தில் கம்பீர், சேவாக், திராவிட், லட்சுமண், டெண்டுல்கர், யுவராஜ் ஆகியோர் ஆட்டமிழந்தனர். இந்நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது இந்தியா. ஆட்டத்தில் முதலில் கேப்டன் தோனியும் லட்சுமணும் ஜோடி சேர்ந்து களமிறங்கினர். 4 ரன்கள் மட்டுமே எடுத்த நிலையில் மலிங்காவின் பந்து வீச்சில் பெவி லியன் திரும்பினார் தோனி.

அடுத்து களமிறங்கிய ஹர்பஜன் சிங் 8 ரன்களுக்கு முத்தையா முரளீதரனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து மிதுன் 25 ரன்களுக்கு மலிங்காவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இஷாந்த் சர்மாவும் ஓஜாவும் இணைந்து ஆடிக்கொண்டிருந்த போது ஓஜா 13 ரன்கள் எடுத்திருந்த நிலையில் முரளீதரனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்ததன் மூலம் இந்தியா தனது கடைசி விக்கெட்டையும் இழந்தது. இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் 338 ரன் எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இஷாந்த் சர்மா ஆட்டமிழக்காமல் 31 ரன்களுடன் இருந்தார்.

இலங்கை 2-வது இன்னிங்ஸ்: இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 276 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 338 ரன்களும் எடுத்து மொத்தம் 614 ரன் எடுத்திருந்தது. இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 520 ரன் எடுத்திருந்த நிலையில், 95 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தனது 2-வது இன்னிங்ஸை துவக்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக பரனவிதனவும் தில்ஷனும் களமிறங்கினர். தொடக்கம் முதலே அபாரமாக விளையாடினார் தில்ஷன். 42 பந்துகளுக்கு 68 ரன் குவித்தார். 6 பந்துகளை பவுண்டரிக்கு விரட்டினார். பரனவிதன நிலைத்து நின்று விளையாடினார். அவர் 42 பந்துகளுக்கு 23 ரன் எடுத்தார். 4 பந்துகளை பவுண்டரிக்கு விரட்டினார். இலங்கை அணியின் அசத்தலான தொடக்க ஆட்டத்தால் வெற்றி இலக்கான 95 ரன்களை 14.1 ஓவர்களிலேயே எளிதாக எட்டியது.

முரளீதரன், மலிங்கா அபாரம்: தனது அபாரமான பந்து வீச்சின் மூலம் முதல் இன்னிங்ஸில் இந்திய அணியின் 2 விக்கெட்டுகளையும் இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார் மலிங்கா. முரளீதரன் முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளையும் 2-வது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தியதன் மூலம் தனது கடைசி டெஸ்டில் மொத்தம் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி தன் இலக்கான 800-ஐ அடைந்தார்.

### தமிழர்களுக்குப் பெருமை

டெஸ்ட் கிரிக்கெட்டில் சாதனை படைத்துள்ள முரளீதரன் ஒரு தமிழர் என்பதில் தமிழர்கள் அனைவருக்குமே பெருமைதான். முரளீதரனின் தாத்தா பெரியசாமி சின்னசாமி 1920-ல் தேயிலை தோட்டத்தில் வேலை பார்ப்பதற்காக தமிழகத்தில் இருந்து இலங்கை சென்றார். பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் தாயகம் திரும்பி திருச்சியில் குடியேறினார். ஆனால் முரளீதரனின் தந்தை முத்தையாவும் அவரது சகோதரர்களும் இலங்கையிலேயே தங்கிவிட்டனர். இந்த நிலையில் 2005-ம் ஆண்டு சென்னை மலர் மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் எஸ். ராமமூர்த்தியின் மகள் மதிமலரை, முரளீதரன் மணந்தார். முரளீதரன்-மதிமலர் தம்பதிக்கு 4 வயதில் நரேன் என்ற மகன் உள்ளார்.

### நிதானமான ஆட்டம்

முதல் இன்னிங்ஸில் ஃபாலோ ஆன் ஆன இந்தியா இரண்டாவது இன்னிங்ஸின் முதல் நாளான அடுத்தடுத்து 5 விக்கெட்டுகளை இழந்து 181 ரன் என்ற நிலையில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க போராடியது. இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 63 ரன் தேவை என்ற நிலையில் ஆட்டத்தை தொடர்ந்த இந்தியா லட்சுணனின் நிதானமான ஆட்டத்தால் இன்னிங்ஸ் தோல்வியில் இருந்து தப்பியது.

### சுருக்கமான ஸ்கோர்

இலங்கை:- முதல் இன்னிங்ஸ் - 520.ஃ8வி டிக்ளேர். இரண்டாவது இன்னிங்ஸ்- 96-0வி (பரனவிதன 23*, தில்ஷன் 70*).

இந்தியா- முதல் இன்னிங்ஸ் - 276, 2-வது இன்னிங்ஸ் 338 (சேவாக் 31, திராவிட் 44, சச்சின் 84, லட்சுமண் 69, யுவராஜ் 5, தோனி 4, ஹர்பஜன் 8, மிதுன் 25, இஷாந்த் சர்மா 31*, ஓஜா 13, மலிங்கா 5வி-50, முரளிதரன் 3வி-128, வெலேகெடேரா 1வி-43).

### டெஸ்ட் தரவரிசை : சேவாக், முரளி முதலிடத்தில்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் டெஸ்ட் பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் இந்திய அதிரடி ஆட்டக்காரர் வீரேந்திர சேவாக் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். காலியில் நடந்த இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியா



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - *416-286-2880*

# 2வது தடவை வட்டிவீதம் அதிகரிப்பு

ஒவ்வொருவருடமும் கனடிய மத்திய வங்கியின் அதன் ஆளுனரும் அவருடைய சகாக்களும் எட்டுத்தடவைகள் கூடுவர். வங்கியின் ஆளுனரும் அவருடைய சகாக்களும் சேர்ந்தது. எதிர்காலத்தில் கனடிய பொருளாதாரத்தின் நிலைப்பாட்டை நோக்கமாகவும், கருத்தாகவும் கொண்டு வட்டிவீதத்தை மாற்றம் செய்வதோ அல்லது எவ்விதமான முடிவு எடுப்பதோ சிறந்தது என தீர்மானித்து அதற்கேற்ப முடிவு எடுப்பதுடன், எதிர்கால பொருளாதார திசையைப்பற்றிய ஒரு அறிக்கையும் தருவார்கள். ஒவ்வொரு வருடத்திலும், ஜனவரி, மார்ச், ஏப்ரல், யூன், யூலை, செப்ரெம்பர், ஒக்ரோபர், டிசம்பர் ஆகிய மாதங்களில் வட்டிவீதம் சீர்செய்யப்படுவது இயல்பாகக் காணப்படு கின்றது. உலக பொருளாதாரத்தில் எதிர் பாராத நிகழ்வுகள் நடந்தால் அவசர (emergency) கூட்டம் நடக்கவும் வாய்ப்பு உண்டு.

2009 ஏப்ரல் மாதத்திலிருந்து கனடிய வட்டிவீதம் 0.25% வீதமாகவே இருந்து வந்தது. இந்த வருடத்தில் யூன் மாதம் 1ஆம் திகதி, முதல் தடவையாக ஒரு வருடத்திற்கு பிற்பாடு 0.25% இலிருந்து 0.5% ஆக அதிகரித்தது. இதன் விளைவாக முதன்மை வட்டிவீதமும் 2.25% இலிருந்து 2.50% ஆக அதிகரிக்கப்பட்டது. மேலும் யூலை 20ஆம் திகதியும் மேலும் 0.25% கனடிய ஆளுனர் திரு மார்க் கார்ணியினால் அதிகரிக்கப் பட்டது. இதனால் மத்தியவங்கி வட்டிவீதம் 0.75% ஆக காணப்படுகின்றது. இந்த வட்டிவீத அதிகரிப்பு சகலமட்டத்திலுள்ள பொருளாதார ஆய்வாளர்களால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று.

முதன்மை வட்டிவீதம் 2.75% ஆக நிதி நிறுவனங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மத்தியவங்கி வட்டிவீத அதிகரிப்பு இந்த வருடத்தின் முடிவில் 1.25% வரை அதிகரிக்கப்படலாம் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது?

வட்டிவீத அதிகரிப்பிற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. தொழில் புரிகின்ற கனடியர்களின் எண்ணிக்கை கடந்த பொருளாதார இறுக்கத்தில் (Recession) இழந்த தொழில்கள், யாவும் திருப்பி பெற்று விட்டார்கள். பணவீக்கம் அதிகரிக்க கூடிய எதிர்பார்ப்புகள் உள்ளதாகவும் இதனை கட்டுக்குள் கொண்டு வரவேண்டிய தேவை உள்ளதாகவும், தனிப்பட்ட வியாபார நிதி நிறுவனங்கள் அரசின் பண ஊக்குவிப்பினால் (Federal and Provincial Governments Stimulus Packages) சிறப்பாக செயல்படுவதாகவும், ஐரோப்பிய நாடுகளின் இறுக்கமான பொருளாதாரக் கொள்கையை தாமும் பின்பற்ற வேண்டி இருப்பதாகவும் இவ்வாறு முடிவு எடுத்ததாக அறியப்படுகின்றது.

இந்த முடிவு, ஏற்கனவே கனடிய வீட்டுச்சந்தையில் ஏற்பட்ட மந்த நிலைமை மேலும் ஆர்முடுகப்படுத்தலாம் என எதிர்பார்க்கலாம்.

சீனப்பொருளாதாரம் ஏற்கனவே மந்த நிலைமையை அடைந்துள்ளது. இத்துடன் கனடாவின் மிகப் பெரிய வியாபார - பொருளாதார சகாவாகிய (Partner) அமெரிக்காவின் பொருளாதாரம் இன்றும் மோசமான நிலைமையிலேயே காணப்படு கின்றது. இதனால் கனடிய பொருளாதாரம் பாதிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கலாம். இவ்வாறான நிலைமையிலும் திரு. மார்க் கார்ணி வட்டிவீதத்தை அதிகரித்துள்ளார். அத்துடன் ஜுலை 21, 2010 அல்லது அமெரிக்க ஆளுனர் பெனாக்கியின் கூற்றின்படி அமெரிக்க பொருளாதாரம் மிகவும் ஸ்தம்பித நிலையில் உள்ளதாகவும் தெரியப்படுகின்றது.

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட கனடிய பொருளாதார வளர்ச்சி மிகவும் மந்தமாகவே இருக்கும் என பொருளாதார ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளார்கள். இதற்கு உடனடி உதாரணமாக கனடிய ஆதன வியாபாரத்தில் ஏற்பட்ட மந்த நிலையைக் கொள்ளலாம்.

இந்த நிலைமை சிலகாலம் தொடரலாம். எனினும், எதிர்காலத்தில் கனடாவிலும், உலக நாடுகளிலும் ஏற்பட இருக்கும் பொருளாதார மாற்றங்களை எதிர்பார்த்து கனடிய பொருளாதாரத்தை சமநிலைப்படுத்த வட்டிவீத அதிகரிப்பு தேவை என்பதனை உறுதிப்படுத்தியுள்ள ஆளுனர் இந்த வருட முடிவுவிற்குள் மேலதிக அதிகரிப்புகளையும் எதிர்பார்க்கலாம் எனத் தெரிவுபடுத்தி யுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, ஆய்வாளர்கள் வருட இறுதியில் கூடிய வட்டிவீதம் 1.25% இலிருந்து 1.5% வரை அதிகரிக்கப்படலாம் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

இருந்தும், ஆய்வாளர்கள் கூறுவதுபோல 100% நிகழும் என எதிர்பார்க்கமுடியாது. எதிர்காலங்களில் நடக்கவிருக்கும் பொருளாதார ஏற்ற இறக்கங்களிற்கு ஏற்ப வட்டிவீதத்தின் திசையை காணலாம்.

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 324**


HomeLife GTA Realty Inc., Brokerage

HOMELIFE HIGHER STANDARDS

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng (Broker/Owner)

**BUSINESS FOR SALE $59,000**




HWY 401 & WESNEY - AJAX
Best location. Over $7,000 weekly sales + 2000 loto commision.
Very reasonable rent.
**DON'T MISS THIS CHANCE**

**HOUSE FOR SALE AURORA 649,000**



BAYVIEW & SPRINGFARM
4 Bedrooms,Walkout bsmt
5 Washrooms, double garage
Ceramic floor, Hardwood floor
Stove, dishwasher,exhaust fan,
All included

**HOUSE FOR SALE $639,000**



Spadina Ave/Lake Shore Blvd W
Brand New- Commercial/Residential Townhouse On 2 Levels.
Please Call For More Information.
Buyer To Verify Taxes, Maintenance & Measurements.

**SPACE FOR RENT**



MIDDLEFIELD & FINCH
Second Floor Unit In Gta Square Shopping Mall. Conveniet Location.
High Traffic Area & Underground Parking Available.

**LEASE $ 1,700**



Stevenson/Adelaide
Various Types Of Retail Use Allowed.
Established As Variety/ Convenience Store
With 2 Piece Washrooms.
Very Reasonable Rent That Includes Realty Taxes.

**CONDO FOR SALE $107,900**



SHEPPARED & NEILSON
2 B.rooms, 2 Washrooms.
Why Rent If You Can Own For Less Mone
Close to TTC, mall, library, hwy 401.
Stove, Fridge, B/I Dishwasher,
Parking, Locker

**HOUSE FOR SALE $539,900 SELAM/TAUNTON ROSSLAND**

Medallianbuilder Brick detached. 3626 Sq.feet. 5Years new. 4 Washrooms, laundry, kitchen, library doublegarage 2door.

**CONDO FOR SALE $139,000**



FINCH & WARDEN
2+1 Bedroom, 2 washrooms.
Close To Bridlewood Mall, TTC.
Fridge, Stove, Washer, Dryer,
All Elfs, Parking.
SOLD

**HOUSE FOR SALE $565,000**



BUR OAK & 9TH LINE
Popular 4 Br + Den, Madison Home In Greensborough Area, 2709 Sq Ft.
2nd Floor Den, Master Bedroom,
Convenient Location. Fridge, Stove, Washer, Dryer, Built-In Dishwasher, Cac, Cvac, Garag

**STORE FOR SALE 64,900 + STOCK**



HIGHWAY 401 & WESTNEY
Con/ Store In Good Area Of Ajax.
Lotto Commission And Atm Commission
Over $2000/Month. Steady Custumer Traffic.
All Chattels And Equipment As Is.

Independently Owned & Operated

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
*Cell: 613 850 9931*

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*

# வாழத்துடிக்கும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

முன் வைத்தார். இந்த ஆலோசனை சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தது. இதற்கு என்ன செய்வது? நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இது தொடர்பாக என்ன செய்யப்போகின்றது என்பது தெரியவில்லை.

இரண்டாவது நாள் பயணம் ஆரம்பத்தில் ஏமாற்றம் மிகுந்ததாக அமைந்திருந்தது. அது பல படிப்பினைகளை உணர்த்துவதாகவும், நடைமுறை நிலைமைகள் எவ்வளவு கசப்பானது என்பதைப் புரிய வைப்பதாகவும் இருந்தது. முதலில் செட்டிகுளம் மனிக்பாம் இடைத்தங்கல் முகாமுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை முழுமையாகப் பார்வையிடுவது, பின்னர் நேரமிருந்தால் வேறு இடங்களுக்குச் செல்வது என்பதே அன்றைய திட்டமாக இருந்தது.

நாடாளுமன்ற குழுவினர் மனிக்பாம் ஸோன் 4 எனப்படுகின்ற நாலாம் வலயத்திற்குச் சென்றபோது, நுழைவாயிலில் இருந்த இராணுவத்தினர் தமது பெரியவரிடம் சென்று கதைக்குமாறு கூறினார்கள். அங்கு சென்ற நாடாளுமன்ற மெய்க்காவலர்களிடம் உள்ளே செல்வதென்றால் மேலிடத்தில் இருந்து அனுமதி வரவேண்டும் எனக் கூறப்பட்டது. உடனடியாக குழுத்தலைவர் ஆர்.சம்பந்தன், உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எஸ்.சுமந்திரன் ஆகியோர் அந்த இராணுவ உயரதிகாரியைச் சந்திக்கச் சென்றார்கள். அவர்களுக்கும் அதே பதில்தான் - மேலிடத்தில் இருந்து அனுமதி வரவேண்டும். வந்தால் விடுவோம் என்றார்கள்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு குழுவாக வன்னிப்பிரதேசத்திற்கும், மனிக்பாம் முகாமுக்கும், தடுப்பு முகாம்களுக்கும் விஜயம் செய்யப்போவது பற்றி, ஜனாதிபதி செயலாளரிடம் தெரிவித்தபோது, நீங்கள் போகலாம். எந்தவிதத் தடையுமில்லை. ஆனால் நீங்கள் செல்கின்ற திகதிகளையும் இடங்களையும் எங்களுக்குத் தெரிவித்தால் நாங்கள் உரிய அதிகாரிகளுக்கு அறிவிப்போம் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனிடம் கூறியிருந்தார். இதற்கமைய தமது விஜயம் பற்றிய விபரங்களைத் திகதிகளுடன் எழுத்து மூலமாக ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவித்திருந்ததாக சம்பந்தன் தெரிவித்தார்.



ஆயினும் மனிக்பாம் முகாம் நுழைவாயிலில் நிலைமை வேறாக இருந்தது. அங்கிருந்தபடியே ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுடன் ஆர்.சம்பந்தன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். உரிய இடத்தில் தொடர்புகொண்டு முகாமுக்குள் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக அவர் உறுதியளித்து சில நிமிடங்கள் அவகாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு லலித் வீரதுங்க தெரிவித்ததாக சம்பந்தன் தெரிவித்தார். சிறிது நேரத்தில் மீண்டும் தொடர்பு கொண்டபோது, தான் ஒரு கூட்டத்தில் இருப்பதாகவும் அரை மணித்தியாலத்தில் மீண்டும் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்தாராம்.

ஆனால் மீண்டும் சம்பந்தன் அவருடன் தொடர்புகொள்ள முயன்றபோது அது பலனளிக்கவில்லை. அரை மணித்தியாலம் ஒரு மணித்தியாலமாகியது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு மனிக்பாம் நாலாம் வலயத்தின் நுழைவாயிலில் காவலிருந்தார்கள். நேரம்போனதே ஒழிய காரியம் நடைபெறவில்லை. அங்கிருந்த இராணுவ அதிகாரிகள் தமது கடமையையே தாங்கள் செய்வதாகவும், பாதுகாப்பு அமைச்சின் உயரிடத்தில் இருந்து அனுமதியில்லாமல் எதையும் செய்ய முடியாத நிலையில் தாங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இதனையடுத்து, நாடாளுமன்ற குழுவினர் அங்கிருந்து மன்னார் மடு பிரதேசத்திற்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிடுவது என தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அரசாங்கம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதாகவே பொதுவாக குறை கூறப்படுகின்றது. ஆனால் மனிக்பாம் முகாமுக்குள் செல்வதற்குரிய அனுமதி மறுக்கப்பட்டதன் மூலம் அந்தக் கூற்று எவ்வளவு தூரம் உண்மையானது என்பதைத் தெளிவுபடுத்துவதாக இருந்தது.

விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டார்கள் என அரசாங்கம் கூறுகின்றது. அவர்களின் பிடியில் இருந்து இராணுவம் பொதுமக்களை மீட்டு மறுவாழ்வு அளித்து வருவதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்றது. யுத்தம் முடிந்து ஒரு வருடமாகின்றது. மீள்குடியேற்றத்திற்காக மனிக்பாம் முகாமில் இருந்து மக்கள் சென்று கொண்டிருக்கின்றார்கள். அங்கு எஞ்சியுள்ள மக்களும் அனுமதி பெற்று வெளியில் சென்று வருவதற்கான நடைமுறையும் இருக்கின்றது. பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு முகாமில் இருந்தவர்கள் வாக்களிப்பதற்கு அனைத்து வசதிகளையும் செய்ததாகவும், அவர்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் அளவுக்கு நிலைமைகள் முன்னேறியிருப்பதாகவும் அரசாங்கம் பெருமை கொள்கின்றது. ஆனால் அந்த மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற பிரதிநிதிகள் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாமுக்குள் செல்வதற்கு அனுமதி இல்லை என்றும் அரசாங்கத்தின் பாதுகாப்பு தரப்பு உறுதியாக மறுத்திருக்கின்றது.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதும், தேர்தலின் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அத்தகைய ஒரு பேச்சுவார்த்தைக்காக அரச தரப்பிலிருந்து அழைப்பு விடுவதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் தங்கள் பங்குக்கு அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருப்பதாகக் கூறியிருந்தார்கள். இந்த நிலைமையில் இந்திய விஜயத்தின் பின்னர் இந்தப் பேச்சுக்கள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் சூழலில் தான் இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்குச் செல்வதற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றிருக்கின்றது. அரசுக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையிலான எதிர்கால சுமுகமான உறவு நிலை தொடர்பில் இந்த விடயம் பல்வேறு சந்தேகங்களை தமிழர் தரப்பில் ஏற்படுத்தியிருக்கின்றது.

மனிக்பாம் முகாமுக்குள் சென்று அங்குள்ள மக்களைச் சந்திப்பதற்கும் அவர்களின் நிலைமைகளைப் பார்வையிட முடியாமல் போய்விட்டதே என்ற ஏமாற்ற உணர்வோடுதான் மடுபிரதேசத்தை நோக்கி நாடாளுமன்ற குழு புறப்பட்டது.

# 800 விக்கெட்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

தோல்வி அடைந்தாலும் அதில் சதம் அடித்ததால் சேவாக் ஹநம்பர் ஒன்’’ இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

2வது இடம் வகிக்கும் இலங்கை அணித் தலைவர் சங்கக்கராவுக்கும் அவருக்கும் 14 புள்ளிகள் இடைவெளி உள்ளன.

2வது இன்னிங்சில் 84 ரன்கள் விளாசிய இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் ஒரு இடம் முன்னேறி 7வது இடத்தை பிடித்துள்ளார். அதேசமயம் காலி டெஸ்டில் ஜொலிக்காத மற்ற இந்திய பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் வீழ்ச்சி கண்டுள்ளனர்.

கவுதம் கம்பீர் 6 இடங்கள் சரிந்து 10வது இடத்திற்கும், வி.வி.எஸ்.லட்சுமண் 2 இடங்கள் குறைந்து 15வது இடத்திற்கும், ராகுல் டிராவிட் ஒரு இடம் குறைந்து 18வது இடத்திற்கும், தோனி 14 இடங்கள் சரிந்து 40வது இடத்திற்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

காலி போட்டியில் 8 விக்கெட்டுகள் கைப்பற்றி அதன் மூலம் 800 விக்கெட் உலக சாதனையை எட்டிய இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன், டெஸ்ட் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் 3வது இடத்துடன் ஓய்வு பெற்றிருக்கிறார். அவருக்கு முன்பாக முதல் 2 இடங்களில் முறையே தென் ஆப்பிரிக்காவின் ஸ்டெயின், பாகிஸ்தானின் முகமது ஆசிப் ஆகியோர் உள்ளனர்.

முரளிதரன், பந்து வீச்சாளர் தரவரிசையில் நம்பர் ஒன் இடம் வகித்ததில் சாதனை படைத்தவர் ஆவார். அவர் 2002ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் முறையாக முதலிடத்திற்கு முன்னேறி இருந்தார்.

அதன் பிறகு மொத்தம் 214 டெஸ்ட் போட்டிகளின் போது நம்பர் ஒன் இடத்தில் இருந்து சாதனை படைத்து இருக்கிறார். அதாவது 1,711 நாட்கள் அவர் முதலிடத்தை ஆக்கிரமித்து இருந்தார்.

முரளிதரனுக்கு அடுத்து அதிகபட்சமாக ஆஸ்ட்ரேலிய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத், 174 டெஸ்ட்களின் போது முதலிடத்தில் இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆஸி.க்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் வரலாற்று வெற்றி

அவுஸ்திரேலியாவுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றியை தனதாக்கிக்கொண்டுள்ளது. கடந்த 15 வருடங்களில் பாகிஸ்தான் அணி டெஸ்ட் போட்டியொன்றில் வெற்றி பெற்றமை இதுவே முதல் தடவையாகும். இங்கிலாந்தின் லீட்ஸ் நகரின் ஹெடிங்லே மைதானத்தில் கடந்த ஆரம்பமான இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 88 ஓட்டங்களை மற்றும் பெற்றது.

பதிலுக்கு துடுப்பாடிய பாகிஸ்தான் அணி தனது முதல் இனிங்ஸில் 258 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலியா அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 349 ஓட்டங்களை பெற்றது. 40 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் பதிலுக்கு துடுப்பாடிய பாதிஸ்தான் அணி வெற்றிவாகை சூடியது இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட இத்தொடர் 1-1 விகிதத்தில் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

## தனது 7 ஆவது இரட்டைச் சதத்தை கடந்தார் சங்ககார

கொழும்பு கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக் கேப்டன் சங்கக்காரா தனது இரட்டைச் சதத்தை பூர்த்தி செய்து 219 ரன்கள் எடுத்து சேவாக் பந்தில் ஆட்டமிழந்தார். 10 ஓவர்களேயாகியுள்ள புதிய பந்தை மிதுன் வீசியபோது 3 பவுண்டரிகளுடன் துவங்கினார் சங்கா. ஆனால் இந்தப் பிட்சில் ஒன்றும் இல்லை என்று தோனி 2-வது ஸ்லிப்பை எடுத்தவுடன் அந்த இடத்தில் கேட்ச் பிடிக்கும் உயரத்தில் ஒரு ஷாட் சென்றது. ஓஜாவின் ஒரே ஓவரில் 4 பவுண்டரிகளை அடித்து 199 ரன்கள் வந்த சங்கா அதன் பிறகு தன் 7-வது இரட்டை சதத்தை எடுத்து முடித்தார்.

## டெஸ்ட் தரவரிசை: இந்திய அணி தொடர்ந்து முதலிடம்

இலங்கைக்கு எதிரான காலேயில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்தாலும் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது. 124 புள்ளிகளுடன் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது. 120 புள்ளிகளுடன் தென் ஆப்பிரிக்கா 2வது இடத்திலும், 119 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா 3வது இடத்திலும் உள்ளன.

115 புள்ளிகளுடன் இலங்கை அணி 4வது இடத்திலும், 108 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி 5வது இடத்திலும், 6வது இடத்தில் பாகிஸ்தானும், 7வது இடத்தில் நியூஸிலாந்து அணியும், 8வது இடத்தில் மேற்கிந்திய தீவு அணியும், 9வது இடத்தில் வங்கதேச அணியும் உள்ளன. இலங்கைக்கு எதிராக இன்னொரு டெஸ்ட் பேட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்து தொடரை இழந்தால் இந்தியா நம்பர் 1 இடத்தை இழக்கும் அபாயம் உள்ளது.

# வாழ்க்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Markham/Lawrence**



**$319,900**
Detached Bungalow, Bed rooms 3+2, Washrooms 2, Lovingly Maintained By Original Owner, Very Clean, Seperate Side Entrance, Many Updates

**Kennedy/Denison**



**$339,000**
Link 2 Storey Bed rooms 3+2, . Washrooms 2, Steps To Schools,Shops And Malls,Fresh Paint,Interlock Driveway

**Midland/Lawrence**



**$344,900**
Townhouse 3 Story Bed rooms 3+1, Washroom 2, Just 3 Years Newly Built Townhouse In The Heart Of Scarborough

**9th Line/14th Avenue**



**$379,000**
Semi Detached 2 story, Bed rooms 3 Washrooms 3, Three Years Old, Thousands Of Upgrades Include Hardwood Floor In Living And Dining

**Hooverpark- 9th Line**



**$393,500**
Detached 2 Story Bedrooms 3, Washrooms 3, Brand New Home Under Construction, Oak Staircase, 10 Min Walk To Go Station!

**9th Line & 19**



**$399,800**
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3, 3 Years New, Gas Fireplace, Lots Of Upgrades, Close To Shopping, Park, Transits,

**14th Av & Brimley**



**$399,900**
Detached 2 Story, Bed rooms 4+2 Washromss 4, Close To Schools,Parks,Shopping Centres,Highway 7 & 407, 4 Generous Size Bedrooms

**Markham/Denison**



**$419,900**
Link 2 Story, Bed rooms 4 Washrooms 3, Home In High Demand Location. Spacious Eat-In Kitchen, Close To Highways, Schools, Shopping

**Hoover Park/9th Line**



**$424,800**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Custom Model Kitchen, Stainless Steel Appliances, Large Upper Level Family Room

**Middlefield/Denison**



**$429,900**
Link 2 story, Bed rooms 4+2 Washrooms 4, Well Maintained, 2000 Sq Ft Plus In Law Apt With Sep Entrance, Newer Furnace, Newer Cac

**Buroak/ 9th Line**



**$436,000**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, Hardwood Floor Throughout, Built In Appliances!, Fully Landscaped Yard

**Steeles Ave / Staines**



**$440,000**
Detached 2 Story, Bed rooms 4, Washrooms 3, Home Located In High Demand Area, Steps To T.T.C., Schools, Shops, Parks And Golf

**Mccowan & Elson**



**$469,000**
Detached 2 Story, Bedrooms 4+2, Washrooms 4, Finished Basement Apartment With Separate Entrance, Close To Hischool, Elementary School,

**9th Line & Hoover Park Dr.**



**$469,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Years New All Brick Detached House, Very Well Maintained Like Brand New

**Bur Oak & MarkhamOak**



**$469,900**
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3, 1 Yrs New, Lots Of Upgraded, Minute To Mount Joy Go Station & Shopping Centre,

**Markham/Castlemore**



**$538,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4, 1 Year New, Approx. 2300Sq.Ft, Hardwood Floor In Family,Living & Dining Rooms

**Major Mac/Mccowan**



**$559,800**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 Upgraded Kitchen Cabinet. Brand New Granite Countertop, Walk To Schools,Parks

**1Woodbine/Major Mackenzie**



**$699,000**
Detached 2 Story, Bedrooms 5 Washrooms 4, Sun Filled Home, Mesmerizing Huge Kitchen, Centre Island With Granite Countertop

**Steeles And 9Nth**



**$699,000**
Detached 2 Story Bed rooms 4, Washrooms 4, 3250 Sq Ft, Walk Out Bsmt & Enlarged Deck, Hardwood & Granite Flooring Throughout

**Taunton And Audley**



**$369,900**
Detached 2 Story Bed rooms 4, Washrooms 3, 5 Year Old, Spacious Bedrooms With Walk In Closets, Fenced Yard

**Sandalwood/Queenmary**



**$369,900**
Detached 2 Story. Bed rooms 3+1, Washrooms 4, Separate Entrance To A Finished Basement With 1 Bedroom

**Sales of Business**



**$1,985,000**
sale of business with property New Look Petro Canada Gas Station, Convenience Store With Lotto, Country Style

**Sales of Business**



**$475,000**
sale of business with property Esso Gas Station With Canopy, Gas, Diesel And Convenience Store, Lots Of Extra Land

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham, ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# அற்றைத் திங்கள்

நாள்: 01.12.2009 செவ்வாய்க்கிழமை
இடம்: கொழும்புத் தமிழ்ச் சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபம்
நிகழ்வு: அற்றைத்திங்கள்
ஏற்பாடு: கொழும்புத் தமிழ்ச் சங்கம்
தலைமை: பேராசிரியர் சோ. சந்திரசேகரன், தலைவர்: கொழும்புத் தமிழ்ச் சங்கம்



மதிப்புக்குரிய தலைவர் அவர்களே! பொதுச் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களே! பெரியோர்களே! நண்பர்களே!

இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைத்த கொழும்புத் தமிழ்ச் சங்கத்து இலக்கியப் பணிக் குழுவில் உள்ள பெருமக்களுக்கும் பொதுச் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கந்தசாமி என்ற பெயர் எனது நண்பர் தமிழ்வேள் கந்தசுவாமி அவர்களை நினைவு படுத்துகின்றது. நெடுங்காலமாக இந்தச் சங்கத்தின் செயலாளராக இருந்து அதனை வளர்த்தெடுத்த பெருமை அவருக்கும் உரியது. தனித்துவமான சிந்தனை யுடையவர். தமிழ் மரபைப் பேணவேண்டும் என்பதில் ஆர்வங்கொண்டு பல செயல் திட்டங்களில் துணிந்து இறங்கியவர். அவருடைய சிந்தனைகளுக்கும் செயல்திட்டங்களுக்கும் கனடாவில் நான் ஆசிரியராக இருக்கும் ஆத்மஜோதி இதழ்களில் அவ்வப்போது முக்கியத்துவம் அளித்து வந்திருக்கின்றேன். அவரது மறைவு குறித்து அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ஆத்மஜோதி இதழ் ஒன்றை அவரது நினைவாக வெளியிட்டு மிருக்கின்றேன். அந்த நண்பரை இந்த நேரத்திலே நினைவுகூருகின்றேன்.

இந்த நிகழ்வு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறுவது ஒரு சிறப்பு. திரு. பொ. சங்கரப்பிள்ளை அவர்கள் இச் சங்கத்தின் தலைவராக இருந்தவர். அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தவர். இப்பொழுதும் அவரது பிள்ளைகள் அவரது பெயரால் சங்கத்துக்கு வேண்டிய உதவிகளை அவ்வப்போது செய்துவருவதாக அறிகிறேன். அந்தப் பெருமகனின் தொண்டுகளையும் இந்த வேளையிலே நினைத்துப் பார்க்கின்றேன்.

வெள்ளிக்கிழமைகளிலேதான் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவது வழக்கம் என்று அறிகிறேன். எனது வசதியைப் பொறுத்து இதனை இன்று ஒழுங்குசெய்த பொதுச் செயலாளர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் அவர்கள் என்னைப்பற்றிப் பேசிய அழகான தமிழுக்கும் நன்றி சொல்கின்றேன். என்னைப்பற்றி அறிமுகப்படுத்துகையில் ஒரு விடயத்தை அவர் குறிப்பிடுவார் என்று எதிர் பார்த்தேன். அவர் அதனைச் செய்யவில்லை. அவர் என்னைப் படிப்பித்த ஆசிரியர். கொழும்பில் நாடகக் கல்விச் சான்றிதழ் கற்கைநெறியில் நாங்கள் ஈடுபட்டிருந்த காலத்தில் அவர் எங்களுக்கு ஒப்பீட்டுக் கல்வியில் விரிவுரையாளராக இருந்தார். அடக்கம் கருதிப்போலும் அவர் அதனைக் குறிப்பிடவில்லை.

அக்காலத்தில் அவர் அழகான ஒரு கட்டிளம் காளை. இப்பொழுதும் அழகிலே அவர் குறைந்தவரல்லர். அவரது விரிவுரைகளில் அறிவு மட்டுமன்றி அழகான தமிழும் எங்களுக்கு இன்பஞ் செய்வதாக இருக்கும். அவருடைய தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அற்றைத் திங்கள் நிகழ்ச்சியில் தகைசான்ற மூத்த படைப்பாளர் ஒருவர் தான் பிறந்து வளர்ந்த பண்பாட்டுச் சூழல், தனது படைப்பு முயற்சிகள் மற்றும் கலை இலக்கிய நட்பு எழுகைகள் பற்றிச் சில கருத்துக்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது வழக்கம் என்று பொதுச் செயலாளர் என்னை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்தபொழுது விளக்கம் தந்திருந்தார். கேட்டபொழுது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால் ஒருவர் தன்னைப்பற்றிப் பேசுவதைப் போன்ற இலகுவான விடயம் வேறொன்றும் இருக்கமுடியாது அல்லவா? அதுவும் தமிழன் என்றால் கேட்கவா வேண்டும்?

ஆனால் நான் கொஞ்சம் அடக்கமான பேர்வழி. என்னைப்பற்றி அதிகம் பேசாதவன். அதிகம் பேசாத தமிழனைக் கலைஞர் இளையபாரதி அவர்கள் தனது கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியில் 52 வாரங்கள் பேசவைத்தார் - எனது வரலாற்றைச் சொல்லவைத்தார். அதனை சட்டத்தரணி மனுவல் யேசுதாசன் அவர்களின் தலைமையில் நடந்த எனது பவளவிழாவின்போது நூலாகவும் வெளியிட்டார்கள். 52 வாரங்கள் கூறியதை எனக்குத் தரப்பட்டுள்ள ஒருமணி நேரத்துக்குள் சொல்லிமுடிக்க முற்படுகின்றேன்.

தென்மராட்சியின் தலைநகரம் சாவகச்சேரி. அதனைச் சேர்ந்த நுணாவிற் கிராமத்தில் வேலு(வேலுப்பிள்ளை) விநாயகருக்கும் அவரது மனைவி சின்னம்மாவுக்கும் மூன்றாவது குழந்தையாக 1933ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ஆம் திகதி பிறந்தேன். வேலு விநாயகர் மட்டுவில் தெற்கைச் சேர்ந்தவர். சின்னம்மா நுணாவிலிலேயே பிறந்து வளர்ந்தவர். இவரது பெற்றோர் தம்பியையா - சின்னப்பிள்ளை தம்பதிகள்.

எனது பெற்றோருக்கு முதல் இரண்டும் ஆண் பிள்ளைகள். அதனால் மூன்றாவதாக ஒரு பெண் குழந்தையைத்தான் அவர்கள் எதிர்பார்த்திருப்பர். மூன்றாவது மட்டுமல்ல நான்காவதும் அவர்களுக்கு ஆண்குழந்தைதான். கணபதிப்பிள்ளை என்று பெயர். நாங்கள் சிறு வயதிலேயே பெற்றோரை இழந்துவிட்டோம். மூத்தவர்களான பசுபதியும் மார்க்கண்டுவும் இளவயதிலேயே தொழில் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள். தாய் மாமன் தம்பியையா தம்பாப்பிள்ளை என்னையும் தம்பியையும் வளர்த்து வந்தார்.

நான் சிறுவயதிற் சரியான குழப்படி. அதனால் மாமனார் கொஞ்சம் கட்டுப்பாட்டுடனேயே வளர்த்தார். அவருக்கு வளர்ந்து பெரியவர்களான இரு பிள்ளைகள். அதனால் மாமியும் மாமாவும் தாய்தந்தை இல்லாப் பிள்ளைகள் என்று எங்களில் அதிக கவனம் செலுத்தினார்கள்.

நான் குழப்படிப் பெடியன் என்று பெயர் வாங்கிவிட்டபடியால் தம்பியைத்தான் முதலில் ஆங்கிலப் பாடசாலைக்கு - சாவகச்சேரி இறிபேக் கல்லூரிக்கு அனுப்பினார்கள். நான் நுணாவிற் கணேச வித்தியாலையில் ஏழாம் வகுப்புவரை தொடர்ந்து படித்தேன். அது தமிழில் நல்ல அடிப்படை அறிவுபெற எனக்கு உதவி செய்ததென்றே சொல்ல வேண்டும். அங்குதான் நீர் அருந்துதல், பால் பருகுதல், பழம் சுவைத்தல், கள்ளுக் குடித்தல், தாம்பூலம் தரித்தல் போன்ற சொற் பொருத்தங்களை எல்லாம் பாடமாக்கினேன். மாணவர் களைக்கொண்டு பாடமாக்குவித்தல் அக்காலத்துக் கற்பித்தல் முறைகளில் ஒன்று. எழுவாய் பயனிலைகளை முறையாக வைத்து வாக்கியங்களைத் திருத்தமாக எழுதக் கற்றுக்கொண்டேன். அந்தக் காலத்துத் தமிழ் அந்தமாதிரி. இக்காலத்தில் படித்தவர்கூட வசனங்களைச் சரியாக எழுதுவதில்லை. பெயருக்கேற்ற வினைச்சொற் பொருத்தப் பாடுகளில் அக்கறை செலுத்துபவரும் மிகவும் குறைவு. பருகுதலைக் குடித்தல் என்றும் உண்ணுதலைத் தின்னனுதல் என்றும் பேசுகின்ற, எழுதுகின்ற காலமிது.

1945ல் ஏழாம் வகுப்பில் சித்திபெற்றேன். கணேச வித்தியாசாலையில் ஏழாம் வகுப்புக்குமேல் படிக்கமுடியாது. தலைமையாசிரியர் திரு. சிவம் கந்தையாவி



கவிஞர் வி. கந்தவனம்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# தொழில் செய்யும் இடத்தில் ஒரு அநியாயம்! அதற்கு எதிராக நீதி தேவதையின் தீர்ப்பு!

## கனடிய தகவல் தொடர் 130

கடந்த யூலை 13. 2010!

தொழில் செய்த இடத்தில் ஒரு பெண்ணுக்கு நடந்த அநியாயம் தொடர்பான விசாரணையின் தீர்ப்பு கனடாவின் சகல ஆங்கில தொடர்பு சாதனங்களிலும் பரபரப்பான ஒரு செய்தியாக வெளியாகியிருந்தது.

தொழில் செய்யும் இடத்தில் தொழில்துறை நிர்வாகத்தினால் தமக்கு நடந்த ஒரு அநியாயத்தினை கண்ணீருடன் அரச நீதித்துறையின் பார்வைக்கு எடுத்துச் சென்றார்.

திருமதி. எல்சா ரொறீஜோன் (Ms. Elsa Torrejon) என்ற தமது இரு பிள்ளைகளையும் தனித்து நின்று (Single Mother) வளர்த்துக்கொண்டு ரொறொன்ரோவில் ஒரு தொடர்மாடி கட்டிடத்தில் வசித்து வரும் 52 வயதான அந்த பெண்மணி! "வெஸ்ரேன் சொத்துக்கள் முகாமைத்துவ கூட்டுஸ்தாபனம்" (Weston Property Management Corporation) என்ற தொடர்மாடி கட்டிடங்களை நிர்வகிக்கும் இக் கம்பனி ஒன்றின் அலுவலகத்தில் சில காலமாக ஒரு மணித்தியாலத்திற்கு $12 டொலர் என்ற சம்பள உடன்படிக்கையில் பணிபுரிந்து வந்த இந்த பெண்மணிக்கு கடந்த ஜனவரி 2009 இல் "மார்பக புற்றுநோய்" (Breast Cancer) ஏற்பட்டு சில நாட்கள் அதற்குரிய சிகிச்சைகளுக்கு உட்பட்டு அந்த சிகிச்சையில் தேறியிருந்தார். தம்முடைய சிகிச்சை நாட்களில் லீவுகள் எடுக்க வேண்டியிருந்ததால் தமக்கு ஏற்பட்ட நிலைமை பற்றி எந்தவிதமான ஒளிவு மறைவுமின்றி தாம் தொழில் புரியும் கம்பனிக்கு நேர்மையாக அறிவித்திருந்தார்.

சிகிச்சையில் தேறிய பின்பு வழமைபோல் தொழில் இடத்திற்கு சென்ற போது நோய்வாய்ப்பட்டவர் என்ற காரணத்தினால் கம்பனி எழுத்து மூலம் அறிவித்து அவரை தொழிலிருந்து நிறுத்தியிருந்தது.

இதுவே இங்கு நடந்த ஒரு நியாயமற்ற செயல்! பேசாமல் சும்மா இருந்தாரா? இந்த பெண்மணி! எழுத்து மூலம் வழங்கிய கடிதமே ஆதாரமாக அந்த பெண்ணுக்கு அமைந்து விட்டது. இந்த அநியாயமான செயல் 'ஒன்ராரியோ மனித உரிமை நியாயசபை' யின் (Ontario Human Rights Commission) விசாரணைக்கு மனு செய்யப்பட்டது. விசாரணையின் முடிவில் வேலை இடத்தில் ஒரு ஊழியருக்கு எதிராக நடந்த மன்னிக்க முடியாத ஒரு தவறு என குறிப்பிட்டு இதில் சம்பந்தப்பட்ட கம்பனி பாதிக்கப்பட்ட இப்பெண்ணுக்கு

1. $20,000 டொலர் நட்டாடு வழங்க வேண்டும் எனவும்

2. இது சம்பந்தப்பட்ட தொழில் வழங்கிய கம்பனியின் முகாமைத்துவ பிரிவினர் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் தொடர்பான பயிற்சி வகுப்புகளுக்கு சென்று அதனை படித்து, சட்டங்களை மதித்து அனுசரித்து போக வேண்டும் எனவும் எச்சரிக்கை செய்து தீர்ப்பு வழங்கியதும், இச் செய்தியினை கனடிய ஆங்கில ஊடகங்கள் வரவேற்று பரபரப்பான செய்தியாக வெளியிட்டிருந்தது.

சரி! இது ஒரு செய்தி! இருக்கட்டும்!
இதே மாதிரியான பல்வேறு வகையான பிரச்சினைகள், சம்பவங்கள் கனடாவில் வசிக்கும் ஈழத்தமிழர்களாகிய நாம் பல இடங்களிலும், பல சந்தர்ப்பங்களிலும் கட்டாயம் எதிர்கொண்டிருப்போம். அதனால் மனமுடைந்து பாதிக்கப்பட்டிருப்போம். பாதிப்புகளுக்கு எதிராக இப்படியான வழியில் நியாயத்தினை தேடிப் போனோமா?

கனடா வாழ்வில் நாம் யாவரும் இங்கு வந்து குடியேறிய வாசிகள். வேற்றுமாழி பேசுவோர் எங்கள் தோல் நிறம், மொழி, பாரம்பரியம், கலாச்சாரம் வேறு என்பதற்காக எவரும் எவரையும் ஒதுக்கிவிட முடியாது.

உதாரணத்திற்கு இங்கு சிலவற்றினை குறிப்பிடலாம்.

1. விக்ரோரியா பார்க் வீதியில் உள்ள ஒரு தொடர்மாடி கட்டிடத்தில் தமிழர்களுக்கு வாடகைக்கு இடம் கொடுப்பதில்லை? என்பது சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு நடைமுறையில் இருந்தது என்பது ஒரு செய்தி.

2. பிள்ளைகளோடு இருந்தால் இத்தொடர் மாடியில் வாடகைக்கு இடம் இல்லை.

3. பெண்களுக்கும், திருமணமாகாதவர் களுக்கும் வேலை தரப்படமாட்டாது.

4. ஈழத்தமிழர்களையே முதலில் வேலை யிலிருந்து நிறுத்துவது.

5. கறுப்பு இனத்தவரை கண்ணில் காட்ட முடியாது.

6. இந்து மத கோயில்களுக்கு போகின்றவர் கள், விக்கிரக ஆராதனை செய்வோர் எங்கள் மக்கள் சபைக்குள் வர கூடாது.

7. இந்த உணவகத்தினுள் தமிழ் இளைஞர் களை உள்ளே விடமாட்டார்கள்.

8. கர்ப்பிணி பெண் என்றபடியால் வேலை யிலிருந்து தற்காலிமாக அகற்றப்பட்டுள்ளார்.

9. புதுவருடம் பிறந்து முழுவியளமாக உடல் அங்கவீனமான இளம் பெண் சக்கர நாற்காலியோடு இந்து ஆலயத்திற்குள் உள்ளே வரப்பட கூடாது என்ற உத்தரவு.

இப்படி ஏராளமான அநியாயங்கள், பாகுபாடுகளை (Discrimination) இங்கு உதாரணமாக குறிப்பிடலாம். சரி இவ்வாறு நியாயமற்ற முறையில் கனடாவில் அநியாயங்களை எதிர்கொண்ட ஒருவர் தமக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பாக

- எங்கே? எப்படி முறைப்பாடு செய்வது?
- என்ன மாதிரியான வடிவில் முறைப் பாட்டினை முன் எடுப்பது?
- இவற்றுக்கு வழிகாட்டுபவர்கள் யார்?

போன்ற ஏராளமான கேள்விகளும், தயக்கங்களும் மனதில் ஏற்படுவது சகஜமாகும். இத்தகைய நிலைமையில் இருப்பவர்களுக்கு இலவசமாக கைகொடுத்து வழிகாட்ட என மாகாண அரசின் இந்த நிறுவனம் என்றும் தயார் நிலையில் உள்ளது.

'ஒன்ராரியோ - மனித உரிமை சட்ட ஆதரவு நிலையம்' (Ontario - Human Rights Legal Support Centre) என்னும் நிறுவனம் ஆகும்.

மனித உரிமை சட்டங்களில் விசேட தேர்ச்சி பெற்ற வழக்கறிஞர்களும், சட்ட உதவியாளர்கள் என ஒரு பாரிய குழு இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு கை கொடுக்க என என்றும் காத்திருக்கின்றனர்.

இந்நிறுவனம் பின்வரும் முகவரியில் இயங்குகின்றது. அதன் விபரங்கள் பின்வருமாறு!

ONTARIO HUMAN RIGHTS LEGAL SUPPORT CENTER
400, UNIVERSITY AVE.,
7THE FLOOR
TORONTO, ONTARIO M7A 1X8
தொலைபேசி - 416.314.6266 அல்லது 1.866.625.5179
இணையதளம் - www.hrlsc.on.ca

இந்நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள விரும்புகிறவர்களுக்கு மொழி என்பது ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக 140 மொழிகளில் மொழி பெயர்ப்பு சேவைகள் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழில் பேசி தங்களுக்கு தேவையான உதவிகளை பெற்று சட்டரீதியான நடவடிக்கைகளை முன் எடுக்கலாம். இலவசமாக தங்களுக்கு உதவி செய்ய சட்டவல்லுனர்களின் துணையுடன் கைகொடுக்கும் 'ஒன்ராரியோ மனித உரிமை சட்ட நிலையத்தின்' உதவியுடனோ அல்லது தாங்கள் தேடிப்பிடிக்கும் சொந்த வக்கீல் மூலமோ தங்களுக்கு நடந்த அநியாயத்தினை அல்லது பாகுபாட்டினை மனு செய்ய வேண்டிய இடமே 11 ஒன்ராரியோ மனித உரிமைகள் நியாய மன்றம்' (Human Rights Tribunal of Ontario) என்ற இடமாகும். இதன் விலாசமும் விபரங்களும் பின்வருமாறு.

HUMAN RIGHTS TRIBUNAL OF ONTARIO
655, BAY STREET, 14TH FOOR
TORONTO, ONTARIO M7A 2A3
தொலைபேசி - 416.326.1312



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான
ஆலோசனைகளுக்கு: 416.321.0999

தொடர்ச்சி 27ஆம் பக்கம்



# நரியா..? நரியின் வாலா..? எது வேண்டும்?

எல்லோருக்கும் விளங்கும் உலகப் பொது மொழி சித்திரம் என்று கூறுவார்கள். ஒரு பிரச்சனையை உலகம் சரியாக விளங்க வேண்டுமானால் அதை தெளிவான சித்திர மாக வரைய வேண்டும்.

உள்ளத்தில் எதையோ மறைத்து வைத்துக் கொண்டு, ஓவியரை அழைத்து வந்து நம் விருப்பத்தை வரையும்படி கூறினால் உண்மையான ஓவியத்தை வரைய முடியாது.

எழுபதுகளில் நான் தொண்டைமானாறு மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்த போது ஒரு சம்பவம் நடைபெற்றது.

ஐந்தாம் வகுப்பிற்கான ஓவியப் பரீட்சையில் நரியை வரையும்படி, ஆசிரியர் கூறியிருந்தார். அவர் தன் உள்ளத்தால் விரும்புவது எது என்பதை விபரமாகச் சொல்லாமல் சகட்டுமேனிக்கு நரியை வரையும்படி கூறிவிட்டார். மாணவர்களும் வரைந்து கொடுத்தார்கள்.

ஓவியங்களைப் பார்த்தபோது, நரி போல, ஓநாய் போல, நாய் போல, கீரி போல பல தோற்றங்களைக் காண முடிந்தது. அந்த ஓவியங்களைப் பார்த்து நரி என்று மற்றவர்கள் ஒப்புக் கொள்ளக் கூடிய தன்மை வெளிவரவில்லை. ஆனால்.. ஒரு மாணவன் மட்டும் வெறும் வாலை மட்டும் வரைந்திருந்தான். அவனை அழைத்த ஆசிரியர், நரி எங்கே..?, என்று கேட்டார். அதற்கு அவன், நரி கடதாசிக்கு வெளியே நிற்கிறது..!, என்றான். அவன் வரைந்தது சரியா இல்லை தவறா? இதுதான் சர்ச்சை.

சரி என்றால் அடுத்து வரும் பரீட்சையில் எல்லா மாணவரும் வால்களை மட்டும் வரைந்துவிட்டு போய்விடுவார்கள். தவறு என்றால் ஆசிரியர் முன்னரே இப்படி வாலை மட்டும் வரையக் கூடாது என்று கூறியிருக்க வேண்டும். எனவே ஆசிரியர்கள் கூட்டத்திற்கு விவகாரம் வந்தது.. பலத்த விவாதத்திற்குப் பிறகு அந்த ஓவியத்தில் ஒரு தவறு இருக்கிறது என்று ஆசிரியர்கள் முடிவு செய்தார்கள்.

நரியின் வாலும், ஓநாயின் வாலும், சில மரநாய்களின் வாலும், மேலும் சில வளர்ப்பு நாய்களின் வால்களும் தோற்றத்தில் ஒரேமாதிரியாக இருக்கும். மாணவன் நரியை வரைந்ததாகக் கூறினாலும் அதைப் பார்க்கும் இன்னொருவர் கடதாசிக்கு வெளியால் நிற்பது ஓநாய் என்று சொன்னால் என்ன செய்வது.. ஆகவேதான் மாணவன் வரைந்தது தவறு என்று முடிவு செய்தார்கள்.

மாணவனை அழைத்து காரணத்தைச் சொல்லி, அது தவறான ஓவியம் என்று ஆசிரியர் சொன்னார். மாணவன் சிரித்தான். தலைப்பு தராத பட்சத்தில் நீங்கள் சொல்வது சரி. ஆனால் நரியை வரை என்று கேட்டபின் வரையப்பட்ட வால்தான் இது.., என்றான்.

உணர்ச்சி வசப்பட்ட ஆசிரியர் அவனுக்கு 90 புள்ளிகளை வழங்கினார். ஆனால் அத்தோடு விவகாரம் முடியவில்லை? சர்ச்சை தொடர்ந்தது? கேள்வி தவறாக இருந்ததே தவறான பதில் வரக்காரணம் என்ற முடிவிற்கு கடைசியாக ஆசிரியர்கள் வந்தார்கள். கள்ளங்கபடமில்லாத ஒரு சிறு பிள்ளையிடமிருந்தும், கள்ளங்கபடமில்லாத பரம்பொருளிடமிருந்தும் நமக்கு வேண்டியது கிடைக்க வேண்டுமானால் கேள்வியைத் தெளிவாகக் கேட்க வேண்டும் என்று அதிபர் கூறினார். பின் அதை ஆசிரியர்களுக்கு விளக்க, அடுத்த வெள்ளி பிரார்த்தனை நடந்தபோது ஓர் உபகதையும் கூறினார்.

பாண்டவர்கள் இறைவனிடம் வெற்றி வேண்டுமெனக் கோரினார்கள். அக்கோரிக்கை இறைவனுக்கு சரியாகப் புரிய வேண்டுமானால் ஒளிவு மறைவற்ற உள்ளம் வேண்டுமெனக் கூறினான் கண்ணன். அதை அறிய அவர்களை ஒரு கந்தர்வனின் அபூர்வத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கே உள்ள மாமரத்தில் உள்ள கனியைப் பறித்து கீழே போடும்படி கூறினான். பின் நீங்கள் ஒவ்வொருவராக சென்று மாமரத்திடம் உங்கள் உள்ளத்தில் உள்ள இரகசியங்கள் அனைத்தையும் ஒளிவு மறைவின்றிக் கூறுங்கள், மாம்பழம் மேலே கிளம்பி மறுபடியும் மரத்தில் ஒட்டிக் கொள்ளும் என்றான்.

ஒவ்வொருவராகச் சென்று உள்ளத்தைத் திறந்து உண்மைகளைக் கூறினார்கள். பழம் தரையில் இருந்து மேலே மேலே எழுந்தது. கடைசியாக பாஞ்சாலி சென்று உண்மைகளைக் கூறினாள், அவள் கூறக்கூற மேலும் உயர்ந்து சென்ற மாம்பழம் ஒரு கட்டத்தில் ஒட்டாமலே அந்தரத்தில் நின்றது. பாஞ்சாலி நீ ஏதோ ஓர் உண்மையை மறைக்கிறாய். உள்ளத்தைத் திறந்து உண்மையைச் சொல்லாதவரை பழம் ஒட்டாது. உள்ளத்தை வெளிப்படையாகத் திறக்காத ஒருவரின் கோரிக்கையை இறைவனால் சரிவர நிறைவேற்ற முடியாது என்றும் கண்ணன் கூறினான்.

கடைசியாக தயக்கம் நீங்கிய பாஞ்சாலி, பஞ்சபாண்டவராகிய ஐந்து அண்ணன் தம்பிகளுக்கும் நான் ஒருத்தியே மனைவியாக இருந்தாலும், என் உள்ளம் அதிகம் விரும்புவது மூன்றாவதாகப் பிறந்த அர்ச்சுனன் ஒருவனைத்தான் என்று கூறினாள். உடனே மாங்கனி மரத்தில் ஒட்டிக் கொண்டது. அக்கணமே மற்றய நான்கு கணவர்களும் இதுவரை விருப்பமில்லாத ஒருத்தியை மனைவியாக்கிப் புணர்ந்து விட்டோமே என்பதை உணர்ந்து நாணமடைந்தார்கள்.

உள்ளத்தில் இருளை வைத்துக் கொண்டு இயற்கையிடம் எதையும் கேட்கக் கூடாது என்பதை கண்ணன் பாண்டவருக்கு உணர்த்திய இடம் இது. அதுபோல உள்ளத்தை தெளிவாக வைக்காமல் ஆசிரியர்கள் கேள்வி கேட்டால் நரிக்குப் பதிலாக நரி வாலே மாணவரிடமிருந்து வரும் என்று முடித்துக் கொண்டார் அதிபர்.

இந்த இரண்டு கதைகளையும் புதுமாத்தளன் என்ற புதிய பாத்திரத்தில் ஊற்றுவோம். அன்று. ஆயுதம் ஏந்திய புலி வீரர்கள், உள்ளத்தைத் திறந்து தமிழீழமே தீர்வு என்று சொன்னார்கள். அதற்காக உயிரும் கொடுக்கலாம் என்றார்கள்? உயிரும் கொடுத்தார்கள். அவர்கள் கேட்டது சரி. ஆனால் அவர்கள் கேட்டது கிடைக்கவில்லை. ஏன்? அவர்கள் ஈழத்தை தமக்காகக் கேட்கவில்லை மக்களுக்காகவே கேட்டார்கள். புலிகளைப் போல மக்களும் உள்ளத்தை திறந்திருந்தால் ஈழம் இல்லாவிட்டாலும் மக்கள் விருப்பிற்கு அமைவாக ஏதோ ஒன்றை பரம்பொருள் வழங்கியிருக்கும். ஆனால் மக்கள் எதையும் உறுதியாகக் கேட்கவில்லை என்பதை அவர்கள் புலம் பெயர்ந்து வெளிநாடு சென்ற காட்சி தெளிவாக விளக்கியது.

உயிர் எமக்குப் பெரிதாகப்பட்டது அதனால் புலம் பெயர்ந்தோம். அதை உளம் திறந்து புலகளிடம் சொல்ல அஞ்சினோம். சொல்லியிருந்தால் அவர்கள் ஏதோ ஒரு தீர்வுக்கு வந்திருப்பார்கள். புலிகளை விடுங்கள் நமது கருத்தை உலகத்திடமாவது சரிவர முன் வைத்தோமா. இல்லை. நாம் யாருக்கோ எதற்கோ அன்றும் தொடர்ந்து இன்றும் பயப்படுகிறோம்.

இதற்கு இன்னொரு உதாரணம். டென்மார்க்கில் நடந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு நண்பர் ஒருவர் வாக்களித்து விட்டு வந்தார்.

நீங்கள்தானே தமிழீழத்திற்குக் குறைவான, சாத்தியமான தீர்வு வந்தாலே போதும் என்று கூறுகிறீர்கள். பின் எதற்காக தமிழீழமே தீர்வு என்ற கருத்திற்கு வாக்களித்தீர்கள் என்று கேட்டேன்.

என்ன செய்வது. போகாவிட்டால் தமிழ் ஈழத்திற்கு எதிரானவன் என்று யாராவது களங்கம் கற்பித்துவிடுவார்கள். அதனால் வாயைப் பொத்திக் கொண்டு வாக்களித்தேன் என்றார். மறுநாள் 98 வீதத்திற்கு மேலானவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு ஆதரவு என்று வெற்றிச் செய்தி ஊடகங்களில் வந்தது. ஆனால் உள்ளத்தைத் திறந்து வாக்களித்தவர்களை இறைவனுக்கு மட்டுமே தெரியும்.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நடத்தியவர்களையோ அல்லது அந்தத் தீர்மானத்தை விமர்சிப்பதோ நமது நோக்கம் இல்லை. இத்தனைக்குப் பிறகும் நாம் உள்ளத்தைத் திறக்க முடியாதவர்களாகவே இருக்கிறோம் என்பதை விபரிக்கவே இந்த உதாரணம்.

புதுமாத்தளனுக்கு ஒரு புது முடிவு வேண்டுமானால், யாருக்கும் பயப்படாது இனிமேலாவது வெளிப்படையாகப் பேசுங்கள். பாஞ்சாலிபோல தயங்காது உள்ளத்தைத் திறவுங்கள்? இலங்கைத் தீவும் ஒரு மாங்கனிதான். தீர்வின்றித் தொங்கும் அந்த மாங்கனியை ஒட்டவைக்க மருந்து கண்ணீரல்ல, உள்ளம் திறப்பதேயாகும். உள்ளம் திறக்காதவருக்கு பேரருளின் உரிய பதில் ஒரு போதும் கிடைக்காது. உள்ளத்தைத் திறக்காமல் அழுவதால் தீர்வு கிடைக்குமென்றால் உலகம் முழுவதும் அழுகுரலே கேட்கும்.

**- நன்றி அலைகள்**

NUTECHWORLD
Your Neighbourhood Computer Store
BACK TO SCHOOL OFFER
FREE Diagnostic**
■ Computer (Desktop, Laptop) Repairs
Upgrades
Virus, Adware, Spyware, etc Removal
Data backup, Recovery.
■ HP, DELL, ACER, IBM, NONAME
■ Printer Repairs - Laser, Inkjet
■ Networking - wired or wireless
■ We do in-home diagnostic & repairs with discounted rates
■ Other Services: Wallmount TV / Home theatre installation
Video Surveillance system
installation & maintenance
Batteries, Cables* 2 For $1.50
We Sell Computer / Electronic Accessories
CD/DVD Media, Cooling Fans, Cables, Laptop bags,
iPOT Accessories, Thermal Intake PSU's, Usb hubs,
Tel :416 335 5222
Info@nutechworld.com
5214 Finch Ave.East. Unit #160. Scarborough- ONT
( GTA Square Mall - Middlefield & Finch)
*Selected items, ** Offer ends August 15, 2010. Applies to computers / Printer in store service only.

SaiSwaralaya
School of Carnatic Music
Teaching Carnatic Vocal & Veena
Small groups (less than 6) or Individual Classes are conducted
by Prashanthy Niranjan (B.Music & Former lecturer University of Jaffna)
Tel: 416 299 1514

# முட்டை

## ஓடும் நீர் உறைவதில்லை 05
## இரண்டாம் பாகம்

கோழி முதல் வந்ததா அல்லது முட்டை முதல் வந்ததா என்பது நீண்டகாலமாகப் பல தடுமாற்றங்களுக்கு இடமளித்துள்ளதாகக் கருதப்படுகின்றது. ஒவ்வொருவரது பார்வையைப் பொறுத்து கோழியும் முதல் வந்திருக்கின்றது, முட்டையும் முதல் வந்திருக்கின்றது. அவரவர் பார்வையில் அந்தத் தீர்மானம் நியாயமாகவும் அமைந்து விடுகின்றது. முதலில் கோழியா அல்லது முட்டையா வந்தது என்ற வினாவுக்கு அடிப்படையாக அமைந்தது என்ன என்பதைச் சிறிது விளக்கமாக நாம் ஆராய வேண்டியுள்ளது. அப்போது தான் சில வாழ்வியல் உண்மைகளை நாம் புரிந்து கொள்ள முடியும்.

முதலில், குட்டி போடும் இனத்துக்கு அல்லாமல் முட்டை இடும் இனத்திற்குத்தான் இந்தக் கேள்வியை நாம் முன்வைக்கின்றோம் என்பது அறியப்பட வேண்டியதாகின்றது. அதற்கான காரணம் என்ன? குரங்கு முதல்வந்ததா அல்லது குரங்குக் குட்டி முதல் வந்ததா என நாம் கேட்பதில்லையே ஏன்? இங்கே தான் இயற்கையின் சிறப்பை நாம் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அதாவது முட்டையிடும் இனங்களின் இனப்பெருக்கமானது அவற்றின் உடலுக்கு வெளியே இடம்பெறுவதாகும். அதாவது குட்டி போடும் இனங்களின் இனப்பெருக்கமானது அவற்றின் உடம்புக்குள்ளேயே இடம் பெறுவது போல் அல்லாமல் முட்டையிடும் இனங்களது இனப்பெருக்கம் முட்டையிடுபவற்றின் உடலுக்கு வெளியே இடம் பெறுகின்றது. கோழி வேறாகவும் அதன் முட்டை வேறாகவும் பிரிக்கப்பட்டுப் பின்னர் அதன் இனப்பெருக்கமானது முட்டையினூடாக இடம் பெறுகின்றது. இதனால் தான் எது முதல்வந்தது என்ற சர்ச்சை எழுவதாயிற்று. ஆனால் நவீன விஞ்ஞான உலகில் நமக்கு ஏற்பட்டிருந்த எத்தனையோ சந்தேகங்கள் தெளிவாக்கப் பட்டுள்ளது போல் இந்தக் கோழி - முட்டைப் பிரச்சினைக்கும் தெளிவு தரப்பட்டுள்ளது. அதாவது முட்டையின் கோது அந்தப் பறவையின் உடலில் ஏற்படும் இராசாயனத் தாக்கங்களால் மட்டுமே உருவாக்கப்படக்கூடியது என்பது உறுதிப்படுத்தப்பட்டு முட்டை முதலில் உருவாகுவதற்கு வாய்ப்பே இல்லை என்பதும் முட்டையானது பறவையின் உடம்புக்குள் தான் உருவாகின்றது என்பதும் நிருபணமாக்கப்பட்டுவிட்டது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

இந்த விதி பறவைகளுக்கு மட்டுமல்ல முட்டையிடும் அத்தனை இனத்துக்குமானதாகின்றது.

இங்கே இந்த முட்டையைப் பற்றிய ஆய்வு எதற்காகக் கொண்டுவரப்பட்டது என்பதைப் பார்ப்போம். உலகில் படைக்கப்படும் ஒவ்வொன்றும் ஒவ்வொருதகவலையாவது எமக்குத் தருகின்றது. ஒவ்வொரு படைப்புக்கும் அதற்கென்று சிறப்பியல்பு உண்டு. இந்தச் சிறப்பியல்புகள் நமக்கு வாழ்வியல் சம்பந்தமான விளக்கங்களைத்



“ சிறந்த மனோபாவ வளர்ச்சி என்பது தரப்பட்ட சூழலில் கிடைக்கப் பெறும் விடயங்களைத் தரமான வாழ்க்கைக்கு உரமாக்குவதாகும். உயர்ந்த, உறுதியான மனோபாவம் என்பது புறச்சூழலின் தாக்கத்தால் தள்ளாட்டத்திற்கோ அல்லது தடுமாற்றத்திற்கோ உட்படுவதில்லை. ”

தருகின்றன. அந்த விளக்கங்களை நாம் புரிந்து கொண்டு நமது வாழ்வியல் நகர்வுகளை மேற்கொள்வது சிறந்த வாழ்க்கை முறைக்கு வழிவகுக்கும் என்பது தான் உண்மை. அப்படியாயின் முட்டை எமக்குத்தரும் வாழ்வியல் உண்மைதான் என்ன?

நாம் அனைவரும் பிறப்பிலும் வளர்ப்பிலும் குடும்பம், நட்பு, உறவு என்ற கட்டமைப்புக்குள் இணைந்திருப்பினும் மனோபாவ அடிப்படையில் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்டுள்ளோம். இதுவும் இயற்கையின் தனிச்சிறப்பாகும். ஒரே பெற்றோருக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறான மனோபாவத்தைக் கொண்டிருப்பது இயற்கை விதியாகும். அதாவது தாய்க்குப் பிள்ளையாக இருந்தாலும் மனோபாவ அடிப்படையில் நாம் தனிமைப்படுத்தப்பட்டுகின்றோம். கோழிக்கு அதன் சொந்த முட்டையாக இருப்பினும் கோழியிலிருந்து முட்டை வேறுபடுத்தப்படுவது போல் பெற்றோருக்குப் பிள்ளையாக இருப்பினும் மனோபாவ அடிப்படையில் வேறுபடுகின்றோம். மனிதவாழ்வு நெறிப்படுத்தப்பட வேண்டியதாக இருப்பதும் ஒருவர் மற்றவர்களில் சார்ந்து வாழ வேண்டியிருப்பதும் வெளிப்பார்வைக்கு ஒன்றிணைந்து வாழ்வது போல் இருப்பினும் நாம் ஒவ்வொருவரும் முட்டையின் நிலையில் தான் இருக்கின்றோம் என்பது தான் உண்மை. அதாவது நாம் ஒவ்வொருவரும் மனோபாவ அடிப்படையில் நமது பெற்றோரில் இருந்தும் கூட வேறுபடுத்தப்பட்டுள்ளோம். (கோழியிலிருந்து முட்டை வேறுபடுத்தப்படுவதுபோல்).

முட்டையிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய மிகவும் முக்கியமான இன்னொருவிடயம் என்னவெனில் அந்த முட்டையின் அடுத்த நிலை என்பது அது எதிர்கொள்ளும் வெளிப்புற சூழலின் தாக்கங்களைக் கொண்டது. உதாரணமாக கோழியில் இருந்து வேறுபடுத்தப்படும் முட்டை என்னவகையான வெளிப்புறச் சூழலுக்கும் அதன் செல்வாக்குகளுக்கும் உட்படுகின்றது என்பதைப் பொறுத்தே அதன் ஆக்கமும், அழிவும் தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு முட்டை அதன் உயிர்நிலையில் இருந்து உரு நிலைக்கு மாறுவதற்கு ஏற்படக்கூடிய சூழலின் விளைவுகள் எண்ணிலடங்காதவை. இவ்விதியானது எமது வாழ்க்கைக்கு முக்கியமான விடயம் ஒன்றை வழங்கி நிற்கின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று நாமும் சூழல்களின் தாக்கங்களுக்கு உள்ளாகின்றோம். இந்தச் சூழல்களின் தாக்கங்கள் பிறப்பிலிருந்து நாம் உயிர்வாழும் காலம்வரை அதனது செல்வாக்கைச் செலுத்திக் கொண்டேயிருக்கின்றன. இந்தத் தாக்கங்களின் உள்வாங்கலும் அதன் பிரயோகமும் நமது மனோபாவ வளர்ச்சிக்கு வித்தாகின்றன. ஒரு மனிதனது மனோபாவ வளர்ச்சி என்பது சூழல்களின் தாக்கங்களால் உள்வாங்கப்படும் நேர்த்தியான, எதிர்மறையான விடயங்களின் சாதுரியமான பயன்பாடாகும். இங்கே ஒவ்வொரு மனிதனும் தனித்தனியாக இத்தாக்கங்களுக்கு முகங்கொடுத்து வாழ்க்கையை நகர்த்த வேண்டியுள்ளது. இவ்வாறு உள்வாங்கப்படும் விடயங்களின் வெளிப்பாடாகவே நமது செயற்பாடுகளும் அமைகின்றன.

சிறந்த மனோபாவ வளர்ச்சி என்பது தரப்பட்ட சூழலில் கிடைக்கப் பெறும் விடயங்களைத் தரமான வாழ்க்கைக்கு உரமாக்குவதாகும். உயர்ந்த, உறுதியான மனோபாவம் என்பது புறச்சூழலின் தாக்கத்தால் தள்ளாட்டத்திற்கோ அல்லது தடுமாற்றத்திற்கோ உட்படுவதில்லை.

**KG Master**-kgmaster@rogers.com

எப்பொழுது எமது மனோபாவத்தை மற்றவர்களது கைகளில் கொடுத்து விடுகிறோமோ அப்பொழுதிலிருந்தே நாம் நடைப்பிணம் தான். ஒவ்வொருமனிதனும் தனது வாழ்க்கையை எந்தச் சூழலிலும் தனது விருப்பத்திற்கேற்ப திசை திருப்ப முடியும். அத்தனை சக்தி படைத்தவர்கள் நாம். அதற்கு நமக்கு அவசியமானது உறுதியான மனம். உறுதியான மனமானது எமக்கு உள்ளிருந்து உருவாக்கப்பட வேண்டியது. சுயமாக, இயற்கையின் ஒத்துழைப்பைச் சாதகமாக்கிக் கொண்டு நேர்த்தியான முறையில் நிலை நிறுத்தப்பட வேண்டியது.

ஆம் வாசகர்களே!

ஒரு முட்டை வெளித்தாக்கத்தால் உடைக்கப்படுமாயின் அது ஒரு உயிரின் அழிவு. மாறாக உள்ளிருந்து உடைக்கப்படுமாயின் ஒரு உயிரின் உருவாக்கம். அதேபோன்று தான் நமது மனோபாவங்கள் வெளிக்காரணிகளால் தாக்கப்படுவதற்கு அனுமதிப்போமாயின் அது நமது உயர்வின் அழிவு. மாறாக உள்ளிருந்து சிறப்பாக வெளிப்படுத்தப்படுமாயின் உயர்வின் உருவாக்கம். தெரிவு எப்பொழுதும் நமது கையில்தான்.

அமைதியின் குரல் - Words of Peace
அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி
1-877-707-3221 / தமிழில் - 416.431.5000
- MAHARAJI -
மஹாராஜியின் உரைகள்

On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221
On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

## அற்றைத்திங்கள்

ன் வற்புறுத்தலின் பேரில் என்னையும் ஆங்கிலக் கல்விக்கு அனுப்ப எனது மாமனாரும் தமையன்மாரும் தீர்மானித்தனர். இவன் நன்றாகப் படிப்பான் என்று அவர் அண்ணன் மாருக்குச் சொல்லியிருக்க வேண்டும். நல்லகாலமாக 1946ல் இலவசக் கல்வித்திட்டமும் வந்தது. அந்த ஆண்டு என்னையும் இறிபேக் கல்லூரிக்கு அனுப்பினார்கள்.

இறிபேக் கல்லூரி விளையாட்டு மைதானம் மகிளங்கேணி என்ற இடத்தில் கடற்கரைப் பக்கமாக இருந்தது. விளையாட்டுப் போட்டிகள் அங்குதான் நடைபெறுவது வழக்கம். 1947ஆம் ஆண்டு மகிளங்கேணி மைதானத்துக்குச் சென்றுகொண்டிருந்த பொழுது ஒரு தென்னைமரத்தை மூன்று கிளைகளுடன் கண்டேன். அது என்னை மிகவும் கவர்ந்தது. அன்றே ஒருகால் மூன்று தலை என்று ஒரு கட்டுரை எழுதினேன். அதனைக் கண்ட எனது அண்ணர் பசுபதி சில திருத்தங்களுடன் ஈழகேசரிப் பத்திரிகைக்கு அனுப்பினார். அவர் அந்தப் பத்திரிகையை வெளியிடும் நிறுவனத்தைச் சேர்ந்த திருமகள் அழுத்தகத்திலே தான் அக்காலத்திற் பணியாற்றிக்கொண்டிருந்தார். நான் எழுதிய முதற் கட்டுரையே பத்திரிகையில் வந்தது. அது மாணவர் மத்தியில் எனக்கு ஒரு எழுத்தாளன் என்ற மதிப்பையும் அளிக்கவே செய்தது.

- தொடரும் ...

இம்மாதம் 11 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி முன்னாள் அதிபர் சின்னையா சிவனேசனின் ‘கனடாவில் எம்மவர்கள்’ என்ற நாடக நூல் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதில் முன்னாள் மாணவர், தொழிலதிபர் ஏ.எம். ரவீந்திரராஜா முதல் பிரதி வாங்குவதையும், முன்னாள் துணை வேந்தர் கலாநிதி மோஹனதாஸ் ஆசிரியருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், கூட்டத்தில் ஒரு பகுதியையும், ஆசிரியர் பதிலுரை வழங்குவதையும் காணலாம்.








# MATH LESSON

15 Years Experience in Teaching Math

The Very First Time Introducing

A NEW PROGRAM FOR G9, G10, G11 & G12 Than Ever

Starts In July 2010

SHARMA: 416.666.5515

416.878.3215

பெற்றோர் தெரிந்திருக்கவேண்டியது

மாணவர்கள் 90%க்கு மேற்பட்ட புள்ளிகள் ஈட்டுவது மட்டும் அவசியமல்ல. அதற்கேற்ப அறிவும் இருப்பது அவசியமாகும்

# கருந்துளைகளைகளின் வகைகள் - 21

பொதுவாகக் கருந்துளைகளை அவற்றின் திணிவுகளின் அடிப்படையில் மூன்று வகையாகக் கூறுவார்கள். ஒன்று சாதாரண கருந்துளைகள் - இவை பெரிய விண்மீன்களின் சுப்பநோவாவின் பின்னராகத் தோன்றுபவை, இரண்டாவது பெருந்திணிவுக் கருந்துளைகள், இவை கலக்சிகளின் மத்தியில் காணப்படுபவை, மூன்றாவது குறுங் கருந்துளைகள். இந்தப் பகுப்பானது அவற்றின் திணிவுகளின் அடிப்படையிலான பருமன்களின் அமைப்பில் கூறப்படுபவை. இவற்றை விட, கருந்துளைகளின் இயல்புகளில் இருந்தும் மூன்று வகைக் கருந்துளைகளை கூறுகின்றார்கள். அவை பற்றியே இப்பகுதியில் பார்க்கப் போகின்றோம்.

கருந்துளைகள் சிலும்பல்கள் ஏதும் இல்லாதவை. இதனை ஆங்கிலத்தில் NO HAIR என்பார்கள். இதனால் கருந்துளைகள் முழுமையானவை, செப்பனான மேற்பரப்புடையவை எனலாம். எந்தவொரு பொருளும், அது என்னவடிவில் இருந்திருப்பினும், எப்பொருளால் ஆனதாக இருப்பினும் கருந்துளையாக மாறுகையில் கோள வடிவினதாக மாறிவிடும். ஏனெனில் அது புள்ளி ஒன்றில் ஒருமமாகிவிடுவதால், அதனைச் சுற்றியுள்ள நிகழ்வு எல்லை மேற்பரப்பானது கோளவடிவினதாக இருக்க, கருந்துளையானது சிலும்பல்கள் ஏதுமில்லாக் கோள வடிவினதாகின்றது. அத்துடன் அப்பொருளின் சடம் முழுவதும் உடைந்து போய் வெறுமனே திணிவு மாத்திரமே மிஞ்சுவதால் சாதாரணமான பொருட்கள் கொண்டிருக்கக் கூடிய தனித்துவமான இயல்புகளையும் கருந்துளைகள் காட்டமாட்டா.

## பேரண்டம் - 69

மேலும், கருந்துளையினுள் விழும் பொருள் ஒன்றும், அது எவ்வடிவினதாயினும், உருக்குலைந்து போய், ஈற்றில் ஒருமத்துடன் இணைந்து விடும். அதனால் நிகழ்வு எல்லையானது எப்பொழுதும் அலுசிலம்பல்கள் இல்லாது அழுத்தமான கோளவடிவ மேற்பரப்பாகக் காணப்படுவதால்தான் கருந்துளைகளுக்கு No hair சிலும்பல் இல்லாக் கொள்கையை முன் வைக்கின்றார்கள்.

இந்த வகையில் கருந்துளைகள் பெரும்பாலும் திணிவினையும், அவை தோன்றுகையில் ஏற்பட்ட சுழற்சியின் காரணமாகச் சுழற்சியினையும் கொண்டிருக்கும். அத்துடன், ஈர்ப்பானது மின் ஏற்றங்களில் எந்தவொரு பாதிப்பினையும் ஏற்படுத்தாது என்பதால், திணிவொன்று கருந்துளையாக மாறுகையில் ஏற்றங்கள் ஏதாவது மிஞ்சிவிடின் அவையும் அக்கருந்துளையுடன் சேர்ந்து இருக்கும். அதாவது அவ்விதம் தோன்றிய கருந்துளையானது மின் ஏற்றங்களின் இயல்புகளையும் காட்டி நிற்கும். அதனால் கருந்துளைகள் மூன்று வகையான இயல்புகளைக் காட்ட வல்லன என வல்லுனர்கள் கூறுகின்றார்கள். அந்த மூன்று இயல்புகளையும் பார்ப்போமாயின், கருந்துளைகள் கொண்டிருக்கக் கூடிய திணிவு (அல்லது சக்தி), அவற்றின் சுழற்சிகளின் அளவு (இதனை கோண உந்தம் எனக் கூறுவார்கள்), ஒருவேளை அவை கொண்டிருக்கக் கூடிய மின் ஏற்றம் என்பவையே ஆகும். இந்த மூன்று இயல்புகளையும் கொண்டும் கருந்துளைகளை வகைப்படுத்தி வைத்திருக்கின்றார்கள்.

பொதுவாகவே விண்மீன் ஒன்று கருந்துளையாகுவதைக் கவனிப்போம். விண்மீனின் சடங்கள் எல்லாம் அதன் மையத்தினை நோக்கி வந்து நெருங்குண்டு உடைந்தே கருந்துளையானது உருவாகின்றது. இதனால் அக்கருந்துளையானது அதன் அச்சினைக்குறித்து சுழற்சியினைக் கொண்டதாக இருக்கும். இதனை சுழற்சிக் கருந்துளை என்பார்கள். இந்த சுழற்சிக் கருந்துளையானது தனது அச்சுக் குறித்துச் சுழலுகையில் அதன் சுழற்சி வேகமானது எல்லா இடங்களிலும் ஒரே அளவினதாக இராது. அதன் முனைவுப் பகுதிகளில் வேகம் குறைந்தும், நடுப்பகுதியில் வேகமும் கூடியவையாகவும் இருக்கும். இந்த வேகங்கள் நேராக, நேர்கோட்டில் இல்லாமல், சுழன்று வருவதால், இவ்வேகங்களை கோணவேகங்கள் என்கின்றார்கள். அதன்படி, புதியதாகத் தோன்றிய கருந்துளை ஒன்றின் நிகழ்வு எல்லை மேற்பரப்பின் கோணவேகம் எல்லா இடங்களிலும் சீராக இல்லாதபடியால், அக்கருந்துளையானது நிறைவான ஒரு கோளக் கருந்துளையாகத் தோன்றாது. எனவே இதனை கோணவேகக் கருந்துளை என்பார்கள். இக்கருந்துளைகள் திணிவுடன் கோணவேகத்தினையும் கொண்டிருக்கும். இவ்வகைக் கருந்துளைகளை கேர் (Kerr) வகைக் கருந்துளைகள் என்பார்கள்.

காலம் செல்லச் செல்ல, கருந்துளையின் கோணவேகம் குறைந்து கொண்டு வரும். அதாவது கருந்துளையின் சுழற்சியானது மெதுமெதுவாக்கப்படும். இறுதியில் அதன் சுழற்சியானது இல்லாமற் போய்விடும். இந்த நிலையில் கருந்துளையானது நிறைவான ஒரு கோளமாகக் காணப்படும். இக்கருந்துளைகளில் தனியவே திணிவு (அல்லது சக்தி எனலாம்) மாத்திரமே காணப்படும். இந்தவகைக் கருந்துளைகள் தான் அதிகம். இவற்றினை ஸ்வேட்ஸ்சைல்ட் கருந்துளை என்பார்கள்.

நான் முன்னர் தெரிவித்து இருந்தபடியே கருந்துளையாகும் பொருள் ஆரம்பத்தில் எந்த வடிவினையுடையதாகவும் இருக்கலாம். அது சுருங்கிக் கொண்டு வருகையில், இறுதியில் கருந்துளையாக மாற்றமடைகையில் ஒரு புள்ளியில் வந்து உடைந்து போவதால், அப்புள்ளியினைச் சுற்றியே அதன் வலிமையான ஈர்ப்புப் புலம் தோன்றும். அந்த ஈர்ப்புப்புலமானது பொருளின் முன்னைய வடிவினில் தங்காது அப்புள்ளியினைச் சுற்றிக் கோள வடிவில் விரிவடைந்து கொண்டு செல்லும். இந்த ஈர்ப்பு வலிமையின் அளவு ஒளியையும் இழுத்து வைத்திருக்கும் வலிமையை மட்டுமட்டாகக் கொண்ட கோளப்பரப்பில் நிகழ்வு எல்லைக் கோள மேற்பரப்பு உருவாகும். இந்த மேற்பரப்பில் இருந்து எதுவுமே வெளியே செல்லமுடியாது இருக்க, இம்மேற்பரப்பானது நிறைவாக சிலும்பல்கள் ஏதுமின்றிக் காணப்படும். இதனைத்தான் கருந்துளையின் சிலும்பல் இல்லாக் கொள்கை (NO HAIR THEORY) என்பார்கள். கருந்துளை ஒன்றினை மேலும் விளங்கிக் கொள்வதற்கு இந்த சிலும்பல் இல்லாக் கொள்கையானது மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

பொருள் ஒன்று உடைந்து ஒரு புள்ளியில் ஒடுங்கி கருந்துளையாகினாலும் அப்பொருள் ஏதும் மின்தன்மை கொண்டதாக இருந்தால் அது கொண்டுள்ள மின்தன்மையானது ஈர்ப்பினால் பாதிப்படையாது. அக்கருந்துளையானது சிலும்பல்கள் ஏதுமின்றிக் காணப்பட்டாலும், அந்த மின்தன்மையானது அக்கருந்துளையுடன் ஒட்டிக் கொண்டே இருக்கும். இந்தவகைக் கருந்துளைகள் மின் ஏற்றம் கொண்ட கருந்துளைகள் எனப்படும். றெயிஸ்னர் – நொஸ்ரோம் (Reissner – Nordstorm) கருந்துளைகள் என்பார்கள்.

மின் ஏற்றமுள்ள கருந்துளைகள், திணிவுடன் மின்னேற்றம் கொண்டிருப்பதுடன் கோணவேகத்தினைக் கொண்டவையாகவும் இருக்கும். மின்னேற்றம் கொண்ட கருந்துனைகளைப் பற்றி இருவகையிலான கருத்துக்கள் உண்டு. சிலர் பெரும்பாலும் இந்தவகைக் கருந்துளைகளை வெற்றுக் கருந்துளைகள் (Naked black holes) என்கின்றார்கள்.. ஏனெனில் அவை கொண்டுள்ள மின்னேற்றத்தின் காரணமாக, நிகழ்வு எல்லையானது இல்லாதவையாக இவை காணப்படும் என்பது அவ்வாய்வாளர்களினது கருத்து. ஆனால் வேறுசிலரோ, மின்னேற்றம் கொண்ட கருந்துளைகளும் நிகழ்வு எல்லையைக் கொண்டிருக்கும் என்கின்றார்கள். ஆனால் அவை கொண்டுள்ள ஏற்றத்தின் காரணமாக, ஏற்றங்களுக்கான இன்னொரு நிகழ்வு எல்லையையும் கொண்டிருக்கும் என்கின்றார்கள்.

இருவகையான அமைப்புகளுக்குமே, அவற்றினைக் குறிப்பிடும் ஆய்வாளர்களினது கருத்துக்கள் வலிமையானவை போல இருப்பினும் சரியான வடிவம் எது என்பது சரியாகத் தெரியாது. கருந்துளைகளை எப்போது முழுமையாக மனித இனம் கண்டு கொள்கின்றதோ, அன்றுதான் இச்சிக்கல் தெளிவுபடும்.

இவை மூன்று பிரிவுகளுமே கருந்துளைகளின் பிரதான வகைகளாகக் கூறப்படுகின்றன. பொதுவாகவே கருந்துளைகள் பற்றியவற்றை எல்லாம் ஓரளவுக்குத் தெரிந்து கொண்டோம். இனி அடுத்த பகுதியில் இருந்து சற்று விரிவுபடுத்தப்பட்ட முறையில் கருந்துளைகளைப் பார்க்கப் போகின்றோம். 'ஹாக்கிங் கதிர்வீச்சு' என்று கூறுவார்கள் அந்த வித்தியாசமான கருத்தினைத்தான் அடுத்த பகுதியில் இருந்து பார்க்கப் போகின்றோம்.



- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com



# உலகத்தமிழ் செம்மொழி மகாநாடு



உலகத் தமிழ் செம்மொழி மகாநாடு பற்றிய அறிவித்தல் வந்தது முதல் நான் எனது நண்பர்கள் பலரிடம் அதற்குப் போய் வாருங்கள் எனச் சிபாரிசு செய்தேன். சிலர் வெவ்வேறு காரணங்கள் சொல்லி போக முடியாது என்றனர். பலர் எனது கருத்திற்கு ஒத்து வந்தனர். அது தமிழிற்காக அதன் சிறப்பினை எடுத்துக்காட்டும் ஒரு மகாநாடாகவே கருத வேண்டும் என்ற எனது கருத்தினை ஏற்று நண்பர் நவம், பேராசிரியர் சுப்பிரமணியன் அவர்களும் பலருக்குச் சிபார்சு செய்தனர். இத்தனைக்கும் நான் போவதாக தீர்மானிக்கவில்லை. அதற்கான காரணம் எனது உடல்நிலை. என்னால் சிறிது தூரமே நடக்க முடியும். அதுவும் மிக்க மந்தகதியில் தான் நடப்பேன். ஆனால் பேராசிரியர் சுப்பிரமணியனும் நவமும் நான் கட்டாயமாகச் செல்ல வேண்டும் என வற்புறுத்தினர். நவம் "சேர் நீங்கள் வாருங்கள் உங்களால் நடக்க முடியா விட்டால் நான் தூக்கிக் கொண்டே போவேன்' என வற்புறுத்தினார். அவர் சொன்னதைச் செய்பவர், செய்வதைத்தான் சொல்வார். ஆகவே விண்ணப்பித்தேன். வாசிக்கவுள்ள கட்டுரையின் சாரம்சத்தினையும் அனுப்பி வைத்தேன். கட்டுரையாளர் பிரிவினிலே என்னைச் சேர்த்து விழாவினுக்கு வருமாறும் அழைத்திருந்தனர். பேராசிரியர் சுப்பிரமணி யன், அவரது துணைவியார் முனைவர் கௌசல்யா சுப்பிரமணியன், நவம் மற்றும் மணி வேலுப்பிள்ளை, பாக்கியநாதன், வைத்தியகலாநிதி இலம்போதரன், அருந்தவநாதன், குகதாசன், பேராசிரியர் செல்வா கனகநாயகம், திருமதி செல்லையா ஆகியோருடைய கட்டுரைகளும் அங்கீகரிக் கப்பட்டு மகாநாட்டினுக்கு அழைத்திருந்தனர். திரு சின்னையா சிவநேசன், திரு சிவபாலு, திரு நகுலசிகாமணி ஆகியோர் பார்வை யாளர்களாகச் செல்வதற்கு மாத்திரம் விண்ணப்பித்திருந்தனர் அவர்களையும் அழைத்திருந்தனர். விழாக் குழு சார்பினில் பேராசிரியர் இராசேந்திரன் அவர்கள் மிகவும் துடிப்புடன் செயற்பட்டார்.

விழாக் குழுவினர் மிகத் திறமையாகவும் மிக கரிசனத்துடனும் இயங்கிய முறை இவ்விழா பற்றி எப்படி நடக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமற்ற முறையில் அமைந்தது. அங்கு சென்ற பின்னர்தான் எனது எதிர் பார்ப்பினுக்கும் பன்மடங்கு சிறப்பாக விழாக்குழு செயற்பட்டதைக் கண்டு வியப்படைந்தேன். இங்கிருந்து தூற்றியவர்கள் தொலைக்காட்சி பார்க்காமல் இருந்திருப்பார்களா?

எனது உடல் நிலை கருதி என்னை அனுப்புதற்கு எனது பிள்ளைகள தடை போட்டனர். நான் எவ்வளவோ வற்புறுத்திய பின்னர் தாங்களும் என்னுடன் வருவதாயின் நான் போவதற்கு அனுமதிப்பதாகக் கூறினார்கள். சம்மதித்தேன். ஆனால் அவர்கள் என்னுடன் தங்க முடியுமா என்பதில் சந்தேகம் எழுந்ததால் ஒரு நாள் காலை பேராசிரியர் இராசேந்திரனுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பினேன். என் உடல் நிலை காரணமாக எனது இரு மகள்களும் என்னுடன் மகாநாட்டினுக்கு வரவுள்ளதாகவும் அவர்கள் தங்குதற்கு ஏதாயினும் ஒழுங்கு செய்ய முடியுமாயின் அதற்கான செலவினை நான் கொடுப்பதாகவும் அறிவித்து விட்டு ஏதோ அலுவல் காரணமாக நான் வெளியே சென்றேன். திரும்ப வீடு வந்து எனது கணினியைத் திறந்து எனது மின்னஞ்சல்களைப் பார்வையிட்டபோது எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. உங்களுடன் உங்கள் பிள்ளைகள் தங்கிக் கொள்ளலாம். அதற்கான ஒழுங்குகள் செய்யப்படும் என முனைவர் இராசேந்திரனின் மின்னஞ்சல் செய்தி கூறிற்று. எனது திகைப்பு உடனடியாகவே அவருக்குப் பதில் அனுப்ப வைத்தது. நன்றி கூறியதுடன். இத்தனை வேகத்தில் செயற்பட்டமைக்கு "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவனிடம் விட்ட தலைவனை வாழ்த்துவதா அல்லது அதனை முடித்த தொண்டனின் ஆற்றலை வியப்பதா" என எழுதியிருந்தேன். நேரில் சந்தித்தபோதும் அதனையே சொன்னேன். முகத்தில் ஒரு முறுவல்தான் பதிலாக இருந்தது. அத்தனை தன்னடக்கம். எனது பிள்ளைகளுக்கும் அவதானாளர்களாக அங்கீகாரம் கொடுத்திருந்தனர்.

இதனை நான் சொல்வதற்கான காரணம் தொண்டர்கள் காட்டிய வேகத்தை உணர வேண்டும் என்பதற்காகவே. ஆம் நாங்கள் கோயம்புத்தூர் விமான தளத்தில் 22ந்தேதி மதியம் இறங்கியதும் எம்மை வரவேற்கக் காத்திருந்தோர் எம்மைத் தனி ஊர்தியில் கொண்டு சென்று எமக்காக ஒதுக்கப்பட்ட ஸ்ரீராம் ஓட்டலை அடைந்தும் அங்கே எமக்காக அமர்வு அறையுடன் கூடிய விசாலமான இரண்டு அறைகள் 22 ந் தேதி முதல் 29ம் தேதி வரை ஒதுக்கப் பட்டிருப்பதைக் கண்டு வியப்பு மேலும் அதி-கரித்ததுடன், இங்கிருந்து அப்படி இப்படிப் பேசுவோருக்கு எப்படி இதனைத் தெரிய வைப்பது என எண்ணினேன். பயணம் பற்றி போனவர்கள் எழுதலாம் என முன்கூட்டியே ஆருடம் கூட வந்திருந்தது. ஆகவே அதனை செய்வோமே என எண்ணினேன். எனது உடல் நிலை காரணமாகச் சற்றுப் பிந்தி விட்டது.

வரவேற்பு அமர்க்களம்: எமக்கு அழைப்பு வந்த நாளில் இருந்து ஒவ்வொரு தகவலும் வலை மனையில் வந்த வண்ணம் இருந்தது. எமது பிரயாண ஒழுங்குகள் பற்றிய விபரம் அறிவிக்குமாறும் கேட்டிருந்தார்கள். இலங்கைத் தமிழர்களுக்கு கனடாவில் இருந்து இந்தியாவுக்குச் செல்வதற்கான நுளைவனுமதி பிரச்சினையாகவே இருந்து வந்தது. ஆகவே நேரம் தாழ்த்தாமல் விண்ணப்பித்தோம். பொதுவாகவே எல்லோருக்கும் மூன்று வாரங்களில் நுளைவனுமதி கிடைத்து விட்டது. மகாநாட-டில் பங்குபற்றுவதனைக் காரணமாகக் காட்டினால் பல்வேறு தகவல்கள் தரவேண்டியிருக்கும். ஆகவே சுற்றுலா என விண்ணப்பியுங்கள் என முகவரகத்தினர் ஆலோசனை தந்தனர். அமைப்பாளர்கள் தேவையான தகவல்களை அனுப்பி வைத்திருந்தனர். ஆனால் அவை வந்து சேர்வதற்குக் காலதாமதமானமையால் நம்மில் ஒருவருமே மகாநாட்டில் பங்குபற்றுவதாகக் கூறி அனுமதிக்கு விண்ணப்பிக்கவில்லை. எனது துர்ரதிருஷ்டம் நண்பர் நவம் ஒருவருக்கு மாத்திரம் நுளைவனுமதி வழங்குதற்குத் தாமதமானது. இதனால் நவத்தினிலும் பார்க்க ஏமாற்றமும், மனவருத்தமும் அதிகம் அடைந்தவன் யானே. அவரும் எம்கூட வந்திருந்தால் இன்னும் சுவாரஸ்சியமாக எமது பிரயாணம் அமைந்திருக்கும் என நான் மாத்திரமல்ல எமது குழுவினைச் சார்ந்த அத்தனை பேர்களும் ஒருமித்த கருத்தினைத் தெரிவ-ித்தனர். விழா அமைப்பாளர்கள் கூட அவரது கட்டுரை வாசிப்பதற்கான தேதி, இடம் நேரம், நிகழ்ச்சிச்சிற்றேட்டினில் குறிப்பிட்டிருந்தனர்.

எனது பெண்பிள்ளைகள் என்னுடன் சேர்ந்து பிரயாணம் மேற்கொண்டமையால் அவர்களுக்காக எனது பிரயாணத்தில் சில மாற்றங்களைச் செய்யச் சம்மதித்தேன். நேரே சென்னையைச் சென்றடையாமல் டுபாயினில் மூன்று நாட்களும், சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு நேரடியாகச் செல்லாமல் கேரளாவில் மூன்று நாட்களும் செலவிடுவதாகத் தீர்மானித்தோம். அதற்கான ஒழுங்குகளை எனது பிள்ளைகள் கச்சிதமாகச் செய்து முடித்தார்கள். மின்னஞ்சல் பெரிதும் உதவிற்று. பிரயாண ஒழுங்குகள் வேகவேகமாக நடந்தன.

மகாநாட்டு அமைப்பாளர்கள் எம்மை விட்டு வைக்கவில்லை. உங்கள் பிரயாண ஒழுங்குகள் விபரத்தைத் தந்து உதவுங்கள் என நச்சரிப்பு(?) வந்து கொண்டேயிருந்தது. ஜுன் 22ந்தேதி நானும் எனது பிள்ளைகளும் கோயம்புத்தூரில் காட்சி தருவோம் என அறிவித்தேன். அது அவர்களுக்க நிம்மதி தரவில்லைப் போலும். உங்கள் பிரயாணத்திட்டத்தினை விபரமாகத் தாருங்கள் என்றார்கள். ஆகவே நான் பிள்ளைகளை முடுக்கினேன். நண்பர் காசி. நவம் எமக்கான பிரயாணச் சீட்டு ஒழுங்குகளைச் செய்தார். நாம் டுபாய் செல்வதென்றமையால் 'எமிறேட்ஸ்' விமான சேவை மூலம் பிரயாணம் செய்ய ஒழுங்குகள் செய்தார். சென்னையில் நாம் இரண்டு நாட்கள் தங்குவதாகத் தீர்மானித்தோம். எனது இளைய மகளுக்குப் போதீஸ், சென்னை சில்க்ஸ், நல்லீஸ் ஆகிய இடங்களில் நிறைய நேரம் செலவளிக்க வேண்டும் என்ற ஆசை. எனது கடன் அட்டைகளும், அமெரிக்கன் டொலர்களும் அவர்கள் கைபைக்குள் இடம்மாறியதால் நான் காப்பி குடிப்பதாயினும் அவர்களிடம் கை நீட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். சென்னையில் தனது விருந்தினர் விடுதியில் தங்கலாம், தான் விமானகூடம் வந்து அழைத்துச் செல்வேன் என டாக்டர் செந்தில்மோகன் எனது பிள்ளைகளுக்கு அறிவித்து விட்டார். வேடிக்கை என்னவென்றால் பிரயாணம்



பொ. கனகசபாபதி
Email: vlambaram@sympatico.ca

தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# மாணவர்கள் நினைவாற்றலையும், மன ஆற்றலையும் வளர்த்துக் கொள்வது எப்படி?

***Student how to improve their memory power and will power***

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

நாட்டின் எதிர்காலத்தை நடத்திச் செல்பவர்கள் நமது மாணவச் செல்வங்கள். அவர்களின் சிந்தனைகளைச் சிதறடிக்கத் தற்காலத்தில் பல சோதனைகள் அவர்களின் முன் நிற்கின்றன. இவைகளை எல்லாம் தாண்டித்தான் மாணவர்கள் முன்னேறிச் செல்ல வேண்டியுள்ளது. மாணவப்பருவத்தில் அவர்கள் படிப்பில் கவனம் செலுத்த முடியாத அளவிற்கு பல்வேறு தடைகள் கஷ்டங்கள் உள்ளன.



வாழ்க்கை முறையை தாமே, பிறர் உதவியின்றி வளப்படுத்தி வந்தனர். ஆனால் தற்போது மாணவர்கள் படிப்பதற்கு எங்கு பார்த்தாலும் கல்லூரிகளும், தனியார் கல்வி நிலையங்களும் பிற ஏராளமான வசதிகளும் பெற்றோரின் அதிக ஒத்துழைப்பும் கிடைக்கின்றன. இருந்த போதும் மாணவர்கள் மத்தியில் உற்சாகமின்மையும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையும் குறைவாக காணப்படுகின்றன. அத்துடன் அவர்கள் மத்தியில் ஆரோக்கியக் குறைபாடும் உள்ளன.



தற்போது மாணவர்களின் சிந்தனையைக் கவர்வதில் முதலிடம் வகிப்பது தொலைக்காட்சிதான். மாணவர்கள் மட்டுமன்றி குடும்ப உறுப்பினர்கள் ஏனையோரும் இரவிலும் பகலிலும் சினிமாப் படங்கள், பாட்டுகள், விளையாட்டுகள் போன்றவைகளை தொடர்ந்து பார்ப்பதால், அவர்களின் சிந்தனைகள் சிதறடிக்கப்படுகின்றன. அடுத்ததாக கணினி வலையமைப்புகள் (Computer - Internet) பலவும் மாணவர்களின் சிந்தனைகளை தவறான பாதையை நோக்கி நகர்ந்து செல்ல வழிவிடுகின்றன.

அதற்கு அடுத்தபடியாக சில பத்திரிகைகள் மாணவர்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்தில் ஆபாசச் செய்திகளையும், படங்களையும் வெளியிடுகின்றன. ஆனால் இந்தவித சூழ்நிலைகள் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் இருந்ததில்லை. மாணவர்கள் குருகுல கல்வி பயின்று தமது

இந்த நிலையில் பெற்றோர்கள் தான் தமது பிள்ளைகளுக்கு சிறுவயது முதல் யோகாசன பயிற்சியினைக் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக மாணவர்கள் அதிக நேரம் செலவிடத் தேவையில்லை. தினமும் 15 முதல் 20 நிமிடங்கள் இந்த பயிற்சிகளைச் செய்து வந்தால் மாணவர்களின் வாழ்க்கை முறையில் பெரிய மாற்றத்தைக் காணலாம். அவர்களிடம் தன்னம்பிக்கை ஏற்பட்டு சோம்பல் ஒழிந்து சுறுசுறுப்பு உண்டாகும். மாணவப் பருவத்தில் ஏற்படும் ஆர்ப்பாட்ட எண்ணங்கள் மறைந்து அமைதியான சிந்தனைத் திறன் வளர்ந்து அவர்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும். அத்துடன் அவர்களின் மனம் அமைதியடைந்து எண்ணங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு படிப்பில் கவனம் ஏற்பட்டு அதிக மதிப்பெண் கிடைக்க வாய்ப்புண்டாகும். இந்த வழிகளில் மாணவர்களின் மனப்போக்கு மாற இந்த

விடுமுறை காலங்களில் இந்த யோகப் பயிற்சியை மாணவர்கள் பழகி நல்வழிப்படுத்த பெற்றோர்கள்தான் அக்கறை எடுக்க வேண்டும்.

எனவே இந்த யோகாசனப் பயிற்சியில் ஞாபகசக்தி வளர, சோம்பல் ஒழிந்து சுறுசுறுப்படைய வைக்கும் சில முக்கியமான



பயிற்சிகள்

1. அர்த்த சிரசாசனம் - Head stard
2. விபரீத கரணி - Solder Stard
3. பத்மாசனம் - Lotus Pose
4. பட்னி மொத்தாசனம் - Forward Bend
5. தனுராசனம் - Bow Pose

போன்ற அதிக பலனை கொடுக்கக கூடிய ஆசனங்களை பழகுவதன் மூலம் மாணவர்கள் மிகுந்த உடலுறுதி, மனஉறுதி, மிகுந்த ஞாபகசக்தி போன்றவற்றை அடைந்து தமது எதிர்காலத்தை ஒளிமயமாக அமைத்துக் கொள்ள வழி உருவாகின்றது.



ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி

Diploma in Yoga Therapy (India)

416.289.2033 after 7:00pm


YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033



நீரிழிவு நோய்க்கு நிலையான தீர்வு

விசேஷ பொதி + DVD

Special Package For Healing Diabetes

1. நீரிழிவு யாருக்கு வரலாம்
2. நீரிழிவு நோயாளிகள் தெரிந்துகொள்ள வேண்டியவை
3. நீரிழிவை வெல்லும் யோகாசன சிகிச்சை முறை
4. தகுந்த உடற் பயிற்சிகள்
5. முறையான உணவுத் திட்டம்
6. நீரிழிவு - தாம்பத்தியம், குழந்தை பாக்கியம்
7. நீரிழிவு - பெண்களுக்கு ஓர் எச்சரிக்கை
8. சிறுவர்களும் நீரிழிவு நோயும் (Childhood Diabetes)
9. நீரிழிவை நிர்மூலமாக்கும் சித்த மருத்துவம்
10. இதைவிட மிஞ்சும் இயற்கை மருத்துவம்



1 நாள் பயிற்சி முகாம்

தொடர்புகளுக்கு

யோகரத்னா N. செல்வசோதி

Home: 416 - 289.2033

Cell: 416 - 617.5721

# தமிழர் திருமணம்

தமிழர் திருமண முறைகள் பற்றிய குறிப்புகளும், விளக்கங்களும் எமது தொன்னூலாகிய தொல்காப்பியம் முதலாகப் பல நூல்களில் எடுத்தாளப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு, நடைமுறைப் பாரம்பரியமாக வந்துள்ள போதிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இத்திருமண முறைகளின் அடிப்படை அம்சங்கள் பற்றிய கருத்தொருமைப்பாடும், புரிந்துணர்வும் பல்லினப்பண்பாட்டுத் தாக்கங்களினூடாக வளர்ந்து வருகின்ற எமது இன்றைய தலைமுறையினரிடையே, பொதுவாக தாயக தமிழ் மக்களிடையேயும், சிறப்பாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடையேயும் அருகி வருகின்ற கால கட்டத்தில், ஏற்கெனவே பல பேரறிஞர்களும், தலைவர்களும் எடுத்தாண்ட இத் தலையங்கத்திலே சில விடயங்களை நினைவில் மீட்டுரைக்க வேண்டிய காலத்தின் தேவை கருதி இக் கட்டுரை கருவானது.

**வைத்திய கலாநிதி இ. லம்போதரன்**
Knowingourroots@hotmail.com

## பழந்தமிழர் திருமண மரபு

திருமணம் என்பது இரு மனங்கள் இணைவதாகும். **"காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பெற்றதே இன்பம்"** என்று ஔவையார் பாடல் ஒன்று கூறுகின்றது. கருத்தொருமித்த ஆணும் பெண்ணும் தனிமையில் இணையும் இயற்கைப் புணர்ச்சியே உண்மையில் திருமணம் ஆகும். அவ்வாறிருக்க திருமணத்தை ஒரு சமுதாயச் சடங்காக்கியதன் பின்புலம் என்ன என்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்வாறான இயற்கைப் புணர்ச்சியில் இணைவது இருவராக இருந்தாலும் இதனால் ஏற்படும் பாதிப்பு அன்றிலிருந்து இன்றுவரை பெண்ணுக்குத்தான். இதன் விளைவாக கருவுறுவது பெண், குழந்தை பெறுவது பெண், அந்தக் குழந்தையை பாலூட்டி வளர்ப்பது பெண். இந்நிலையில் அவளின் கருவுக்குக் காரணமான ஆண் காதலிலும், கடமையிலும், பொறுப்பிலும் இருந்து தவறுவானாயின், பாதிக்கப்படுவது பெண் மட்டுமல்ல அவளின் வயிற்றில் கருவாகி, உருவாகி வரும் எமது சமுதாயத்தின் எதிர் கால சந்ததியும்தான். ஆரோக்கியமாக இருந்த ஆண் பெண் உறவில் பொய்யும், ஏமாற்றும் புகுந்தபொழுது திருமணம் என்கின்ற சடங்கு உருவாக்கப்பட்டது என்று தொல்காப்பியம் கூறுகின்றது. **பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப- தொல்,பொரு-143.**

இன்றைய சமுதாயத்திலேயே பிரிவினால் ஏற்படும் தனி மனித, குடும்ப, பொருளாதார, சமூக, உளவியல் பாதிப்புகள் பாரியனவாக இருக்குமிடத்து, ஆணே பொருளீட்டுவோனாக வும், வழங்குவோனாகவும், பாதுகாப்போனாகவும் விளங்கிய அன்றைய சமுதாயத்திலே இதன் பாதிப்பு எத்துணை பாரியதாக இருந்திருக்கும் என்பதை நாம் ஊகித்தறியலாம். தனது பொறுப்பிலிருந்தும், கடமையிலிருந்தும் ஆண் வழுவாதவிடத்தும், போரினாலும், வேட்டையாலும், வீர விளையாட்டுகளாலும் அவனுக்கு எதிர்பாராத உயிரிழப்பு அல்லது ஊனம் ஏற்படுமிடத்து, பெண்ணுக்கும், அவள் வயிற்றிற் பிறந்த சந்ததியினருக்கும் உரிய பாதுகாப்பையும், காப்புணர்வையும் வழங்குகின்ற பொறுப்பு உறவுகளையும் மூத்தோரையும் உள்ளடக்கிய திருமணச் சடங்குகளினூடாக



சமுதாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதையும் காண்கின்றோம்.

இவ்வகையாக வகுக்கப்பட்ட பழந்தமிழர் திருமண முறைகளின் விபரங்களை தொல்காப்பியத்தில் காண்கின்றோம். கொள்ளுதற்குரிய மரபினையுடைய மணமகன் தனக்கு சடங்கு மூலமாகக் கொடுக்கப்படுகின்ற மணமகளை ஏற்றுக்கொள்ளுதல் கற்பு மணம் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. **"கற்பெனப் படுவது கரணமொடு புணரக், கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக், கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்ளுவதுவே"-தொல்,பொரு-140.** அதேவேளை மற்றையோர் அறியாமல் காதலர் இருவரும் தாமே கூடிச் சேருவது களவு மணம் என்று அகத்துறை இலக்கியங்கள் பேசுகின்றன. இவ்வாறு கொள்வோரும், கொடுப்போரும் இல்லாமலும் கூடும் காதலர்கள் யாருமறியாமல் ஊரை விட்டு நீங்கி தமது வாழ்க்கையை தொடங்கும் வழமை உடன்போக்கு எனப்படுகின்றது. **"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே, புணர்ந்து உடன் போகிய காலை யான"-தொல்காப்பியம்-பொரு-141.** அக்கால சாதிமுறைச் சமுதாயத்தில் அந்தணர், அரசர், வணிகர் ஆகிய முக்குலத்தோருக்கும் உரியதாகிய சடங்குடன் கூடிய திருமணம் நாலாவது சாதிக்காரருக்கும் உடையதாக இருந்தது என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது. **"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம், கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே"- தொல்காப்பியம்-பொரு-142.** அக்காலத்து வட நாட்டு மரபாக இருந்த வற்புறுத்திப் பெண்ணை எடுத்துச் சென்று புணரும் இராட்சத விவாகம் போன்ற எட்டு வகையான திருமண மரபுகளை பழந்தமிழர்கள் அறிந்திருந்தார்கள் என்பதும் தொல்காப்பியத்தினால் அறியக் கிடைக்கின்றது. **"மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள் துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"- தொல்காப்பியம்- பொருள் - 89.** ஆயினும் முன்னர் சொன்ன கற்பு நெறி, களவு நெறி தவிர்ந்த ஏனைய மரபுகள் தமிழர் திருமண நெறியாகக் கொள்ளப்பட்டதற்கான இலக்கிய, வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

இவ்வாறாக தொல்காப்பிய காலத்துக்கு முற்பட்ட கடல் கோள் கொண்ட காலத்துக்கு முன்னிருந்தே பலமான, உரமான பண்பாட்டு, வரலாற்று, இலக்கிய, இலக்கண, வாழ்க்கை மரபுடன் இணைந்த தமிழர் திருமண மரபு வழங்கி வந்திருப்பது புலனாகின்றது. இந்த மரபை இங்கு சங்க இலக்கியங்களில் வழங்கும் தமிழர் திருமண மரபாகவும், சமய இலக்கியங்களில் வழங்கும் தமிழர் திருமண மரபாகவும் இரண்டு விதமாகப் பகுத்து ஆராளிவது எனது நோக்கம். - தொடரும்

# உலகத்தமிழ்...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

சம்பந்தமான எல்லாத் தொடர்புகள் பொறுப்புக்களையும் எனது பிள்ளைகளே ஏற்றுக்கொண்டனர். செந்தில்மோகன் ஒரு பிரயாண முகவரகத்துடன் தொடர்பு படுத்தி விட்டார். அவர்கள் மூலம் கேரளா பிரயாண ஒழுங்குகள் செய்யப் பட்டன. ஆகவே ஓரளவுக்கு முழுமையான பிரயாண ஒழுங்குகள் செய்யப் பட்டதும் செம்மொழி மகாநாட்டு அமைப்பாளர்களுக்கு எமது விபரமான பிரயாணத் திட்டத்தினை எனது பிள்ளைகள் என் சார்பில் அனுப்பி வைத்தனர். அதில் 15ந்தேதி 'எமிரேற்ஸ்' விமானமூலம் சென்னை வருவதாகவும் 22ந்தேதி Jet Air மூலம் கோயம்புத்தூர் வருவதாகவும் அறிவித்தார்கள்.

15ந் தேதி டுபாயினில் இருந்து சென்னையை அடைந்தோம். நான் சக்கர நாற்காலியில் கொண்டு செல்லப் பட்டேன். எனது மூத்தமகள் கடவுச்சீட்டு விவகாரங்களைப் பார்த்துக் கொண்டபோது எனது சின்னமகள் ஒப்பனை அறைக்குச் சென்றாள். (Washroom) எத்தனை முன்னேற்றம் பாருங்கள்!!. சிறுநீர் கழிப்பிடம், (Urinal, lavatory) மலகூடம் (Toilet) என்ற பெயர்கள், கழுவும் அறை (Wash room) என மாறி, தொடர்ந்து ஓய்வு அறையாகி (Rest room) இப்போ ஒப்பனை அறை எனப் புதிய நாமகரணம் பெற்றுள்ளது.

ஒருவர் கனகசபாபதி என எழுதப்பட்ட அட்டையுடன் நிற்பதைக் கண்டு, அவரிடம் மகள் சென்று அது எனது அப்பா, நீங்கள் டாக்டர் செந்தில்மோகன் அனுப்பிய ஆளா என விசாரித்தாள். அதற்கு அவர் இல்லை, நான் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் ஊழியர். உங்களது அப்பாவினை வரவேற்பதற்காகக் எதிர்பார்த்து நிற்கிறேன் என்றாராம். நாம் கடவுச்சீட்டு விவகாரம் முடிந்து வெளியே வந்ததும் அவர் என்னிடம் வந்து தன்னை அறிமுகம் செய்தார். எம்மை ஒரு ஊர்தியில் ஏற்றி ஒரு ஓட்டலில் தங்க வைக்குமாறு தனக்கு உத்தரவு உள்ளது என்றார் நண்பர். நான் எனது நண்பருடன் தங்கவுள்ளேன். அவரது ஊர்தி என்னை அழைத்துச் செல்வதற்காக வரும் என்ற போதும் நண்பர் எம்முடன் நின்று எமது பொதிகளை எடுப்பதற்கு உதவியதோடல்லாமல் ஒரு போர்டரை அழைத்து எமது பொதிகளை வெளியே மோட்டார் ஊர்தி நிறுத்தும் இடம் வரைக்கும் எடுத்துச் செல்ல வைத்து எம்முடன் கூடவே வந்தார்.

அன்றையதினம் திடீரென டாக்டர் செந்தில்மோகன் வீட்டில் ஒரு விசேடம் நடந்துள்ளது. அவரது மூத்த பெண்குழந்தை பூப்படைந்து விட்டாள். ஆகவே அவர் விமான கூடம் வருவதற்குத் தாமதமாகி விட்டது. நாம் வெளியே வந்தபோது அவரது ஊர்தியைக் காணவில்லை. சிறிது நேரம் பொறுமையாக இருந்தோம். நண்பருக்கோ வில்லங்கமாக இருந்தது. ஆகவே அவரை எத்தனை தரம் நீங்கள் போங்கள், நண்பர் வருவார் நாம் அவருடன் போவோம் எனக் கூறினாலும் அவர் அசைந்தபாடில்லை. கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு நாம் வந்துள்ளதாகவும் எமது நண்பர் இல்லத்தில் தங்கப் போவதாகவும் தகவல் கொடுத்தார். அவர்கள் எம்மை அனுப்பிய பின்னரே அவ்விடத்தை விட்டேகுமாறு பணித்தமையால் நாம் வேறு வழியின்றிச் செந்தில்மோகனது செல்லிடபேசி எண்ணினைக் கொடுத்தோம். அவர் செந்தில் மோகனுடன் தொடர்பு கொண்டபோது அவர் வந்து கொண்டிருப்பதாகத் தெரிந்தது. அதன் பின்னர் தான் நண்பருக்கு நிம்மதி பிறந்தது. இறுதியில் செந்தில்மோகன் வந்ததும் எம்மையும் எமது பொதிகளையும் ஊர்தியில் ஏற்றிய பின்னரே விடை பெற்றுச் சென்றார். இதனை நான் இத்தனை விபரமாகச் செல்வதற்கான காரணம் பங்கேற்க வரும் வெளி நாட்டவர்களின் வசதி பற்றி எத்தனை தூரம் கவனத்தில் கொண்டுள்ளார்கள் என்பதனைக் காண்பிப்பதற்கே. நாம் 22ந்தேதி கோயம் புத்தூர் வருவோம் என அறிவித்திருந்தோம். ஆகவே அன்றைய தினம் எம்மைப் பொறுப்பேற்றிருந்தாலே போதுமானதாக இருந்திருக்கும். ஆனால் இவர்களோ நாம் தமிழ்நாட்டில் அடி எடுத்து வைத்த அன்று தொடக்கமே எமக்கான பொறுப்பினை எடுத்தமை மிக ஆச்சரியமாக இருந்தது. அதே போன்றே நாம் 22ந்தேதி கோயம்புத்தூர் விமான தளத்தினில் இறங்கியதும் எம்மை இனங்கண்டு பொன்னாடை போர்த்து ஒரு தனிப்பட்ட ஊர்தியில் எமக்கென ஒதுக்கிவிடப்பட்ட ஓட்டலுக்கு அனுப்பி தங்க வைத்ததும் பாராட்டுக்குரியது.

கனடாவிலிருந்து சென்ற பிரதிநிதிகள் பெருமைப் படக்கூடியதாக அமைந்தது பேராசிரியர் சுப்பிரமணியனுக்கு அமைப்பாளர்கள் கொடுத்த கௌரவம். பேராசியருக்கு விசேட அதிதிக்கான கௌரவம் கொடுக்கப் பட்டது. அவருக்கென ஒரு உதவியாளர் சகிதமான தனி ஊர்தி வழங்கியும் இருந்தார்கள். ஐயா அவர்கள் தனது கட்டுரையினை வாசித்ததோ டல்லாமல் பொழிவரங்கம் என்ற ஒரு சிறப்புக் கூட்டத்திலும் பங்கு கொண்டார்கள். அங்கே அவர்களது உரை மிகவும் கனமிக்கதாக அமைந்திருந்ததுடன் பலரது சந்தேகங்களுக்கும் ஐயா அவர்கள் கொடுத்த விளக்கம் பார்வையாளர்களின் ஏகோபித்த பாராட்டுக்களையும் பெறுவதாக இருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு விடுமுறையா? நானும் எனது மகள்மாரும் ஸ்ரீராம் ஓட்டலை வந்தடைந்தபோது அங்கே பரிச்சயமான முகங்கள் பல இருப்பதைக் காண முடிந்தது. சிலர் கனடாவிலிருந்து சென்றவர்கள். பலர் இலங்கையிலிருந்து வந்தவர்கள். யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து பலர் வந்திருந்தார்கள். இரவு உணவு நேரத்தின் போது அவர்கள் பலரைக் காண முடிந்தது. என்ன யாழ்ப்பாணபல்கலைக் கழகம் விடுமுறை விட்டாய்விட்டதா என ஒரு நண்பரைக் கேட்டேன். இன்னும் சிலர் வந்திருப்பார்கள் அவர்களுக்கு விசா கிடைப்பதற்குக் காலதாமதமாகி விட்டது என்ற பதில் கிடைத்தது.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

REALTY EXECUTIVES®
GTA LTD.
Brokerage.

9889 Markham Rd. (Hwy 48),
Suite 209
Markham ON L6E 0B7

Office: 905-209-7500
Fax: 905-209-7501




Lucky Winner of a Plasma TV
2010 South Asian Trade Show!


Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343


Yoga
Sivagnanasundaram*
(647)-836-0844


Pravisha
Nagaretnam*
(416)-727-7686


Kumaran
Pathmanathan*
(647)-273-7359

MLS MULTIPLE LISTING SERVICE

Each Office is Independantly Owned and Operated. Sales Representative *

# குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பது சம்பந்தமாக பெற்றோருக்கான சில முக்கிய

சிறந்த பெற்றோராக வாழ வேண்டுமானால் உங்கள் கடமை என்பது குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பது தான். அதைத் தவிர வேறு எதுவும் இல்லை. குழந்தைகளோடு இருக்கின்ற நேரங்களில் பெற்றார் உண்மையாகவே மகிழ்ச்சியாக இருக்கின்றார்களா? குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக இருப்பதாக பேரம் பேசிவிட்டு அதேநேரத்தில் தமது அன்றாட வேலைகளை முழுமூச்சில் கவனிக்கிறார்களா? கடைகளுக்குச் செல்வது, உறங்குவது அடுத்த வீட்டுப் பெண்களுடன் அரட்டை அடிப்பது, வீட்டைப் பராமரிப்பது ஆகிய வேலைகளில் அதிக நேரத்தைச் செலவிடுகிறார்களா?



இவை போன்ற செயல்களில் பெற்றோர் ஈடுபடும் போது குழந்தைகளின் மீது தமது தனிப்பட்ட கவனத்தைச் செலுத்த முடியாமல் போய்விடும் என்பதும் உண்மைதான். குழந்தைகளிடம் தங்கள் அன்பை எத்தனை பெற்றோர் அழகாக வெளிப்படுத்தி இருக்கிறார்கள்? உங்கள் வார்த்தைகளைக் கேட்டு நடந்ததற்காக உங்கள் குழந்தைகளைப் பாராட்டி இருக்கிறீர்களா?

உங்கள் குழந்தைகளின் நல்ல நடத்தையை எப்போது மன மகிழ்வோடு ஒப்புக்கொண்டீர்கள் அல்லது பெருமைப்பட்டீர்கள் எனக் கூறமுடியுமா? உங்கள் குழந்தை ஆர்வமாக கதை சொல்லும் போது அதை உற்றுக் கேட்டு மகிழ்ந்தீர்களா? எல்லாவற்றையும் விட எமக்கு நீங்கள் தான் மிகவும் முக்கியம்

தொடர்ச்சி 35ம் பக்கம்

REDUCE FEES INCREASE PROFITS
DEBITTECH POS
BENEFITS
Free 24/7 help desk
4 hrs on-site service
Gift & loyalty cards
Use it as ATM and generate revenue
Sell phone cards
(Cellular & Long Distance)
ACCREDITED BUSINESS BBB


CounterTop $23.95 (Dial/IP)


Wireless $39.95 (Delivery)


Pay @ table $44.95 (Dial/IP)

We Will Beat Any Competitors Offer Guaranteed

1.49%*
*Some conditions apply
Other services



Tel: 1-888 640-5479
www.debittechpos.com




# தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருதுகள்

கனடிய தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருது வழங்கும் விழா இந்த வருடம் இரு பிரிவுகளாக கொண்டாடப்பட்டது. இயல் விருது விழா சென்னையிலும் மற்றைய விருதுகளுக்கான விழா ரொறொன்ரோ பல்கலைக் கழக மண்டபத்திலும் நடைபெற்றன.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழிலக்கியத்தில் தீவிர சிந்தனையாளராக வும், கோட்பாட்டாளராகவும், திறனாய்வாளராகவும் இயங்கி வந்த திரு கோவை ஞானிக்கும், கல்வெட்டு ஆராய்ச்சிகள் மூலம் தமிழின் தொன்மையை உலகுக்கு உணர்த்திய திரு ஐராவதம் மகாதேவனுக்கும் இவ்வருடத்திய இயல் விருதுகள் வழங்கப்பட்டன.

ரொறொன்ரோ பல்கலைக்கழக மண்டபத்தில் 17 ஜூலை அன்று நடைபெற்ற விழாவில் ஏனைய விருதுகள் வழங்கப்பட்டன. புனைவு விருது ஜெயமோகனுடைய கொற்றவை நாவலுக்கு வழங்கப்பட்டது. அபுனைவு பிரிவில் இரு பரிசுகள் வழங்கப்பட்டன. ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியத்துக்காக கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்களுக்கும் ஆஷ் கொலையும் இந்தியப் புரட்சி இயக்கமும் என்ற நூலை எழுதிய ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களுக்கும் இந்தப் பரிசுகள் வழங்கப்பட்டன. கவிதை விருது "பூமியை வாசிக்கும் சிறுமி" கவிதை தொகுப்புக்காக கவிஞர் சுகுமாரனுக்கு வழங்கப்பட்டது.

சுந்தர ராமசாமி நினைவாக வழங்கப்படும் கணிமை விருது இந்த வருடம் தமிழ் லினக்ஸ் கே.டி.ஈ குழுவினருக்கு வழங்கப்பட்டது. மாணவர் பரிசுத்திட்டத்தின் கீழ் அவர் எழுதிய கட்டுரைக்காக கிருபாளினி கிருபராஜாவுக்கு பரிசு வழங்கப்பட்டது.

விழாவில் சிகாகோ பல்கலைக் கழக பேராசிரியர் சாஷ எபலிங் (Sascha Ebeling) சிறப்புரை ஆற்றினார்.





# நார்த்தாமலை - சமணர் படுகைகள்

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 81

திருச்சியிலிருந்து புதுக்கோட்டை செல்லும் வழியில், சுமார் 30 கிலோமீட்டர் கடந்ததும் பிர-தான சாலையிலிருந்து சற்று தள்ளி ஒரு சிறிய குன்று தெரியும். அந்த வழியாக பயணம் செய்யும் அனைவரும் பார்த்திருப்போம். மரம், செடி, கொடிகள், பாறைகள் என எல்லாக் குன்றுகளைப் போல் இதுவும் ஒன்று என நினைத்துக்கொண்டு கடந்திருப்போம். சிலர் அந்த அளவுக்குக்கூட அதைக் கவனிக்காமல் சென்றிருப்போம். ஆனால், அந்தக் குன்று 2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தின் மிக முக்கியமான ஒரு வணிக நகரமாக, ஆன்மீக ஸ்தலமாக, போக்குவரத்து மிகுந்த இடமாக இருந்திருக்கிறது. சோழர் காலத்து கற்கோவிலும் குடைவரை கோவிலும் என பழங்காலத் தமிழர்களின் பாரம்பரியத்தை இன்றும் நமக்குச் சொல்லிக்கொண்டிருக்கும் வரலாற்று சிறப்பு மிக்க இடங்களில் நார்த்தாமலையும் ஒன்று. அழகான கட்டமைப்பும் வேலைப்பாடுகளும் மிகுந்த கலையழகுக்கு பெயர்பெற்ற பல கோயில்கள் இங்கு உள்ளன.

**வழிப்போக்கன்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கருவேல மரங்களும் வேப்ப மரங்களும் மிகுந்திருக்கும் கிராமப்புறங்களின் வழியாக சென்றால், மணற் பிரதேசமும் பாறைகளும் என மாறி மாறி வருவதைப் பார்க்கலாம். சிறு சிறு பாறைகள், சிறிய மலைகள் என தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இருந்து புதுக்கோட்டை வித்தியாசமானது. இங்கு சாலையோர வயல்களின் நட்ட நடுவில் திடீரென்று முளைக்கும் பிரம்மாண்டமான பாறைகள் விசித்திரமானவைதான். எங்கே பார்த்தாலும் சிறிதும் பெரிதுமாகப் பாறைகள், பாறைகள், பாறைகள். இப்பேர்ப்பட்ட பாறைப் பிரதேசத்தில் ஏன் சிற்பங்களாக செதுக்கித் தள்ளியிருக்க மாட்டார்கள்? அதுவும் நார்த்தாமலையில் மொத்தம் ஒன்பது குன்றுகள் உள்ளன. கலையார்வம் கொண்ட பழங்கால தமிழ் அரசர்களின் வேட்கைக்கு கேட்கவா வேண்டும்.

மேலமலை, கோட்டை மலை, கடம்பர் மலை, பறையர் மலை, உவக்கன் மலை, ஆளுருட்டி மலை, பொம்மாடி மலை, மண் மலை, பொன் மலை என ஒன்பது மலைக்குன்றுகளுக்கு மத்தியில் ஓங்காரமாய் அமைந்து விளங்குகிறது, நார்த்தாமலை. நிமிர்ந்து நிற்கும் இந்த மலைக்குன்றுகள் ஒவ்வொன்றும் ஒரு பழங்கதையை உணர்த்தக் கூடியவை. இராமன் - இராவணன் போரில் மாண்ட வீரர்களை உயிர்ப்பிக்க, வடக்கிலிருந்து சஞ்சீவி மலையை வாயு புத்திரனாகிய அனுமான் அடியோடு பெயர்த்து வான் வழியே அதைத் தூக்கி வரும் போது அம்மலையிலிருந்து சிதறி விழுந்த சிறு துகள்கள்தான் நார்த்தாமலையில் உள்ள இந்த ஒன்பது குன்றுகளும் என்பது ஐதீகம். நாரதர் பெருமான் இம்மலையில் வந்து தங்கியதால் நாரதர் மலை என்று வழங்கப்பட்டதாகவும், அது காலப்போக்கில் நார்த்தாமலை என்று ஆனதாகவும் தலவரலாறு சொல்கிறது.



கி.பி. 9 - 10 நூற்றாண்டுகளில் நார்த்தாமலையில் உள் நாட்டு, வெளி நாட்டு வாணிபம் நடைபெற்று வந்திருக்கிறது என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. செல்வம் கொழிக்கும், வாணிபம் பெருகும் நகரமாக, வணிகர்களின் முக்கிய வியாபாரத் தளமாக அக்காலத்தில் நார்த்தாமலை இருந்திருக்கிறது. குறிப்பாக, 'நானாதேசத்து ஐநூற்றுவர்' என்கிற வணிகர் குழுவிற்கு தலைமைச் செயலகமாக இந்த ஊர்தான் இருந்திருக்கிறது என கல்வெட்டு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கி.பி. 7, 9ஆம் நூற்றாண்டுகளில் நார்த்தாமலை பாண்டியர், பல்லவர்களின் ஆளுகைக்கு உள்பட்டிருந்திருக் கிறது. இவர்களது மேலாண்மைக்கு உள்பட்டு 'முத்திரையர்' என்ற சிற்றரசர்கள் இப்பகுதியை ஆண்டு வந்திருக்கின்றனர். கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவலின் முதல் பாகத்தில் வந்தியத்தேவனின் 'குருதையை' பழுவூர் வீரர்கள் கிண்டலடிப்பார்களே... அந்த முத்தரையர் குலம்தான். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் விஜயாலய சோழன் தஞ்சையில் சோழர்களின் ஆதிக்கத்தை மீண்டும் நிறுவிய போது, இப்பகுதியும் அவனது ஆட்சிக்குட்பட்டிருக்க வேண்டும். இங்குள்ள கல்வெட்டு ஒன்றில் இவ்வூர் அக்காலத்தில் 'தெலுங்கு குலகாலபுரம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் இராஜராஜனின் ஆட்சிக் காலத்தின் பொழுது 'தெலுங்குக் குலகாலபுரம்' என்று அம்மன்னனின் பட்டப்பெயர் களில் ஒன்றால் நார்த்தாமலை அழைக்கப் பட்டிருக்கிறது என இதிலிருந்து தெரிகிறது. பின்னர், இவ்வூர் குலோத்துங்க சோழப்பட்டணம் என்று அழைக்கப்பட்டதாக மூன்றாம் குலோத்துங்கன் காலத்து கல்வெட்டு ஒன்று கூறுகிறது. கி.பி 14ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், மதுரையில் சுல்தான் ஆட்சி ஏற்பட்டபோது இப்பகுதியும் அவரது ஆட்சியில் வந்தது. பின்பு மதுரை நாயக்கர்களும் பின் பல்லவராயர்களும் ஆண்டனர். இறுதியாக தொண்டைமான் மன்னன் இப்பகுதியை தனக்கு சொந்தமாக்கிகொண்டான். சிறு குன்றுகள் நிறைந்த இடமாதலால் ராணுவ தளவாடங்கள் வைப்பதற்கு சிறந்த இடமாக இதனை அக்கால அரசர்கள் கருதியிருக்க வேண்டும். அவ்வகையில் இந்த இடத்தை பயன்படுத்தி வந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. அதன் அடையாளங்களை இன்றும் காணலாம். இதனாலேயே இந்த ஊருக்கு அக்காலத்தில் அதிக முக்கியவத்துவம் ஏற்பட்டிருக்கலாம் எனச் சொல்கிறார்கள்.

நார்த்தாமலை கோயில்கள் தமிழர்களின் கட்டடக் கலையின் பாரம்பரிய சிறப்பை இன்றும் ஏற்றமிக சொல்லிக்கொண்டிருப்பவை. கோவில் கட்டடவகை நகரா, திராவிட, வேசரா என மூன்று வகைப்படும். தமிழகத்திலுள்ள கோவில்கள் அனைத்தும் திராவிட கலைப்பாணியில் அமைந்தவை. இந்நிலையில், நார்த்தாமலையில் உள்ள விஜயாலய சோழீச்சுரம் கோயில் வேசரா கலைப்பாணியில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தக் கலைப்பாணியில் அமைந்த கோவில் தமிழகத்தில் இது ஒன்றே! வேசரா பாணியில் விமானத்தின் சிகரம் வட்டமாக இருக்கும். இக்கலைப்பாணியை மஹாபலிபுரம் ரதங்களிலும் இவற்றின் அருகிலுள்ள வலயங்கட்டி கோவில் ரதங்களிலும் ஓரளவு காணலாம். ஆனால், இந்தக் கலைப்பாணி விஜயாலய சோழீச்சுரம் கோவிலில் முழுமை அடைந்து காணப்படுகிறது.

ஊரிலிருந்து அன்னவாசல் செல்லும் சாலையில் இருக்கிறது, மேலமலை. அதன் அடிவாரத்தில் சிறு குளம் ஒன்று இருக்கிறது. அங்கிருந்து சிறிது சிறிதாக உயர்ந்து செல்கிறது குன்று. முதலில் பிள்ளையார் கோயில் உள்ளது. அதன் பின்புறம் தலையருவிசிங்கம் என்ற சுனை உள்ளது. அங்கிருந்து பார்க்கும்போது சுற்றிலும் உள்ள மற்ற குன்றுகள் தெரிகின்றன. ஊரின் தென்கிழக்கே மரங்கள் அடர்ந்த சிறுமலைகள் இருக்கின்றன. இந்தக் காடுகள் ஆண்டு முழுவதும் பசுமை மாறாத முட்புதர் காடுகளாகும் என்கிறார்கள் ஊர்க்காரர்கள். நீண்டு செல்லும் இந்தக் குன்றின் முக்கால் பங்கு உயரத்தில் விஜயாலய சோழீஸ்வரம் கோயில் உள்ளது. இக்கோயிலை முத்தரையர் தலைவர் இளங்கோ அடி அரையன் கட்டியுள்ளார். சோழர் காலத்தில் கட்டப்பட்ட முற்பட்ட சிவன் கோயில்களில் இதுவும் ஒன்று என்கிறார்கள்.

மேற்கு நோக்கியுள்ள விஜயாலய சோழீச்சுரம் 1250 சதுர அடிப்பரப்பில் முழுவதும் அமைந்த கட்டுமானமாகும். கோயில் என்று பார்த்தால் சிறியதுதான். ஆனால், இதன் கலையழகும் வரலாற்று சிறப்பும் இதை மிக முக்கியக் கோயிலாக்குகிறது. இக்கோயில் கருவறை வட்டமாக அமைந்துள்ளது. இரு துவாரபாலகர்கள் ஒயிலாகச் சன்னதியைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது இந்து சாத்திர நூல்களில் கூறப்படும் பிரணவ அல்லது ஓங்கார அமைப்பை ஒத்ததாக உள்ளது. கருவறையை சுற்றிலும் பிறை வடிவிலான சிறு சுற்று வழி உள்ளது. அதையடுத்து நான்கு பக்கங்களிலும் லிங்கம் உள்ளது. கருவறையின் வெளிச் சுவற்றில் மாடங்கள் இல்லை. கருவறைக்கு முன்னால் அர்த்தமண்டபம் ஒன்று உள்ளது. இம்மண்டபத்தை ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இம்மண்டபத்து வாயில் காப்போர் சிற்பங்கள் பல்லவர் கால கோவில்களில் உள்ளது போல கலையழகு மிக்கவை. இக்கோவில் விமானம் மிகச் சிறப்பானது. இது நான்கு அடுக்குகளை கொண்டது. உட்புறம் கூடாக உள்ளது. விமானத்தின் மாடங்களில் வீணாதர தட்சிணா மூர்த்தி, உமா மகேஸ்வரர் சிற்பங்கள் அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டு இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. வடக்கு சுவற்றின் பைரவர் ஓவியம் அழிந்தும் அழியாமலும் எஞ்சியுள்ளது. இது தமிழர்களின் ஓவியக் கலைப்பாணிக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. கோவிலின் துவார பாலகர் சிற்பப் பீடத்தில் ஒரு கல்வெட்டு உள்ளது. முத்தரையர் தலைவனான இளங்கோ ஆதி அரையன் என்பவரால் இந்தக் கோயில் கட்டப்பட்டது என்பதற்கான சான்றுகளை துவாரபாலகர்களுக்கு அடியில் உள்ள இந்தக் கல்வெட்டு தெரிவிக்கிறது. இதிலிருந்து விஜயாலய சோழன் காலத்திற்கு முன்பே இக்கோயில் கட்டப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. ஆனால் இக்கோவில், 'விஜயாலய சோழீச்சுரம்' என்றே அழைக்கப்படுகிறது. சோழர்கள் காலத்தில் அவர்கள் இதனை மேம்படுத்தியிருக்க வேண்டும், அதனாலே இப்பெயர் உண்டாகியிருக்கும்.

விஜயாலய சோழீச்சுரம் கோயிலைச் சுற்றி ஆறு சிறு கோயில் கட்டுமானங்கள் உள்ளன. பரிகார தேவதைகளுக்கான ஆறு சிறு கோவில்கள் என்கிறார்கள். ஏழாவது கோவிலில் அடித்தளம் மட்டும் காணப்படுகிறது. முதலில் எட்டு கோவில்கள் இருந்திருக்க வேண்டும். பழங்காலத்தில் கோவிலைச் சுற்றி சுற்று மதில் ஒன்றும் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. விஜயாலய சோழீச்சுரம் கோயிலுக்கு முன்புறம் உள்ள பாறையில் குடையப்பட்டுள்ள சிறிய குகைக் கோயில் பழியிலி ஈச்சுரம் எனப்படுகிறது. பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் காலத்தில், கி.பி. 826 - 849ஆம் ஆண்டுகளில், முத்தரையர் தலைவன் 'சாத்தன் பழயிலி'யால், 'பழையிலி ஈஸ்வரம்' என்னும்

தொடர்ச்சி 23ஆம் பக்கம்



# தில்லாலங்கடி - திரை விமர்சனம்

'ஜெயம்', 'ஆ.குமரன் சன் ஆ.்.ப் மகாலட்சுமி', 'உனக்கும் எனக்கும்', 'சந்தோஷ் சுப்பிரமணியம்' திரைப்படங்கள் வரிசையில், ஜெயம் ரவி, இயக்குநர் ராஜா சகோதரர்கள் மீண்டும் இணைந்து தெலுங்கில் பெரும் வெற்றி பெற்ற ஒரு படத்தை தமிழுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தெலுங்கு 'கிக்', தமிழில் 'தில்லாலங்கடி'. ஆனால், வழக்கமாய் குடும்பக் கதை, காதல் கலந்த படங்களையே 'காப்பி' எடுக்கும் ராஜா, இம்முறை கொஞ்சம் அதிரடி சண்டைகள் நிறைந்த கதையுடன் வந்திருக்கிறார். 'சிங்கம்' வெற்றிக்குப் பிறகு சன் பிக்சர்ஸ் வெளியிடும் படம் என்பது காரணமாக இருக்கலாம்.



எந்த செயலைச் செய்தாலும், அதை மற்றவர்களை காட்டிலும் வித்தியாசமாக, சில நேரங்களில் மற்றவர்களுக்கு விபரீதமாகவும் இருக்கும்படி செய்யும், ஒரு வித்தியாச பேர் வழி கிருஷ்ணா. தன் நண்பனின் திருட்டு காதல் திருமணத்துக்கு உதவுகிறேன் என்று, அவர்களின் திட்டம் எல்லாவற்றையும் பெண்ணின் அம்மாவுக்கே தெரியப்படுத்திவிட்டு, கடைசி நேர ஓட்டம், குழப்பம் எல்லாவற்றையும் மீறி திருமணத்தை நடத்தி வைக்கிறான். "ஏன் இப்படி செய்தாய்" என்றால், "சும்மா ஓடி வந்து கல்யாணம் செய்துகொண்டால் அதிலென்ன 'கிக்' இருக்கும், அதனால் தான்" என்கிறான்.



இப்படி, எதுவும் சுலபமாக கிடைத்துவிட்டால் அதில் ஒரு 'கிக்' இருக்காது என்பதால், எல்லாவற்றிலும் ஏதோ ஒரு தில்லாலங்கடி வேலை செய்து அந்த பிரச்சனையை சமாளிப்பதில் 'கிக்கு' அனுபவிப்பவர் கிருஷ்ணா. ஒரு லட்சம் சம்பளம் கொடுத்தாலும், அந்த வேலையில் இந்த 'கிக்' இல்லையென்றால் அந்த வேலையை விட்டுவிட்டு, வேறு வேலைக்கு சென்றுவிடும் குணம் படைத்தவர். வாழ்க்கையை வாழ்ந்தோம், போனோம் என்றில்லாமல் ரசித்து முழு மனத் திருப்தியோடு வாழவேண்டும் என நினைப்பவர். இந்தத் தில்லாலங்கடி வேலைகள் அவர் செய்யும் இரண்டு முக்கியமான விஷயங்களில் தொடர்கிறது. ஒன்று மற்றவர்களுக்காக சமுதாயத்தில் அவர் செய்யும் பணி, மற்றொன்று நிஷாவுடனான காதல்.

நிஷா தங்கை கிருஷ்ணாவைக் காதலிப்பதாய் சொல்ல, அறியாத வயதில் இருக்கும் அவள் காதலைத் தடுக்க, "நான் கிக்குக்காக எதையும் செய்பவன், மொள்ளமாறி, முடிச்சவுக்கி என்று உன்னை பற்றி என் தங்கையிடம் கேவலமாய் சொல்" என்று கிருஷ்ணாவிடம் கேட்கிறாள், நிஷா. கிருஷ்ணாவும் அப்படியே சொல்கிறான். ஆனால், ஒரு கிக் வேண்டும் என்று கடைசியாக, "நான் ஒரு பெண்ணை காதலிக்கிறேன், அது வேறு யாருமில்லை உன் அக்காதான்" என்கிறான். இது தெரிந்து, "நான் உன்னை லவ் பண்ண மாட்டேன்" என்று கோபப்படுகிறாள் நிஷா. ஆனால், அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக, அவனது தில்லாலங்கடி தனத்தில் மயங்குகிறாள். ஒரு கட்டத்தில் 'கிக்'குக்காக அலையாமல் ஏதாவது ஒரு இடத்தில் நிரந்தரமாய், உருப்படியான வேலை செய்து சம்பாதித்தால் அவனை காதலிப்பதாய் சொல்கிறாள். அதற்காக ஒரு வேலையில் சேர்ந்து, பின் வேலை விட்டுவிடுகிறான், கிருஷ்ணா. அதனால் அவர்கள் காதல் பிரிகிறது.

இதுவரைக்கும் தில்லாலங்கடி வேலைகள் செய்துகொண்டு விளையாட்டுப் போக்காய் சாதாரணமாக அலையும் ரவி, உண்மையில் ஒரு மிகப் பெரிய கொள்ளைக்காரன் என்று கதையில் திடீரென ஒரு திருப்பம். மலேசியாவில், நிஷாவும் காவல்துறை அதிகாரி கிருஷ்ண குமாரும் எதேச்சையாகச் சந்திக்கிறார்கள். இருவரும் தங்கள் அனுபவங்களை, சந்தித்த நிகழ்வுகளை மனம்விட்டு பகிர்ந்து கொள்கிறார்கள். தான் ஒருவனைக் காதலித்ததாகவும் அவன் பெரிய தில்லாலங்கடி என்றும் அவன் பல பொய்களை சொன்னதால் அந்த காதலை கைவிட்டதாகவும் சொல்கிறாள், நிஷா. முக்கிய அரசியல் புள்ளிகள் பதுக்கி வைத்திருக்கும் கருப்பு பணத்தை கொள்ளையடித்து தில்லாலங்கடி வேலை செய்யும் திருடன் ஒருவனைக் கண்டுபிடிக்க மலேசியா வந்த அவசியத்தை கிருஷ்ண குமார் சொல்கிறார். இந்தச் சந்தப்பத்தில் தன்னுடைய காதலையும் நிஷாவிடம் சொல்கிறார் கிருஷ்ண குமார். இருவருக்கும் திருமணமும் நிச்சயமாகிறது.

பிறகுதான் நிஷா, கிருஷ்ணகுமார் இருவரும் சொல்லும் தில்லாலங்கடி ஆள் ஒருவனே எனத் தெரிகிறது. தொடர்ந்த விசாரணையில் கிருஷ்ணா கொள்ளையடித்த பணத்தை எல்லாம் ஏழை குழந்தைகளின் மருத்துவ செலவிற்குத்தான் பயன்படுத்தியிருக்கிறார் என தெரிய வருகிறது. கிருஷ்ணா நல்லவராகிறார். தன்னொடு திருமணம் நிச்சயமான கிருஷ்ண குமாரைக் கழற்றி விட்டுவிட்டு தில்லாலங்கடி கிருஷ்ணாவை கைப்பிடிக்கிறாள் நிஷா.

சுபம்.

கிருஷ்ணாவாக ஜெயம் ரவி, தெலுங்கு 'கிக்கில்' ரவிதேஜா என்ன செய்தாரோ அதை அப்படியே அலட்டிக்கொள்ளாமல் செய்திருகிறார். உறுதியான உடலோடு ஆஜானுபாகுவாக கம்பீரமாகத் தெரிகிறார். நன்றாக ஆடுகிறார், ஓடுகிறார், கடகடவென வசனம் பேசுகிறார். காதல், அதிரடி என இருந்த ஜெயம் ரவி, இப்படத்தின் மூலம் காமெடியிலும் கலைகட்டுகிறார் என்பது ஒரு வித்தியாசம்.

நிஷாவாக தமன்னா, அழகாய் இருக்கிறார். தாராளமாகவும் நடித்திருக்கிறார். முதல் காட்சியில் யோகா செய்வது முதல் ஆரம்பிக்கிறது தமன்னாவின் கவர்ச்சி ராஜாங்கம். ஆனால், தெலுங்கில் இலியானா வசீகரத்துடன் ஒப்பிடும்போது குறைவுதான். தமிழ் ரசிகர்கள் பாவம்தான்.

ரவியை துரத்தும் காவல்துறை அதிகாரி கிருஷ்ணகுமாராக ஷாம், அந்த வேடத்துக்கு அருமையாய் பொருந்தியிருக்கிறார். தெலுங்கிலும் இந்தப் பாத்திரத்தை ஷாம்தான் செய்திருக்கிறார். அலட்டல் இல்லாத இவரின் தேடுதல் வேட்டை படத்தை பார்க்கும் ரசிகர்களுக்கு இன்னும் பரபரப்பை ஏற்படுத்துகிறது.

## பிலிம் நியூஸ் கிருஷ்ணன்

தெலுங்கில் ப்ரம்மானந்தம் செய்த காமெடியை, தமிழில் வடிவேலு செய்திருக்கிறார். வடிவேலு காமெடி எடுபடாமல் போகுமா? வடிவேலு, தமன்னாவை காதலிப்பதாக சொல்லி செய்யும் சேஷ்டைகள் கலகலப்பூட்டுகின்றன. அதுவும் தமன்னாவோடு 'என் நதியே என் கண்முன்னே வற்றிப் போனாய்' என 'டூயட்' பாடுவது அபாரம். கஞ்சா கருப்பும் சந்தானமும் தங்கள் பங்குக்கு ஆங்காங்கே வந்து கலகலப்பூட்டுகிறார்கள்.

இவர்கள் போக பிரபு, சுஹாசினி, ராதாரவி, மன்சூர் அலிகான், மனோபாலா, நளினி, தியாகு, லிவிங்க்ஸ்டன் என நடிகர் பட்டாளமே உள்ளது.

படத்தை மட்டும் இல்லாது பாடல்களையும் தெலுங்கிலிருந்து காப்பி எடுப்பவர் ராஜா. ஆனால், இந்தப் படத்தில் பாடல் காட்சிகளில் கொஞ்சம் மற்றங்கள். காரணம் யுவன்ஷங்கர் ராஜா, சிம்பு பாடியிருக்கும் 'பட்டு பட்டு பட்டாம் பூச்சி', 'சொல் பேச்சு கேட்காத சுந்தரி' பாடல்களைக் கேட்கலாம். ஆனாலும், அவ்வளவாய் மனதில் நிற்கவில்லை. என்ன ஆச்ச யுவனுக்கு? பாடல்களுக்கு யுவன்ஷங்கர் ராஜா மெனக்கெட்டிருப்பதை விட, தமன் பின்னணி இசையில் நுணுக்கமாக சில வேலைகள் செய்திருக்கிறார். விரட்டல், சண்டைக் காட்சிகளில் ரஹ்மான் இசையமைத்தாரோ எனும் எண்ணம் வருகிற அளவுக்கு பிரமாதம்.

'சொல் பேச்சு கேட்காத சுந்தரி' பாடலை முத்துக்குமார் எழுதியிருக்கிறார். இந்தப் பாடலை ஒரே ஷாட்டில் ஒளிப்பதிவு செய்திருக்கிறார்கள். ஹிந்தி 'ஆராதனா' படத்துக்குப் பிறகு, ஒரே ஷாட்டில் எடுக்கப்பட்ட பாடல் இதுதானாம். நன்றாகவே இருக்கிறது. ஒளிப்பதிவு, ராஜசேகர்.

வழக்கமாய் அட்சரம் பிசகாமல் தெலுங்கு படங்களை அப்படியே எடுக்கும் ராஜா, இம்முறையும், சன் பிக்சர்ஸ் தயாரிப்பிலும், அதையே பின்பற்றியிருப்பது பெரிய பின்னடைவுதான். தெலுங்கிலிருந்து வசனம் முதற்கொண்டு அப்படியே காப்பி அடித்திருப்பதை தவித்திருக்கலாம். ரவி, ஏன்

தொடர்ச்சி 27ஆம் பக்கம்

REAL ESTATE
வகுப்புகள்
ரொறொன்ரோவில் இலவச
ஆதனவியல் (Real Estate)
வகுப்பு நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு: Vanessa -
416.321.6969


# நார்த்தாமலை...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்தக் குடைவரைக் கோயில் கட்டப்பட்டுள்ளது. இதைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் கோயிலில் காணப்படுகின்றன. இப்பொழுது கர்ப்பக்கிருஹம் மட்டுமே மிஞ்சியிருக்கும் இந்தக் கோயில், ஒரு காலத்தில் முன்மண்டபங்களோடு இருந்திருக்கிறது. சிவனுக்குரியதான இங்கு ஓர் சிறிய அறையில் லிங்கமும் துவாரபாலகர் சிற்பங்களும் புதையுண்டு போன நிலையில், பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு குகையின் முன்புள்ள மேடையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த மேடையில் உள்ள கல்வெட்டு இதன் வரலாற்று முக்கியத்துவத்தை கூறுகிறது.

பழியிலி ஈச்சுரம் குகைக்கு வடக்குப் பகுதியில் அதே குன்றில் உள்ள மற்றொரு குகைக் கோயில் சமணர் குடகாகும். இதற்குப் 'பதினெண் பூமி விண்ணகரம்' என்ற பெயரும் உண்டு. ஆறடி உயரத்திற்கு விஷ்ணு பகவானின் பன்னிரண்டு வடிவங்கள் மிக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஏழாம் நூற்றாண்டில் சமணர் குகையாக இருந்த இந்த குடைவரைக் கோயில் பிற்காலத்தில் விஷ்ணு கோயிலாக மாற்றப்பட்டுள்ளது என்கிறார்கள். குகையின் முன்புறம் பிற்காலத்தில் கட்டப்பட்ட மண்டபம் இருந்து அழிந்திருக்க வேண்டும். தற்போது இந்த மண்டபத்தின் மேடை மட்டும் உள்ளது. இந்த மேடையின் மூன்று பக்கங்களிலும் யானைகள், யாழிகள், காமதேனு போன்ற வியக்க வைக்கும் சிற்பங்கள் எழில் தோற்றத்துடன் காட்சியளிக்கின்றன. இவற்றுள் மனித முகமும் சிங்கத்தின் உடலும் கொண்ட 'ஸ்பிங்கஸ்' என்னும் எகிப்து பாணி சிற்பம் உள்ளது. ஆரம்பக் காலத்தில் சமணர் குகையாக இருந்த இவற்றை முதலாம் மாறவர்மன் காலத்தில் வைணவக் குகையாக மாற்றப்பட்டிருக்க வேண்டும் என கல்வெட்டு கூறுகிறது.

மேல மலையில் உள்ள கோயில்களுக்கு தெற்கே, மலையில் கீழ்நோக்கி குடையப்பட்ட குகையில் முகமது மஸ்தான் என்பவர் அடக்கமான தர்ஹா உள்ளது. மலைக் குன்றில் கீழ் நோக்கி குடைந்தெடுத்திருப்பது இதன் தனிச் சிறப்பாகும். மேலை மலையில் கண்ணாடியைப் போல் பளபளக்கும் மேற்பரப்புடன் ஒரு சிறிய சுனை உள்ளது. வெயிற்காலத்திலும் இது காய்ந்து போகாது என்கிறார்கள். குளிர்ச்சி தரும் பாறைகளின் நடுவே உள்ள மரங்களின் இந்தச் சூழலை அனுபவிப்பதற்காக பலர் மேலமலைக்கு வருகிறார்கள். மேலமலையில் இருந்து கீழே செல்லும் பாதையில் அய்யனார் கிராம தெய்வ கோயில் அமைந்துள்ளது.

நார்த்தாமலை ஊர் நுழைவாயிலுக்கு வலது பக்கத்தில் உள்ளது கடம்பர் மலைக்குன்று. இக்குன்றில், 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாம் இராஜராஜ சோழன் காலத்திய சிவன் கோயில் ஒன்று பிரதானமாக உள்ளது. இக்கோயிலில் மலைக்கடம்பூர் தேவர் வீற்றிருக்கிறார். இதற்கருகில் நகரீஸ்வரம் என்ற சிவன் கோயிலும் மங்களாம்பிகை அம்மன் கோயிலும் இருக்கின்றன. இந்தக் கோயில்கள் பாண்டிய மன்னன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கட்டப்பட்டவை, 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இப்பகுதியில் மங்கள தீர்த்தம் என்ற குளம் உள்ளது. இக்குன்றின் அடிவாரப்பகுதியில் பாறை குழிவாகக் குடையப்பட்டு பெரியதொரு கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. அதில் சில இடங்கள் சேதமடைந்துள்ளன. முதலாம் ராஜராஜன் காலம் முதல் சோழ அரசர்களில் கடைசி மன்னனான மூன்றாம் ராஜேந்திர சோழன் காலம் வரையிலான கல்வெட்டுக்கள் இந்த வளாகத்தில் உள்ளன என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இக்குன்றில் கோட்டை இருந்து அழிந்து போனதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. கன்னிமாரா சுனை, பொழுதுபடா சுனை என இரண்டு சுனைகள் இங்கு உள்ளன.



மற்ற மலைகளில்... பறை அரையர் மலை, பறை அரைய பயன்பட்ட மலை என்பதால் இப்பெயர் பெற்றதாகவும், 'உவக்கன் மலை', கோயில் வாத்தியங்கள் வாசிக்கும் உவக்கர் தங்கியிருந்த மலை என்பதால் 'உவக்கன் மலை' என பெயர் பெற்றதாகவும் சொல்கிறார்கள். இதில் ஆளுருட்டி மலைக்கு ஒரு சிறப்பு உள்ளது. அக்காலத்தில், கொடுங்குற்றம் செய்தோர் இந்த குன்றிலிருந்து கீழே உருட்டி விடப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக இம்மலை 'ஆளுருட்டி' மலை என குறிப்பிடப்படுகிறது. தஞ்சை பெரிய கோவில் கட்டுவதற்கு இங்கிருந்து கல் எடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்த வரலாற்று சிறப்புகள் ஒரு பக்கம் இருக்க, இன்றும் பக்தர்கள் கூட்டம், உற்சவம் என முக்கியமான ஒரு இடமாக நார்த்தாமலை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள முத்துமாரியம்மன் கோயிலில் பங்குனித் திருவிழா பத்து நாட்கள் நடக்கும். இது இத்தலத்தின் மிக உச்சமான திருவிழா ஆகும். இவ்விழாவில் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் திரள்வார்கள் என்பதிலிருந்து அதன் முக்கியத்துவத்தை உணர முடியும். 10ஆம் நாள் திருவிழாவாக சந்தனக்கூடு திருவிழா நடைபெறுகிறது. அன்று மத பேதமின்றி அனைத்து மக்களும் இங்கு வழிபடுவதைப் பார்க்கலாம். பங்குனி உற்சவம் தவிர ஆடிக் கடைசி வெள்ளியும் மிக முக்கியமான நாள். ஒரே ஒருநாள் மட்டுமே நடக்கும் திருவிழா என்றாலும் அன்றும் நாலாபுறம் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டு வருவார்கள். குழந்தை வரத்துக்கு மிகவும் புகழ்பெற்ற கோயில் இது. குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் கரும்பு தொட்டில் செய்து வழிபட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கிறது என்கிறார்கள். அம்மை நோய் கண்டவர்கள் இத்தலத்தில் வழிபட்டால் குணமடைவார்கள் எனவும் நம்பப்படுகிறது. இதற்காக வரும் பக்தர்கள் கூட்டமே எப்பொழுதும் மிக அதிகமாக இருக்கும். இக்கோயிலில் அக்னி காவடி எடுத்தால் தீராத வியாதிகளும் குணமாகும் என்கிறார்கள்.

நிறைய மூலிகை தாவரங்கள் இம்மலையில் இருக்கிறது என்பதும் முக்கிய விசயம்.

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

தமிழ்நாட்டில், புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டையிலிருந்து 17 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது நார்த்தாமலை. திருச்சியிலிருந்து 36 கிலோமீட்டர். திருச்சி, புதுக்கோட்டை இரண்டு ஊர்களுக்கும் பேருந்து போக்குவரத்து அடிக்கடி உள்ளது. திருச்சிக்கு ரயில், விமான போக்குவரத்தும் உள்ளது. திருச்சி, புதுக்கோட்டையில் நவீன வசதிகளுடன் நல்ல தங்கும் விடுதிகள் உள்ளன. நார்த்தாமலை மாரியம்மன் கோயில் பூசை நேரம்: காலை 6 மணி முதல் 11 மணி வரை, மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை. இந்த நேரங்களில்தான் நடை திறந்திருக்கும்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



MILLIKEN MARKET
Open Every Saturday & Sunday 10 AM to 6 PM
Door Prizes Every Hour*
BOOTHS FOR RENT
NOW OPEN


Under New Management
31 OLD KENNEDY ROAD
Over 50,000 Sq. Ft. Plenty of Parking
TEL: 647-998-2338
* Limited Number of Prizes Available, some conditions apply

# BASEMENT RENT

**KINGSTON & MORNINGSIDE**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, washer, dryer, parking. Close to TTC, school, shopping. Avail. immediately.
416.289.9507 / 416.720.9507

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities.
Avail. August 01, 10.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. September 01, 10.
பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.997.6575

**MIDLAND & EGLINTON**
1 Bedroom spacious, bright basement with the separate entrance is for rent close to the Kennedy Subway Station and all amenities. No pets. No smoking.
தொடர்புகளுக்கு: 416 269 8325

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. With all facilities. பெண்கள் விரும்பத்தக்கது. Close to TTC, mall, சுவையகம். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.492.3041

**NEILSON & SHEPPARD**
1or 2 or 3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & cable free, laundry. Close to TTC, shopping, school.
Avail. September 01, 10.
416.281.5298 / 416.807.5298

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance Living room, kitchen & washroom.
Close to all amenities.
416.750.9138 / 647.401.9423

**NEILSON & FINCH**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
416.297.8883 / 647.831.5672

**MARKHAM & ELLESMERE**
ஆனால் அது வேற்று மனிதன் ஒருவனால் ஏந்தப்படுவதாக இருக்காது! - ("முறிந்த பனை")

1989-09-21 அவர் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலைக்குப் பதில் சொல்வது போலவே Martin Luther King அவர்களின் வாசகம் ஒன்று "முறிந்த பனையின்" ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது. "கொடியவர்கள் இழைக்கும் தீங்குகளிலும் பார்க்க, அவற்றை நல்ல மனிதர்கள் என்போர் அதிர்ச்சியூட்டும் அளவிற்கு மௌனமாய் சகித்துக் கொண்டிருப்பது பற்றியே நாம் இந்தத் தலைமுறையில் வருத்தமுற வேண்டும்."

படிக்கும் போது குற்றஉணர்வு நெஞ்சை நிறைக்கிறது! அதே நேரம் இன்னுமொரு வரி நினைவுக்கு வருகிறது:

Fool me once, Shame on You!
Fool me twice, Shame on Me!


**விற்பனையாகின்றது!**
**லலிதா புருடியின்**
**"ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"**
எனும் அரிய நூல்
மனதை கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில் நின்மதியை பெற வாசிக்க வேண்டிய அருமையான நூல்




**கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்**
**தொலைபேசி இலக்கம்: 416.282.8059**
**GTA Square - 5215 Finch Ave. E., #201**
**Middlefield & Finch**

# இன்னொரு... ஆச்சி வீடு

## பகுதி 2

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

கடந்த இதழ் தொடர்ச்சி...

திலகத்திற்கு அடிக்கடி அந்த நினைப்பு வந்து கொண்டே இருக்கும். ஆனாலும் வெளியில் அதைச் சொல்லிக் கொள்வதில்லை. நீலகண்டரின் கணிப்பின்படி எட்டு வயது வரையில் கவனம் தேவை. எட்டாவது பிறந்தநாளும் அருகில் வந்து விட்டது. எட்டாவது பிறந்தநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்குத் திட்டமிட்டு இருக்கின்றார்கள் திலகமும் நாயகமும்.

இன்பன், இனியன் இருவரையும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டு வருகின்றார்கள். மூன்று வயதில் இருந்து இருவரையும் கவனிப்பதற்கென்றே நாகராசன் என்ற தமது தூரத்து உறவினர் ஒருவரை தம்முடன் வைத்திருக்கின்றார்கள். காலை 6 மணிக்கே நாயகத்தின் வீட்டுக்கு வந்து மாலை 7 மணிக்குத்தான் நாகராசன் வீட்டுக்குத் திரும்புவான். இருபதுகளின் பிற்பகுதியில் இருக்கும் நாகராசன் நல்ல திடகாத்திரமானவன். ஓரளவுக்குப் படித்துமிருக்கின்றான். இன்பனிலும் இனியனிலும் நல்ல பிடிப்புக் கொண்டவன். எட்டு வயதுப் பிரச்சனை நாகராசனுக்குத் தெரியாது. திருமண ஒழுங்குகள் நடைபெறுகின்றன. இன்னமும் ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்துக்குள் தனது தூரத்து உறவினளான ஒரு பெண்ணைத் திருமணம் செய்யக் கூடிய வாய்ப்பினைப் பெறுவான் எனத் திருமணத் தரகர் கூறுகின்றார்.

### ◊ சி.வி. நாதன் ◊

இன்பனுக்கும் இனியனுக்கும் நாகராசனில் நல்ல விருப்பம். மாமா மாமா என்று போட்டி போட்டுக் கொண்டு அவனில் தாவுவார்கள். சிலவேளைகளில் அண்ணா எனவும் நாகராசனை அழைப்பார்கள். ஊரில் உள்ள பன்னிரண்டு, பதின்மூன்று வயதுச் சிறுவர்கள் நாகராசனை அண்ணா என அழைப்பதன் கவர்ச்சிச் செல்வாக்கே அதற்குக் காரணம்.

இருவரையும் பாடசாலைக்குக் கூட்டிச் செல்வது, பாடசாலையில் இருந்து திரும்ப வீட்டுக்குக் கூட்டிவருவதெல்லாம் நாகராசன்தான். பாடசாலை நாயகம் வீட்டிற்குக் கிட்டவாகத்தான் இருந்தது. பிள்ளைகள் இருவரும் பாடசாலையில் இருக்கும் போது சில சமயங்களில் தனது வீட்டுக்குச் சென்று வருவான், நாகராசன். அதிகமாக, பாடசாலையின் அருகில் இருக்கும் நூலகத்தில் இருந்து ஏதாவது வாசிப்பான். அவன் அதிகம் விரும்பிப் படிப்பது விஞ்ஞானக் கட்டுரைகளும் சஞ்சிகைகளும். ஆலமரங்களின் நிழலில் இருந்து விஞ்ஞானக் கட்டுரைகள் படிப்பது அவனுக்கு மிகவும் விருப்பமான ஒன்றாக இருந்தது. அருகில் இருந்த கந்தையா அம்மானின் தேத்தண்ணிக் கடையின் தேனீருடன், ஆலமர வேரில் இருந்து அவன் ஆங்கிலப் புத்தகங்கள் வாசிப்பதை மிகவும் ஆச்சரியமாகப் பார்ப்பார்கள், அவ்வூரார்.

இன்பனுக்கும் இனியனுக்கும் விளையாட்டுகள் சொல்லித்தருவது, பாடசாலையின் வீட்டுவேலைகளில் உதவி செய்வது, நேரம் காலம் தவறாது குளிப்பாட்டுவது, சில சமயங்களில் சாப்பாடு ஊட்டுவது எல்லாம் நாகராசன்தான். திலகத்திற்கு நாகராசனில் அளவுக்கதிகமான நம்பிக்கை. பெரும்பாலும் 'தம்பி' என்றேதான் அழைப்பாள். ஆனாலும் இடைக்கிடை கவனித்துக் கொள்ளுவாள்.

எட்டாவது பிறந்தநாளும் வந்துவிட்டது. அடுத்த ஞாயிற்றுக் கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் மிக மும்மரமாக நடைபெற்றுக் கொண்டு இருந்தது. பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு முதல்நாள், சனிக்கிழமை. மதியச் சாப்பாடு முடிந்து இன்பனும் இனியனும் நாகராசனோடு விளையாடிக்கொண்டு இருந்தார்கள். நாகராசனின் கண்களைத் துணி ஒன்றினால் கட்டி அவனைச்சுற்றி இருவரும் ஓடிக் கொண்டு இருந்தார்கள். நாகராசன் கண்கள் கட்டப்பட்டபடியே இருக்க அவர்களைப் பிடிக்க வேண்டுமாம். சிரித்தபடியே ஓடிக் கொண்டிருக்கும் அவர்களைப் பிடிப்பதொன்றும் சிரமமான வேலையில்லை. ஆனாலும் சிக்கல்பட்டுக் கொண்டு தடுமாறுபவன் போல் நாகராசன் காட்டிக் கொள்ள, அது இன்பனுக்கும் இனியனுக்கும் மேலும் சிரிப்பாக இருந்தது. இருவரும் சிரித்துக் கொண்டே நாகராசனைச் சுற்றிவர.......
விளையாட்டுத் தொடர்ந்தது.

அவ்வேளையில் இராமலிங்கம் அங்கு வந்தான். நாகராசனும் பிள்ளைகளும் விளையாடிக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்க, இன்பனும் இனியனும் இராமலிங்கத்தைக் கண்டு கொண்டார்கள். "மாமா" என்று கூவிக் கொண்டே இருவரும் இராமலிங்கத்திடம் ஓடிவர,
இராமலிங்கம் வந்து கொண்டதை உணர்ந்த நாகராசன் கண்கட்டை அவிழ்த்தபடியே இராமலிங்கத்தருகே வந்தான். இராமலிங்கமும் நாகராசனும் ஒரே வயதினர். ஒன்றாகவே படித்தவர்கள். உறவினர்கள் என்பதைவிட, பள்ளித் தோழர்கள் என்பதே அவர்களின் உறவில் அதிகமாக ஒட்டிக் கொண்டிருந்தது.

இராமலிங்கத்திற்கு பிள்ளைகளைக் கவனிப்பதற்காக நாகராசனை ஏற்பாடு பண்ணியதில் அவ்வளவாக விருப்பமில்லை. 'ஏன் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?' என்றொரு ஆதங்கம் இப்பவும் இருக்கத்தான் செய்கிறது. "என்ன ராசு, பிள்ளைகளோடை நல்ல விளையாட்டுத்தான் போலை!" நாகராசனை ராசு என்றுதான் இராமலிங்கம் அழைப்பான்.

"ஓ...தெரியாதே! இப்ப கொஞ்சம் முந்தித்தான் சாப்பிட்டவங்கள். நித்திரையும் வரேல்லைப் போலை. அதுதான் சும்மா கொஞ்ச நேரம் விளையாடுவோமெண்டு"

நாகராசனும் இராமலிங்கமும் சற்று நேரம் கதைத்துக் கொண்டு இருக்க, இனியன் ஓடிவந்து "மாமா என்னைச் சைக்கிளிலை ஏத்திக் கொண்டு போறியளே?" என இராமலிங்கத்திடம் கேட்க, "இப்ப வேண்டாம். வெளியிலை நல்ல வெய்யில். வெய்யில் தணிய விட்டுப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போறேன்" என்றான் இராமலிங்கம்.

இதைத்தான் விதி என்று சொல்வதோ என்று தெரியவில்லை. "இல்லை மாமா! இப்ப போக வேணும்" இனியன் அடம் பிடிக்கத் தொடங்கினான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த நாகராசன் "பிள்ளை ஆசைப்படுறான். நிழலாய் பாத்துக் கூட்டிக் கொண்டு போ. நான் இன்பனை எனது சைக்கிளிலை கொண்டு வாறேன்" என்றான்.

"மாமா நான் இப்ப சைக்கிளிலை வரேல்லை. வீட்டிலை நிண்டு விளையாடப் போறேன்" என்றான் இன்பன். இனியன் சைக்கிள் சவாரிக்கு அடம் பிடிக்க, இன்பன் இல்லை என்று அடம் பிடிக்க, முடிவில் இனியன் இராமலிங்கத்துடன் ஊர் சுற்றிவரப் புறப்பட்டுவிட்டான். இன்பன் நாகராசனுடன் வீட்டிலே தங்கி விட்டான். இராமலிங்கமும் நாகராசனும் பிள்ளைகளைச் சைக்கிளில் கூட்டிச் செல்லது வழக்கம்தான். ஆனால் இன்று அதனைச் செய்யாது இருந்திருந்தால் ஒருவேளை நன்றாக இருந்திருக்குமோ என்னவோ!

- இன்னமும் வரும்

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

Best Building in Scarborough!
Clean, family building, FREE parking.
Close to schools, bus stop, Tamil store in building.

Pl. Call: 416.264.2818

விற்பனையாகின்றது குறமகளின்
•கூதிர்காலக் குலாவல்கள்
•அகணிதன் அல்லது நதியின் பிழையன்று
என்ற இரு குறுநாவல்கள் அடங்கிய நூல்

கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்
தொலைபேசி இலக்கம்: 416.282.8059

GTA Square - 5215 Finch Ave. E., #201
Middlaefield & Finch

# ஞாயிறு மாலைப்பொழுது Robibar Bikelbela (Sunday Afternoon) மற்றும் Low budget movies

ஒரு சிறிய தேநீர்க் கடை. இரு நண்பர்கள் சந்தித்துக் கொள்கின்றனர். நண்பர்களில் ஒருவர் தனக்கு ஒரு சிறு எண்ணம் உண்டு. நாங்கள் ஒரு படம் எடுக்கலாம் என்கின்றார். இருவரும் முழு நேர வேலை செய்பவர்கள். நேரமிருப்பதே கடினம். அதற்கும் மற்றவர் ஒரு திட்டத்தை கூறுகின்றார். ஒரு நாள் வேலைக்கு விடுப்பு எடுத்து படத்தை வார இறுதி நாட்களில் எடுத்து முடிப்பது என்பதே அது.

இயக்குனர் Oren Peli வாழ்ந்த சன்டியாகோ இல்லத்தில் இரவில் சத்தங்கள் கேட்கின்றன. இயக்குனர் ஒரு இஸ்ரேலில் பிறந்தவர். பல மரணங்களை நேரில் சந்தித்தவர். பல சமயங்களில் இறந்த உடல்களுடன் இரவை கழித்திருப்பார். எனவே அவருக்கு பேய் பிசாசில் நம்பிக்கையில்லை. என்ன செய்யலாம்? என்று யோசித்தவருக்கு தோன்றிய திட்டம் “வீடு முழுவதும் வீடியோ கமராக்களை நிறுவுவது” அதன் மூலம் நடப்பவற்றை நோக்குவது. இந்த உண்மைச் சம்பவங்களை ஒரு தம்பதியரை மையமாகக் கொண்டு படமாக்கினார் இயக்குனர். இதற்கு இவருக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 11,000 டொலர்கள். படம் முடிந்தவுடன் படத்தை 350,000 டொலர்களுக்கு பராமவுன்ட் நிறுவனத்திற்கு விற்றுவிட்டார். இதன் பின்னர் பிரபல இயக்குனர் Steven Spielberg ஐச்சந்தித்து தனது படத்தை காட்டினார். அவருக்கு படம் பிடித்துக் கொண்டது. இறுதி முடிவில் சிறிய மாற்றம் செய்யச் சொன்னார். இதற்கு பராமவுன்ட் செலவை வழங்கியது. மொத்தம் 4,000 டொலர்கள். இன்று இப் படம் 84 மில்லியன் டொலர்களை வசூலித்துள்ளது. இயக்குனருக்கு லாபத்தில் ஒரு பங்கும் உண்டு.

இது எப்படி சாத்தியமாயிற்று.

| | |
|---|---|
| Camera - Sony FX | 3,000.00 |
| Red Bull Juice | 100.00 |
| Tapes, lights, lens, batterie | 1,000.00 |
| Editing PC-Dell and Editing Software (Sony Vegas) | 4,000.00 |
| Catering (groceries and Pizza Hut) | 500.00 |
| Casting Costs, Accommo dations, Trips to LA | 1,000.00 |
| Wood for making cross | 20.00 |
| Baby Powder | 3.00 |
| Materials and Printing costs for Ouja Board | 35.00 |
| Actors (Micah, Katie and Others) | 1,500.00 |
| Cop Costume Rental (for deleted scene) | 400.00 |
| ***Total*** | ***11,558.00*** |

இதில் நடித்த நடிகர்கள் அனைவரும் புது முகங்கள். பெரிய நடிகர்கள் இல்லை. படத்தில் பயன்படுத்தப்பட்ட வீடு இயக்குனருக்கு சொந்தமான வீடு. நாங்கள் இந்திய படங்களை பார்த்து விட்டு அதனைப் போல் தயாரிக்க வேண்டும் என்று நினைத்து இரண்டுங் கெட்டான் நிலையில் உள்ளோம். திட்டமிட்டு படமெடுப்பின் எம்மாலும் முடியும். மிகக் குறைந்த உபகரணங்களுடன் சிறப்பாக எடுக்கப்பட்டுள்ளது. மனமிருந்தால் எதனையும் சாதிக்கலாம் என்பதற்கு இப் படம் சிறந்த உதாரணம்.

மிகக் குறைந்த செலவில் எடுக்கப்பட்ட படங்கள் சில

| ***Movie*** | ***Cost*** |
|---|---|
| Tarnation | $218 |
| My Date With Drew | $1,100 |
| Pather Panchali | $3,000 |
| Return to the Land of Wonders | $5,000 |
| Following | $6,000 |
| El Mariachi, | $7,000 |
| Primer | $7,000 |
| Cavite | $7,000 |
| The Mongol King | $7,000 |
| Primer | $7,000 |
| El Mariachi | $7,000 |
| Eraserhead | $10,000 |
| On the Down Low | $10,000 |
| Dayereh | $10,000 |
| Clean | $10,000 |
| Cure | $10,000 |
| The Rise and Fall of Miss Thang | $10,000 |
| Bang | $10,000 |
| The Adventures Of Goopy And Bagha | $12,000 |
| Pink Flamingos | $12,000 |
| Pink Flamingos | $12,000 |
| Grip: A Criminal's Story | $12,000 |
| The Puffy Chair | $15,000 |
| Paranormal Activity | $15,000 |
| The Zombie Diaries | $16,200 |
| Breathing Room | $20,000 |
| The Blair Witch Project. | $22,000 |
| Deep Throat | $22,500 |
| Slacker | $23,000 |
| The Brothers McMullen | $23,800 |
| Bad Taste | $25,000 |
| The Brothers McMullen | $25,000 |
| The Terrorist | $25,000 |
| Deep Throat | $25,000 |
| In the Company of Men | $25,000 |
| In the Company of Men | $25,000 |
| Clerks | $27,000 |
| Pink Narcissus | $27,000 |
| Clerks | $27,000 |
| Mutual Appreciation | $30,000 |
| Funny Ha Ha | $30,000 |
| Blair Witch Project | $35,000 |
| The Last Waltz | $35,000 |
| The Chess Players | $40,000 |
| The Exploding Girl | $40,000 |
| Smiling Fish and Goat on Fire | $40,000 |
| Osama | $46,000 |
| Gabriela | $50,000 |
| Big Things | $50,000 |
| Pi | $60,000 |
| Super Size Me | $65,000 |
| 20 Dates | $66,000 |
| I Love You ... Don't Touch Me! | $68,000 |
| Pi | $68,000 |
| Peace, Propaganda & the Promised Land | $70,000 |

இவை சில படங்களே. சத்யஜித்ரேயின் பதேர் பாஞ்சாலி வெறும் மூவாயிரம் டொலர்களுக்கே எடுக்கப்பட்டுள்ளது. இன்றும் இந்தியாவின் சிறந்த படமாக கருதப்படுகின்றது.

### *Robibar Bikelbela (Sunday Afternoon)*

ஞாயிறு மாலைப் பொழுது

1977 களில் நக்சலைட் போராட்டத்தில் பங்குபற்றிய சான் ஏழு வருடங்கள் கழித்து வங்காளம் வருகின்றார். இவரது தாயார் இறந்து விடவே அங்கு வருகின்றார். தனது பழைய நண்பர்கள் போராட்டத்திலிருந்து விலகி திருமணம் செய்து கொண்டும் வியாபாரம் செய்து கொண்டும் வாழ்ந்து வருகின்றனர். சானின் ஒரு சித்தி மட்டுமே சானின் வீட்டில் வசிக்கின்றார். சான் கருத்தளவில் எந்த மாற்றங்களும் இல்லாமல் உள்ளார். தனது பழைய நண்பனின் வீட்டுக்குச் சென்ற பொழுது அவன் திருமணம் செய்து தனித்து இருப்பதாக தெரியவருகின்றது. அவனது அலுவலகம் சென்று அவனைச் சந்திக்கின்றான். ஒரு நாள் இரவு நகருக்கு சென்று விட்டு திரும்பும் பொழுது சாணுடன் பயணித்த பெண் சைக்கிள் ரிக்சாவுக்கு காத்து நிற்கின்றார். ரிக்சாக்காரன் மழை, கடும் இருட்டு போன்ற காரணங்களால் செல்ல முடியாது என அடித்துக் கூறுகின்றான். சாண் அந்த பெண்ணுடன் நடந்து அவளது வீட்டிற்குச் செல்கின்றான். அவள் தேநீர் தயாரிக்கச் சென்றிருந்த பொழுது சுவிரில் மாட்டியிருந்த படத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்து அங்கிருந்து வெளியேறுகின்றான்.

மறு நாள் தனது நண்பனைச் சந்தித்து தான் சந்தித்த பெண்ணைப் பற்றி கூறுகின்றான். பின்னர் அப் பெண்ணை தொடர்கின்றான் சாண். இப்பொழுது பெண்ணிற்கும் சாணிற்கும் நட்பு மலர்கின்றது. அப் பெண் ஒரு பாலியல் தொழிலாளி. அவளது குடும்பம் வறுமையில் வாடுகின்றது. தாயும் மகளுமாக வாழ்ந்து வருகின்றனர். தாய்க்கு தனது மகளின் வேலை தெரியாது. சாணின் நட்பு கிடைத்த பின்னர் சுட்பிதாவின் வாழ்வில் வசந்தம் மலர்கின்றது. சுட்பிதா என்றுமில்லாதளவு சந்தோசமாகவுள்ளாள்.

ஒரு நாள் இரவு சுட்பிதாவை சாண் உணவகத்திற்கு அழைத்துச் செல்கின்றான். அங்கு சாண் இல்லாத நேரத்தில் சுட்பிதா வின் வாடிக்கையாளர் ஒருவன் தன்னுடன் வருமாறு வற்புறுத்துகின்றான். இந்த நேரத்தில் ஏற்பட்ட சல சலப்பில் சாண் வெளியேறிவிடுகின்றான். இதன் பின்னர் சுட்பிதாவும், சாணும் சந்திக்கவில்லை. சாண் முன்னர் பல தடவை சுட்பிதாவிடம், சுட்பிதாவின் தந்தையை நக்சலைட் போராட்டத்தில் சுட்டுக் கொன்றது தான் தான் என சொல்ல முயற்சிக்கின்றான். முடியவில்லை.

## தூறல்

## வானரன்

சாணின் வீட்டிற்கு சாணைத் தேடி சுட்பிதா வருகின்றாள். சாணின் சித்தி சாண் சுட்பிதாவிடம் கொடுக்குமாறு கொடுத்த கடிதத்தை கொடுக்கின்றார். அக் கடிதத்தை வாசிக்கப்படாமலேயே காற்றில் அடித்துச் செல்கின்றது.

போராட்ட காலங்களில் ஈடுபடும் பலர் பின்னர் தாங்கள் போராடிய கருத்துக்களுக்கு எதிராகவே வாழ்க்கையை அமைத்துள்ளனர். அடூர் கோபாலகிருஸ்ணனின் முகா முகம் படம் இவ்வாறான போராளிகளின் மாற்றத்தை பதிவு செய்துள்ளது. மனச்சாட்சிகள் பல போராளிகளை தொடர்கின்றது. அவ்வாறான ஒரு போராளியின் வாழ்வே இப் படம். சுடும் போது இருக்கும் துணிச்சல் பின்னர் தொடர்வதில்லை. சுட்பிதாவிடம் தனது மனச்சாட்சியை கூற துணிச்சலற்று கடிதம் மூலம் தெரிவித்து விட்டு செல்கின்றான். சுப்ரிதாக்கு இவ் விடயம் தெரிந்தும் தெரியாமலும் இழப்பு வாழ்வின் ஒரு அங்கம் என நினைத்து நம்பிக்கையுடன் தொடர்கின்றாள். படம் பார்ப்பது ஓர் அனுபவம். இதனை இப் படம் பார்க்கும் பொழுது உணர முடிகின்றது. குறிப்பாக சுட்பிதாவின் நடிப்பு சிறப்பாகவுள்ளது.

இடதுசாரிகளாக போராட்டங்களில் ஈடுபடுபவர்களின் கருத்தியல் தடுமாற்றத்தையும் சுயநல மாற்றங்களையும் இயல்பு வாழ்வினுடாக வெளிப்படுத்தியுள்ளார் இயக்குனர் Amit Dutta. இவர் ஓர் அமெரிக்க வாசி. புல குறும் படங்களை இயக்கியுள்ளார். இப் படத்தை காலம் செல்வத்திடம் பெற்றுக் கொள்ளலாம். 416-731-1052.

***Robibar Bikelbela (2004) – Bangla Cinema by Amit Dutta***

Direction: Amit Dutta

***Cast:*** Sudipta Chakraborty, Bhaswar Chatterjee, Abir Chatterjee, Mou Bhattacharya, Rumki Chatterjee, Gita Dey, Arun Mukherjee




யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# ஓடிப்போனவள்

பயிற்றி ரெண்டு வயதுப் பருவம் அவள்
பொன்னிற மேனி
சிரித்தால் குழியும் கன்னம், பார்த்தால் காதோடும் கண்கள்
மூன்றாம் பிறை, அதன்கீழ்
நீண்ட புருவத்துடன் எழில் வதனம்
கரு,கரு என்று கறுத்த குழல்
பச்சரிசி சாதத்திலும் மென்மையான பாதம்
பார்ப்பவரை மீண்டும் பார்க்கவைக்கும் எடுப்பான நடை
இளையவரின் தூக்கத்தைக் கெடுத்து, சிந்தனையைக் குறுகவைக்கம் இனிய பேச்சு
என் செய்வாள் அவள்?
அழகாய் அவள் பிறந்ததற்காய் பிரமனைத் தண்டிக்கலாம்
தூக்கம் தொலைத்த இளைஞர்கள்.
அவளோ காதலித்தாள்!
முதியோரை, ஆண்களை, பெண்களை, குழந்தைகளை, பால்ய வயது ஆடவரை, பெண்டிரை-
மனிதத்துவம் என்ற எல்லைக்குள் நின்று
இயற்கையோடு ஒன்றிய சூழல், வெயில், மழை,
கடல், வான், தரை, பறவை, மிருகம், ஒலி, ஒளி.......
அனைத்தையும் இரசித்தாள், காதலித்தாள்
அடிமைப்பட்டு கிடக்கும் தன் இனத்தின் விடுதலையை
வளர்ச்சியின்றி இருக்கும் தன் மொழியின் வளர்ச்சியை
ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்ட தன் சமூகத்தின் விடுதலையை
பெண்விடுதலையை, விரும்பினாள், காதலித்தாள்
துள்ளித்திரியும் பள்ளிப் பருவமதில்
சுடர்விட்டு எரிந்தது விடுதலை எனும் தூரநோக்கு
தனிமரமாய்
என்ன செய்வாள் அவள்
சுடுகலன்களின் சூடான பதிலால்
இனவிடுதலையைப் பெற நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்
அவர்கள் தம் பாதையில் தன்னையும் இணைத்தாள்
வேகம், விவேகம், சாதுரியம்
அர்ப்பணித்தாள் வரித்துக்கொண்ட தனது பாதைக்காக
போர்க்களம் பல ஆடி விழுப்புண் கண்டும்
சோரவில்லைப் பெண்ணியம்
மகளீர் படையின் வீரம் உலக வரலாற்றில்
ஒட்டிக் கொண்டது அவள் சமூகத்தின் பெருமைக்காய்
காவல் கடமையில் ஓர் நாள்
பெருமெடுப்பில் எதிரிபடை விடுதலை மறுப்பிற்காய்
மூர்க்கமுடன் முன்னகர
சிந்திப்பதற்கு அவளிடம் ஒரு வினாடி தான் இருந்தது
உடலில் கட்டிய வெடிகுண்டுடன் ஓடினாள்
ஏதிரியின் பெரும் படை நோக்கி
'எம்மினத்தின் தாகம், விடுதலை பெற்ற தாயகம்'
அவள் எழுப்பிய அந்த வாசகம்
வெடிகுண்டின் சத்தத்தைக் குறைக்க
கரும்புகை காற்றுடன் கலக்க,
காக்கையும் குருவியும் அவயக் குரல் எழுப்ப
கந்தக நெடி காட்டில் நாற்றமெடுக்க- எங்கும் நிசப்தம்
மறுநாள் காலை!
சர்வதேச செய்தி ஊடகங்களில்
தன்னுயிர் ஈகைப் பெண் போராளியின் தற்கொடையில்
நூற்றுக்கணக்கான விடுதலை மறுப்போர் பலி
ஓடிப்போனவள் எதிரியைக் கலங்கடிக்க
அவள் நேசித்த தாயக விடுதலைக்கனவு
அவள் காதலித்த மொழியின் வளர்ச்சி
அவள் விரும்பிய சமூகத்தின் எழுச்சி
அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவு
அனைத்தும்
வினாக்குறியாய் மாறாது
அவளைப் பற்றிய
புரிதலில் உள்ளவர்கட்கு

குமா. ஜெயகுமார்
(B.A;Dip.in.Mgt;Dip.in.HRM-Srilanka)
aojeyakumar@yahoo.com



# குழந்தைகளை நல்ல...

19ஆம் பக்கத்தொடர்ச்சி



என்பதை அந்தப் பிஞ்சு உள்ளங்களுக்கு புரிய வைக்க முயற்சித்தீர்களா? இவை போன்ற மிக எளிமையான ஆனால் அடிப்படையான கேள்விகளுக்கு சரியான விடை தெரியுமானால் நீங்கள் உங்கள் குழந்தைகளை மிக நல்ல முறையில் வளர்க்கலாம். மிகச் சிறந்த பெற்றோராக மற்றவர்களால் பாராட்டப்படலாம். குழந்தைகள் பூக்களை விட மென்மையானவர்கள். அவர்களுடன் நீங்கள் இருக்கும் போது உங்களின் சிறிய அலட்சியமும் தவறும் அவர்களை முள்ளாக உறுத்தும், மனதில் வடுவாகத் தங்கி கசப்பான உணர்வை எப்போதும் ஏற்படுத்தும். இதைத் தடுக்கத்தான் பெற்றோர்களுக்கு இந்த ஆலோசனைகள் தேவைப்படுகின்றன. இதன் மூலமாகப் பல பெற்றோர்கள் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும். தவறுகள் தவிர்க்கும் போது குழந்தைகளை மகிழ்ச்சியோடு நல்ல முறையில் வளர்க்கவும் முடியும்.

'எந்தக் குழந்தையும், நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே - அது
நல்லவனாவதும் தீயவனாவதும்
அன்னை வளர்ப்பதிலே'

என்ற ஒரு பாடலும் உண்டு. இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் தூண்கள். அவர்கள் நல்ல முறையில் வளர்க்கப்படுதல் மிக அவசியம் என்பதை சகல பெற்றோர்களும் புரிந்து பொறுப்புடன் செயற்பட்டால் வீட்டிற்கும், நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் பெருமை தரும் செயல் என உறுதியாக நம்பலாம்.

ஆர்.எஸ். சேவியர்

# தாகிப்பு

நீரற்ற வெறுங் கிணற்றுள்
வீழ்ந்து தவிக்கிறது பெருந் தாகம்
அது மீன் குஞ்சு

பொங்கிப் பிரவகிக்கும்
பெருங் கிணறென்ற அனுமானங்கள்
அனுபவத்திடை பொய்த்துப் போயின
வெறுந் தாகமாய் இருப்பிழந்து
துடிதுடித்துச் சாகிறது குஞ்சுமீன்

குஞ்சுமீன் பிடித்தேனும்
குறும்பசியாறலாம்
நம்பிக்கையோடு இன்னும் காத்துக் கிடக்கிறது
நொண்டிக் கால்களும்
குருடு தட்டிய கண்களுமாய் சுற்றமும் அயல்

ஆத்மாவின் ஈரலிப்புக்காய்
மீளெழும் என் தாகிப்பில்
எவர் வந்து கலப்பரினி
நீளக் கனவுகளும் சிதைந்தாயிற்று

நீரற்ற வெறுங் கிணற்றுள்
நான் எங்ஙனம்
தாகந் தணித்தலியலும் கூறு மனமே!

- முல்லை முஸ்ரிபா

# தெய்வம் காத்தான்

வித்துவான் க.வேந்தனாரின் 90ஆவது நினைவை ஒட்டி கனடாவில் அவரது மூன்று நூல்கள் வெளிவர இருக்கின்றது. அவரது மூத்தமகள் கலைச்செல்வி சின்னையா மேற்படி நூல்களை செப்ரெம்பர் மாதத்தில் வெளியட இருக்கின்றார்.

i

வண்மைசேர் சொல்லின் செல்வம்,
வாழ்தின கரனில் கண்டும்;
திண்மைசேர் பேச்சின் வன்மை
திகழ்தமிழ் விழாவில் கேட்டும்;
உண்மைசேர் உயர்ந்த ஞானம்,
உவ்விடம் வந்தே யுண்டுன்;
தண்மைசேர் தமிழின் சுவையைத்
தருக்குடன் உணர்ந்தேன் அன்று.

ii

பண்டித வகுப்பி லுன்முன்
பாடங்கேட் டுணர்ந்த காலம்
தென்றிசைக் குற்ற வேந்தே
திரும்பவும் வந்தி டாதோ!
அன்றிருந் தென்றன் உள்ளத்
தரும்பெருங் குருவே யாகி
மண்டியே வாழு கின்றீர்
மறக்கவும் போமோ வாழ்நாள்.

iii

"முன்பின் அறியா வென்னை,
மூவாக் கவிதைப் பண்பால்,
என்பும் உருக வைத்தாய்"
என்றே பாடி அன்றென்
கன்னிக் கவிதை போற்றிக்
கலைதனை நாட வைத்தீர்
அன்புக் குரவ நின்னை
அடியேன் மறக்கப் போமோ?

iv

"கலையுடன் தமிழுங் கோவும்
கண்ணளிச் சேயும் எந்தன்
நிலைதரு வாழ்வுப் பேறாய்
நின்றிடும் மனையும்" நல்ல
நலமுடன் உள்ளார்; என்றே
நம்பதில் விடுத்தீர் அன்று;
அலையிடைத் துரும்பா யவரும்
அலைகின்றார் காணீர் இன்றே

v

சேவையைச் தமிழுக் காக்கிச்
சேர்ந்திடும் அழகுத் தமிழாம்
பூவையில் உயிரை வைத்தீர்
புதியவெம் அரசுத் திட்டம்
பாவையை வாட்டல் கண்டே
பரிதவிப் பீரன் றஞ்சி
ஆவியைத் தனதே யாக்கி
அமரனாய்க் காத்தான் தெய்வம்.



**- குறமகள்-**

*- நன்றி*
*வித்துனான் - வேந்தனார் அவர்களின்*
*புகழ்வளர் சோலையில் ஒரு மலர் - 1966*

# நண்பனா பகைவனா?



இனிக்க இனிக்க
இதமாக
கதைக்கும்போது
நீ என் நண்பனாகின்றாய்
முன்னே குறைகளை கூறாது
பின்னே பிறரிடம் என் குறைகளை
பகிர்ந்திடும் வேளை
நீயே பகைவனாகிறாய்

உதவிகளை ஓடோடிவந்து
செய்திடும்போது
நீ என் நண்பனாகின்றாய்
எதிர்பார்ப்புக்கள்
நிறைவேறாவிடிலோ
நீ என் எதிரியாகின்றாய்.

உன்னைப்புகழும் போதோ
நீ என் நண்பனாகின்றாய்
நியாயம் கேட்கும்போதோ
நீ என் பகைவனாகின்றாய்.
உன்னை முழுதாக ஏற்றிடிலோ
நீ என் நண்பனாகின்றாய்.
ஏற்காவிடிலோ
பகைவனாகின்றாய்
உன் சுதந்திரத்தை மதிக்கும்போது
நீ என் நண்பனாகின்றாய்.
என் சுதந்திரத்தைக்காக்கும்போது
நீ என் பகைவனாகின்றாய்.

- ரஞ்சி கதிர்

# தோன்றிற் புகழொடு



வறுமை வலி
வேதனை சோதனை
வியர்வையில் விளைகின்றது
உலக சாதனை

எம்ஜியார் பிறப்பாலும்
முரளிதரன் பிறப்பாலும்
இலங்கை
கண்டிமாநகருக்கும் பெருமையுண்டு

மனித நேயத்தைக் கூறுபோட்டுச்
சாதனை மலையின்
படிக்கற்களில் தாவமுடியாது
எனும் தத்துவத்தில்
மாமனிதர் நெல்சன் மண்டலா
பெற்ற பிள்ளைதான்
கிறிக்கற்
பந்துவீரன் முரளிதரன்

எண்ணூறு விக்கற்றுக்களை
வீழ்த்திய
சொர்க்கத் தீவின்
சாதனை வீரன்
சொற்களுக்குள் அடக்கமுடியாத
புகழ்மாலைக்கு உரியவன்

மயில்சாமி அண்ணாத்துரை
போன்று
முத்தையா முரளிதரன்
என்று
தன் தந்தையை முன் நிறுத்தி
தான் பின் நின்று
சாதனையில்
முந்திக் காட்டிய
முத்தல்லவோ
முத்துக் கடல் சூழ்ந்திருக்கும்
சத்துள்ள சாதனை வீரன்

மணிக்கட்டை
மடித்துப் பிடித்து வீசும்
சுழல் பந்து
அம்பெனப் பாயட்டும்

முரளியின் சாதனைகள்
முப்பத்தெட்டு
வயதைக் கடந்தும்
தொடரட்டும்

வாழ்த்துக்கள்
மலையாகக்
குவியட்டும்.



**முத்துராஜா**


கனடா மாதகல் நலன்புரி சங்கம், கனடா

## வருடாந்த ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டியும். 2010

இடம்: **Milliken Park – Area :B (McCowan & Steeles)**

காலம்: ஓகஸ்ட் 14, சனி 2010. காலை 10.00 மணி

கனடாவாழ் மாதகல் மக்கள் அனைவரையும் வருகைதந்து புதிய செயலவை உறுப்பினர் தெரிவிலும் விருந்துபசாரத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு: **(416) 816 – 0956 / (905) 479 – 5375 / (416) 282 – 0947**

# "ஐஸ் உலக அழகி மட்டுமல்ல, மக்கள் உன்னிப்பாக கவனிச்சுட்டு இருக்கிற ஒருத்தர்"

## சந்திப்பு: நடிகர் விக்ரம்

விக்ரமுக்கு அறிமுகம் தேவையில்லை. படத்துக்குப் படம் நடிப்பில் வித்தியாசம் காட்டுபவர். இப்போது மணிரத்னம், ஐஸ்வர்யா ராய், அபிஷேக் பச்சன் கூட்டணியுடன் 'ராவணன்' அவதாரம் முடித்த சந்தோஷத்தில் இருக்கிறார். அவரை சந்தித்தோம்.



## நேர்காணல் - சிவதாணு

மணிரத்னம் இயக்கத்தில் நடித்த அனுபவம் எப்படியிருந்தது?

விக்ரம்: "எனக்கு பெரிய கலைஞர்களுடன் வேலை பார்க்கிறது எப்போதுமே ரொம்பப் பிடிக்கும். பாலா அப்படிப்பட்ட ஒருத்தர். ஒரு விஷயம் எடுத்துக்கிட்டால் அதோட ஆணிவேர் நுனிவரை போகக் கூடியவர். அதுக்கு எவ்வளவு நேரமாகுங்கிறதைப் பற்றியெல்லாம் கவலைப்பட மாட்டார். நானும் அந்த ரகம்தான். அதனால்தானோ என்னமோ, எனக்கு இந்த மாதிரி இயக்குநர்களுடன் பணியாற்றும் வாய்ப்புகளும், சவாலான கேரக்டர்களும் தொடர்ந்து கிடைக்கிறது. அந்தவகையில் நான் அதிர்ஷ்டசாலிதான். ராவணன் ஷூட்டிங் சாலக்குடியில் மலையில, பாதைகளிலும் காடுகளிலும் நடந்திச்சு, கல்கத்தா போனோம். தாங்க முடியாத அளவுக்குத் தூசு. எல்லாருக்கும் இருமல், தும்மல் வந்திச்சு, அப்புறம் மத்தியப் பிரதேசம் போனோம். குளிர்ச்சியான பனி மூட்டமா அருமையான க்ளைமேட். இப்படி ஒன்றுக்கொன்று வித்தியாசமான லொக்கேஷன்ஸ். அதுதான் மணிசார். அவர் எப்பவுமே வித்தியாசமா முயற்சி செய்றவர். அது அவர் ஸ்டைல். ஒவ்வொரு காட்சியும், அசாதாரணமான, வழக்கமில்லாத ஒன்னா இருக்கணும்னு விரும்புகிறவர். அவர் காட்சிகளை எடுக்கும்போது ஒரு போருக்குத் தயாராகிற போர் வீரனைப் போல முனைப்பா, துடிப்பா, மூர்க்கமா இருப்பார். இது அவருடன் பணியாற்றும் எல்லாருக்கும் நல்ல அனுபவமா இருக்கும். எனக்கும் அப்படித்தான் இருந்தது.

நான் தமிழ் தவிர மற்ற மொழிப் படங்களில் நடிப்பதில்லை என்று ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். தமிழில் பண்றதுல எனக்கு முழுக்க முழுக்க சந்தோஷம் கிடைக்குது. எனக்குச் சாதகமான ஆடுகளமா இதை நான் நினைக்கிறேன். நான் பேசுற வசனம் என்னன்னு புரியாத மொழியில் நான் எப்படி என் முழுமையான நடிப்பைத் தர முடியும். தமிழ் தவிர தென்னிந்திய மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் மொழிகள்ல நடிக்கவும் எனக்குச் சந்தோஷம்தான். இவை தவிர வேற மொழி படங்கள்ல நடிக்கணும்னா அது மணிரத்னம் சார் மாதிரியான இயக்குநர்கள் படமா இருக்கணும்னு இப்போது என் எண்ணத்தை மாற்றியிருக்கிறேன். ராகேஷ் மெஹ்ரா, சஞ்சய் லீலா பன்சாலி படங்கள் என்றாலும் சரிதான்."

அபிஷேக் பச்சான் - ஐஸ்வர்யா ராயுடன் நடித்த அனுபவம் பற்றி...?

விக்ரம்: "அபிஷேக்கை எனக்கு ரொம்ப நாளா தெரியும். நாங்க நல்ல ஃப்ரெண்ட்ஸ். ஷூட்டிங் ஸ்பாட்ல, செட்ல அவர் நுழைஞ்சிட்டா போதும் அங்கே ஓர் அதிர்வு அலைகள் பரவ ஆரம்பிச்சுடும். அப்படி ஒரு கலகலப்பான மனிதர். அவர் ஷாட் முடிஞ்சாலும் அவர் போகமாட்டார். பாறைகள்ல ஷூட் பண்றப்போ, "கென்னி சார் பார்த்து காலடி எடுத்து வைங்க. இது கொஞ்சம் ஆபத்தான இடம். பார்த்தால் தெரியாது ஆளை சறுக்க வச்சு கவிழ்த்திடும். ரொம்ப கவனம். அந்தப் பாறைல இதுக்கு மேல ஏற வேண்டாம் ஆபத்து." தொடர்ந்து இப்படி எல்லாம் சொல்லி அக்கறையா கவனிச்சுப்பார். "இந்தச் சீன்ல உங்களுக்குக் கண்ணுல தண்ணி வரவைக்க கிளிசரின் வேண்டியிருக்காது. ஏன்னா இது ரொம்ப நீள ஷாட். அது எடுத்து முடிக்கிறதுக்குள்ள உங்களுக்குத் தானா கண்ணீர் வந்துடும்" என்பதுபோல் ஜோக்குகள் அடித்து ஜோவியலாவும் இருப்பார். அவரது சினிமா அனுபவங்கள் சம்பந்தமா பேசுவார்.

அபிஷேக் இப்படின்னா ஐஸ் கூட வேற ரகம். ஐஸ் உலக அழகி மட்டுமல்ல, மக்கள் உன்னிப்பா கவனிச்சுட்டு இருக்கிற ஒருத்தர். அதனால எனக்கு அவங்க கூட சகஜமா இருக்க முடியலை. பழக முடியலை. ஏன், கொஞ்சம் தயக்கமும் இருந்திச்சும்பேன். ஆனால் அவங்க தொழில் ரீதியா நல்ல தெளிவா இருக்கிறவங்க. ரொம்ப என்கரேஜிங்கா இருப்பாங்க."



நடிப்பு தவிர கதை, இயக்கம் போன்ற விசயங்களில் ஆர்வமுண்டா?

விக்ரம்: "டைரக்ஷன் ஆசை மனசுக்குள் எப்பவும் இருக்கு. எனக்கு மட்டுமல்ல, எல்லா நடிகர்களுக்கும்தான் ஒரு படத்துக்காவது கதை எழுதணும், டைரக்ட் பண்ணணும்கிற ஆசை இருக்கும். ஒரு வகையில் பார்த்தால் நடிகர்கள் எல்லாருமே உதவி இயக்குநர்கள் மாதிரிதான். ஷூட்டிங் ஸ்பாட்டில் அவர்கள் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டுதானே இருக்காங்க. மணிரத்னம், பாலா, ஷங்கர் மாதிரியான இயக்குநர்களுடன் ஒர்க் பண்றப்போ நான் மானசீகமா உதவி இருக்குநரா இருப்பேன். அந்த அனுபவம் எனக்கு ஒரு நம்பிக்கையைத் தந்திருக்கிறது. இன்னும் சில வருடங்களில் நான் இது மாதிரி முயற்சியில் நிச்சயம் இறங்குவேன்."

நடிகருக்காகக் கதை, கதைக்காக நடிகர் - இதில் உங்கள் விருப்பம் எது?

விக்ரம்: "நான் ஒரு முழுமையான நேர்த்தியான படத்துல நடிக்க விரும்புறவன், அப்படிப்பட்ட படங்களும் வந்துட்டு இருக்கு. சினிமா எப்போதும் டைரக்டரின் மீடியம்தான். ஒரு டைரக்டர் விரும்புற, அவர் கேட்பதை நடிக்கிற நடிகனா இருக்கவே எனக்கு ஆசை. நான் இயக்குநரின் நடிகன் என்றுகூட சொல்லலாம். இந்தக் கேரக்டருக்கு விக்ரம்தான் சரிப்பட்டு வருவான், அந்த ஆளைவிட்டு வேற ஆள சரிவராதுன்னு அந்த டைரக்டருக்குத் தோணனும். அப்படிப்பட்ட படங்கள்ல நடிக்கவே எனக்கு விருப்பம்."

சினிமாவுக்கு வெளியே விக்ரம் எப்படி?

விக்ரம்: "நான் சினிமாவையும் என் தனிப்பட்ட வாழ்க்கையையும் பிரித்துதான் வைத்திருக்கிறேன். ஸ்கிரீனுக்கு முன்னால் இருக்கும் விக்ரம் வேறு, பின்னால் இருக்கும் விக்ரம் வேறுங்கறதுல தெளிவா இருக்கேன். நான், மனைவி, குழந்தைகன்னு சின்னக்கூடு மாதிரி என் குடும்பம். வீடு போய்ட்டா என் மொபைல் போன் ஆஃப் ஆயிடும். சினிமா, ஷீட்டிங்கன்னு போய்ட்டா வீட்டுல உள்ளவங்க என்னை நெருங்க முடியாது. பெசண்ட் நகரில் எனக்கு சின்னதா அழகான ஒரு வீடு. பெசண்ட் நகர்ல இருந்தா வீட்டுக்கு நடந்தே போகப் பிடிக்கும். யாராவது என்னை அடையாளம் தெரிஞ்சு ஆரவாரம் செஞ்சா எனக்குப் பிடிக்கிறதில்லை. எனக்குப் பாதுகாவலா ஐந்து பேர் இருந்தாலும் வெளியில் ஜிம்முக்குப் போறப்போ, டிபார்ட் மெண்டல் ஸ்டோர், ஷாப்பிங் போறப்போ, தனியாத்தான் போவேன். அதுதான் எனக்குப் பிடிக்கும்."

கடவுள் நம்பிக்கை பற்றி..?

விக்ரம்: "நான் கடவுள முழுசா நம்புறவன். அவர் திடீர்னு என் முன்னால தோன்றி, "உனக்கு மூணு வரம் தர்றேன், கேளுன்னு" சொன்னால், "நான் மறுபடியும் நடிகர் விக்ரமா பிறக்கணும், என் குடும்பம் ஃப்ரண்ட்ஸா இப்ப இருக்கிறவங்களே வேணும், ஆனா எனக்கு இப்ப கிடைச்சிருக்கிற சக்சஸ் சந்தோஷம் இவ்வளவு காலங்கள், கஷ்டங்கள், போராட்டங்களுக்குப் பிறகு கிடைக்காம, சீக்கிரமே கிடைக்கணும்னு வரம் கேட்பேன்."



SMILE....
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days

# ஒரு சமையல் குறிப்பு

அவ்வப்போது ஏதாவது எழுத முயல்பவர்களுக்காகவும் இளம் எழுத்தாளர்களுக்காகவும் இக்குறிப்புகள் அளிக்கப்படுகின்றன. சிங்கப்பூர் தமிழ்ச்சங்கம் சார்பில் ஆகஸ்ட் 2006 இல் நிகழ்ந்த சிறுகதைப் பயிற்சிப் பட்டறையில் நடத்திய பாடத்தின் வரிவடிவம் இது.

1. சிறுகதை என்றால் என்ன?

"சிறுகதை" என்ற சொல் short story என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பு. இச்சொல்லை வைத்து சிறுகதை என்ற வடிவத்தை புரிந்துகொள்ளக் கூடாது. இது சிறுகதை என்ற வடிவம் உருவாகி வந்த ஆரம்ப நாட்களில் போடப்பட்ட ஒரு பொதுப்பெயர் மட்டுமே.

அதாவது சிறுகதை என்றால் "சிறிய கதை" அல்ல. எல்லா சிறிய கதைகளும் சிறுகதைகள் அல்ல. சிறுகதை என்பது ஒரு தனித்த இலக்கிய வடிவம். அதற்கு தனியான வடிவச்சிறப்புகள் உண்டு.

சிறிய கதைகள் பலவகை. உதாரணகதைகள் நீதிக்கதைகள், உருவகக் கதைகள், நிகழ்ச்சித்துணுக்குகள் எல்லாமே சிறிய கதைகள்தான்.

பள்ளியில் காக்கா வடை சுட்டது போன்ற நீதிக்கதைகளை நாம் படித்திருப்போம். ஏசுகிறிஸ்து, ராமகிருஸ்ண பரமஹம்சர் போன்ற மகான்கள் நிறைய உதாரணக் கதைகளை சொல்லியிருக்கிறார்கள். பஞ்சதந்திரக் கதைகள் ஈசாப் குட்டிக்கதைகள் போல பலவகையான உருவகக் கதைகளை நாம் கேட்டிருபோம். இவை ஏதும் "சிறுகதை"கள் அல்ல.

புதுமைப்பித்தன் முதல் சுஜாதா வரையிலான எழுத்தாளர்கள் எழுதும் சிறுகதைகளுக்கும் இவற்றுக்கும் முக்கியமான ஒரு வேறுபாடு உண்டு. அதுதான் சிறுகதையின் அடையாளம்.

அது என்ன?

அதை கதையின் முடிப்பில் உள்ள "திருப்பம்" என்று சொல்லலாம். இதை ஆங்கிலத்தில் "twist" என்று சொல்கிறார்கள்.

அதாவது ஒரு சிறிய கதையை சிறு கதையாக ஆக்குவது திருப்பம்தான். "சிறுகதை என்றால் இறுதியில் திருப்பம் உள்ள சிறிய கதை" என்று எளிமையாக வரையறை செய்யலாம்.

சிறுகதையின் திருப்பம் எப்படி உருவாகிறது?

பிற கதைகளையும் சிறுகதையையும் ஒப்பிட்டுப்பார்ப்போம்.

பிற கதைகளில் ஒரு மையம் இருக்கும். அந்த மையத்தை நமக்குச் சொல்வதற்காகவே அந்தக் கதை நிகழும். கதையை வாசித்து முடித்ததும் அந்த மையம் நம் மனதில் அழுத்தமாக பதியும். எளிமையான உதாரணத்தையே வைத்துக் கொள்வோம்.

"ஒரு ஊரில் ஒரு காகம் இருந்தது. அந்தக் காகம் தன்னைப்பற்றி உயர்வான கற்பனை கொண்டதாக இருந்தது. [1]

ஒருநாள் அந்தக் காகம் ஒரு வடையை திருடிக் கொண்டுவந்து மரத்தில் அமர்ந்தது. [2]

அப்போது அங்கு ஒரு நரி வந்தது. அது தந்திரக்கார நரி [3]

## சிறுகதை

நரி காகத்திடம் "காக்காயே உன் குரல் இனிமையானது என்றும் நீ சிறந்த பாடகன் என்றும் கேள்விப்பட்டேன். ஒரு பாட்டு பாட மாட்டாயா ?" என்று கேட்டது [4]

புகழ்ச்சியில் மயங்கிய காகம் வாயைத்திறந்து "கா!கா!"என்று பாட்டு பாடியது. [5]

அப்போது வடை கீழே விழுந்தது. நரி வடையுடன் ஓடிப்போயிற்று. [6]

"புகழ்ச்சிக்கு மயங்குகிறவன் ஏமாளி" [7]
இது ஒரு நீதிக்கதை. இந்தக்கதையின் மையம் என்ன? சொற்றொடர் 7 தான். மொத்தக்கதையும் அந்த மையத்தை நமக்குச் சொல்லும்பொருட்டே அமைந்துள்ளது. கதை முடிந்ததும் நமக்கு அதன்

**ஜெயமோகன்**

மையக்கருத்து தெளிவாக புரிந்துவிடுகிறது.

ஏழாவது சொற்றொடர் இல்லாவிட்டாலும்கூட அந்த நீதியை நாம் அடைந்துவிடமுடியும்.

இதேகதை இப்படி முடிகிறது என்று வைத்துக் கொள்வோம். ஐந்தாவது சொற்றொடருக்குப் பின்னால் கதை இப்படி உள்ளது

"புகழ்ச்சியில் மயங்கிய காகம் வடையை தன் காலால் பிடித்துக்கொண்டு வாயைத்திறந்து "கா!கா!"என்று பாட்டு பாடியது.

நரி வாயைப்பிளந்து நிற்கையில் காகம் சொன்னது "அஸ்குபுஸ்குஉ". ஒன்றாம் வகுப்பு பிள்ளைகள் இந்தக் கதையை பாடத்தில் படிப்பதை நான் நிறையதடவை கேட்டிருக்கிறேன்."

இது இப்போது ஒரு சிறுகதையின் வடிவத்தை அடைந்துவிட்டது. இறுதியில் உள்ள திருப்பம்தான் இதை சிறுகதையாக மாற்றுகிறது.

பிற கதைகளில் அதன் மையக்கருத்துதான் அதன் மையம். சிறுகதையில் அதன் திருப்பமே அதன் மையம். ராட்சதனின் உயிர் ஏழுமலை உச்சியில் உள்ள குருவியில் இருப்பதுபோல சிறுகதையின் உயிர் அதன் திருப்பத்தில் உள்ளது.

இப்போது நீங்கள் வாசித்த நல்ல சிறுகதைகளை யோசித்து பாருங்கள்

திருப்பம் எதற்காக?

திருப்பத்தை முக்கியமானதாகக் கொண்டு சிறுகதைவடிவம் உருவாகக் காரணம் என்ன?

முதல் காரணம், வாசகனின் கற்பனைக்கு அதிக இடம் கொடுப்பதேயாகும். மற்ற கதைகளில் கதையின் மையத்தை புரிந்து பெற்றுக்கொள்ளும் இடத்தில் வாசகன் இருக்கிறான். ஆனால் சிறுகதையில் வாசகனை கதைக்குள் இழுக்கிறான் ஆசிரியன். வாசகன் கதைமுடிவைப்பற்றி என்ன நினைக்கிறான் என்று ஊகித்து அதற்கு நேர் எதிராக கதையை முடித்து அவனை திகைக்க வைக்கிறான். கதைவாசிப்பு என்ற செயலில் வாசகன் ஆற்றும் பணி மேலும் அதிகமாக ஆகிறது.

இதைத்தான் "வாசகப் பங்கேற்பு" என்ற கலைச்சொல்லால் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். நவீன இலக்கிய வடிவங்கள் எல்லாமே வாசகப்பங்கேற்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் உருவானவையே. இலக்கிய வடிவங்களில் வரும் எல்லா மாற்றங்களும் மேலும் மேலும் வாசகப்பங்கேற்பை உருவாக்கும் பொருட்டு வருவனவே.

இப்படி வாசகப் பங்கேற்பை அதிகரிப்பதற்கான தேவை என்ன வந்தது?

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சு ஊடகம் உருவாகி வளர்ந்ததும் கதைகளை எழுதுவதும் வாசிப்பதும் பல்கிப் பெருகிற்று. சிந்தித்து பாருங்கள், இதழ்கள், சினிமா, தொலைக்காட்சி என்று நாம் ஒருநாளில் எத்தனை கதைகளைக் கேட்கிறோம்! சொல்லப்போனால் மீன் நீரில் திளைத்து வாழ்வது போல நாம் கதைகளில் வாழ்கிறோம்.

இத்தனை கதைகள் வந்து நிறைந்தபோது கதைகளில் வாசகனின் பழக்கம் அதிகமாயிற்று. ஒரு கதையை படிக்கும்போதே அவன் முடிவை ஊகிக்க ஆரம்பித்துவிட்டான். அவ்வாறு ஊகிக்கக் கூடிய கதைகளில் அவனுடைய ஆர்வம் குறைந்தது. சிறுகதை வடிவம் வாசகனின் ஆர்வத்தை தக்கவைத்துக் கொள்ளும்பொருட்டே உருவாயிற்று. வழக்கமான கதைவாசகன் ஒரு கதையை எப்படி ஊகிப்பான் என்பதை கதையாசிரியனே ஊகித்து அதற்கு மாறாக கதையை முடிக்கிறான். இது வாசகனை கதையைப்பற்றி சலிப்படையாதிருக்கச் செய்கிறது.

உண்மையில் சிறுகதை என்ற வடிவம் தொடக்கத்தில் பொழுதுபோக்கு இதழ்களில் வாசகனுக்கு ஆர்வமூட்டி முடிவில் இன்பத்தை அளிக்கும் ஒருவகை "கதை விளையாட்டாக"வே உருவாயிற்று. சிறுகதை முன்னோடிகளான "எட்கார் ஆல்லன் போ", "ஓ.ஹென்றி" போன்ற படைப்பாளிகளின் கதைகள் இத்தகைய விளையாட்டுகளாகவே உள்ளன.

சிறுகதையை வாசிக்கும்போது வாசகன் வெறுமே கதைபடிப்பவனாக இல்லாமல் கதையை பலவாறாக ஊகித்து புனைந்தபடியே செல்கிறான். "இப்படி இருக்குமோ? இப்படி முடிப்பாரோ!" என்றெல்லாம் அவன் எண்ணிக் கொண்டே படிக்கிறான். இப்போது கதையில் வாசகன் "பங்கேற்க" ஆரம்பித்துவிடுகிறான். அவனும் அக்கதையை தனக்குள் எழுதுகிறான். ஆகவே இங்கே வாசகன் வெறுமே வாசகனாக இல்லாமல் "இணை ஆசிரியனாக" செயல்படுகிறான்.

நவீன ஆக்கங்களில் வாசகன் அப்படைப்பாளிக்கு இணையாகவே கற்பனையை செயல்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். இது இன்றைய இலக்கிய திறனாய்வில் பலவாறாக விரிவாகப் பேசப்படுகிறது. சிறுகதையில் உள்ள திருப்பம் வாசக பங்கேற்பை அதிகரிக்கும்பொருட்டு உருவானதே.

சிறுகதை என்பது புத்திலக்கியத்தின் ஒரு முக்கியமான வடிவம். மரபிலக்கியம் ஏற்கனவே சமூகத்தில் உள்ள கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் வலியுறுத்தும் போக்கு கொண்டது. புத்திலக்கியம் அவற்றை மறுத்து அல்லது பரிசீலனைசெய்து பேசும் நோக்கம் கொண்டது. சிறுகதையில் உள்ள திருப்பம் இதற்கு மிக வசதியானதாக அமைந்தது. ஒரு பிரச்சினையை பேசியபடியே வந்து சட்டென்று ஒருபுதிய கோணத்தை திறப்பதற்கு சிறுகதையே மிகச்சிறந்த வடிவம்.

புத்திலக்கியவாதிகள் பெரும்பாலானவர்கள் வாழ்க்கை என்பது பலவிதமான முரண்பாடுகளால் ஆனது என்று எண்ணினார்கள். வாழ்க்கையில் உள்ள முரண்பாடுகளைச் சொல்வதற்கும் சிறுகதை சிறந்த வடிவம்.

மாப்பசான், ஆண்டன் செகாவ் போன்ற படைப்பாளிகள் இவ்வாறு சிறுகதையை கையாண்டு அதை இலக்கியத்தரமான ஒரு வடிவமாக மாற்றினர்.

சிறுகதையின் வடிவம் என்ன?

எல்லா கதைகளும் தங்கள் மையத்தை முன்வைப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கும். அதற்காகவே அக்கதைகளில் உள்ள எல்லா கூறுகளும் இயங்கும்.

அப்படி மையத்தை முன்வைக்க உதவாத விசயங்களை ஒரு கதை சொல்லிக் கொண்டிருக்குமென்றால் "சரியான வளவளப்பு"என்று நாம் சொல்வோம்.

உதாரணமாக முன்னர் சொன்ன கதையை இப்படி ஆரம்பிக்கலாம்.

"ராஜகிருகம் என்ற ஊரில் ராஜசிம்மன் என்ற ஒரு மன்னன் ஆட்சி செய்துவந்தான்

அவன் நேர்மையான மன்னன். மக்கள் அவனை நேசித்தார்கள்.

அவன் நாட்டில் ஒரு பெரிய காடு இருந்தது. அந்தக் காட்டில் ஏராளமான பறவைகளும் விலங்குகளும் இருந்தன."

இதன் பின் முதல் சொற்றொடர் [1] வந்தால் நாம் சலிப்படைவோம். கதை புகழ்ச்சியைப்பற்றியது. கதைமாந்தர் காகமும் நரியும். இதில் மன்னனும் காடும் எதற்கு என்று கேட்போம்.

சரி அந்தப் பாட்டியைப் பற்றி ஒரு வர்ணனை கொடுத்தால் என்ன?

"அந்த ஊரிலே குப்பம்மா என்று ஒரு பாட்டி இருந்தாள். அவள் நல்ல பாட்டி. அவளுக்கு யாருமே இல்லை. அவள் அனாதை. ஆகவே வடை சுட்டு விற்று வாழ்ந்து வந்தாள்"

கதை பாட்டியைப்பற்றியதே அல்ல. ஆகவே பாட்டியைப்பற்றி வர்ணித்தால் நாம் பொறுமை இழப்போம்.

இதேபோலவே நரியின் முன்கதையையோ காகத்தின் பின் கதையையோ விரிவாகச் சொல்லப்போனாலும் அலுப்புதான்.

கதையின் மையம் புகழ்ச்சிக்கு மயங்குதல். அதைச் சார்ந்தே கதையின் எல்லா உறுப்பும் இருக்கும்.

இதைத்தான் கதையின் ஒருமை [unity] என்கிறார்கள். கதைகளைப்பற்றி பேசும்போது கச்சிதமான வடிவம், வடிவ நேர்த்தி என்றெல்லாம் பொதுவாகச் சொல்வது ஒருமையைப் பற்றித்தான்.

ஒருமையை உருவாக்குவது எது? நோக்கம்தான்.

எந்த நோக்கத்துடன் ஒரு கதை எழுதப்படுகிறதோ அதன்பொருட்டே அந்தக் கதையின் எல்லா விடயங்களும் அமைந்திருப்பதே ஒருமை.

உண்மையில் கதைகள் மட்டுமல்ல ஒருவர் சாதாரணமாகப் பேசும்போதே ஒருமை இல்லாவிட்டால் நம்மால் அதை கேட்க முடியாது.

ஆனால் சிறுகதை நேர்மாறாக இருக்கிறது. அது கூறவந்ததை நேராக முன்வைப்பதில்லை என்று கண்டோம். அது திருப்பத்தைத்தான் தன் மையமாகக் கொண்டிருக்கிறது. அப்படியானால் அதன் ஒருமை எப்படி உருவாகும்?

இங்கும் நாம் பார்க்க வேண்டியது நோக்கத்தைத்தான். சிறுகதையின் நோக்கம் ஒரு மையக்கருத்தை சொல்வது அல்ல. ஒரு

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

# Chill out with a McFlurry®.

McDonald's® has a variety of delicious McFlurry flavours like Smarties®, Oreo® and Rolo® to help keep your cool this summer.




i'm lovin' it®

At participating McDonald's® restaurants in Canada.
Product availability varies by restaurant.
©2010 McDonald's.
Oreo is a trademark of Kraft Foods Global Brands, LLC/Inc. ROLO®, Smarties® T.M. OWNER / PROP. DES MARQUES: SOCIÉTÉ DES PRODUITS NESTLÉ S.A. VEVEY, SWITZERLAND/SUISSE. LICENSEE / LICENCIÉ: NESTLÉ CANADA INC.

| | |
|---|---|
| *Markham and Progress* | *Drive thru open 24 hours* |
| *Markham and Finch* | *Drive thru open 24 hours* |
| *Markham and Highglen* | *Drive thru open 24 hours* |
| *Port Union and Kingston Rd* | *Drive thru open 24 hours* |
| *Malvern Town Centre* | |
| *Markham and Steels Wal Mart* | |

# இலங்கையில் மீண்டும் மறைந்த விலங்கினம்

தேவாங்கு எனப்படும் குரங்கினத்தை சேர்ந்த (Horton Plains Slender Loris bign-ning) விலங்கினம் இலங்கையிலும் தென்இந்தியாவிலும் மட்டுமே இருந்தது. இது 65 வருடங்களுக்கு முன்னர் உலகில் இருந்து முற்றாக அழிந்து விட்டதாக நம்பப்பட்டது. குச்சி போன்ற கால்களையும், ஒல்லியான நீண்ட உடம்பையும் அகண்ட பெரிய பயத்தை தரக்கூடிய கண்களையும் உடைய இந்த மிருகத்தை இலங்கைக் காடுகளில் கொழும்பு பல்கலைக்கழகத்தை சேர்ந்த விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் 2002 ஆம் ஆண்டில் கண்டதாக கூறியிருந்தார்கள்.

இதைத் தொடர்ந்து இலண்டன் விலங்கியல் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்தவர்கள் மற்றும் இலங்கை திறந்தவெளி பல்கலைக்கழக விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் பலர் இலங்கைக்காடுகளில் இந்த தேவாங்கு விலங்கினத்தை தேடி படம் எடுக்க பல முயற்சிகள் செய்தார்கள்.

சமன் கமகே என்பவர் தலைமையிலான ஆய்வுக் குழு ஒன்று மத்திய இலங்கையில் உள்ள வனப்பகுதியில் வைத்து தேவாங்கைப் படம் பிடித்தார்கள். இதை அடுத்து இலண்டன் விலங்கியல் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த உயிரியலாளரான Craig Turner கடந்த யூலை 19, 2010 ஆம் நாள் தேவாங்கு விலங்கினம் உயிருடன் அழிந்துவிடாமல் இருப்பதை உறுதிப்படுத்தி பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை விட்டார்.



சுற்றுப்புற சூழல் முகாமைத்துவத்தில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்றுள்ள Craig Turner தற்போது இலண்டன் விலங்கியல் ஆராய்ச்சி நிலையத்தில் உயிரியலாளர் ஆக பணிபுரிகிறார். ஆங்கிலேயர்கள் தேநீர் மீது கொண்ட மோகத்தால் இலங்கைக் காடுகளை மிகவும் அளவிற்கு அதிகமாக வெட்டி அழித்ததாலேயே இந்த தேவாங்கினம் அழிக்கப்பட்டதாக கூறும் Craig Turner, 1937 ஆம் ஆண்டிற்கு பின்னர் 2002ஆம் ஆண்டுவரை இலங்கைக் காடுகளில் ஆக இரண்டு தரம் மட்டுமே தேவாங்குகளை மனிதர்கள் கண்டதாக கூறினார். Craig Truner மேலும் கூறுகையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட இரவுகள் இலங்கை காடுகளில் அலைந்து திரிந்தே இந்த அழிந்து விட்டதாக நம்பப்பட்ட விலங்கை தாங்கள் கண்டதாக கூறினார்.

மிகவும் பெரிய, பயத்தை தரக்கூடிய இரண்டு கண்களை கொண்டே இம்மிருகத்தை தாம் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது என்றார். தேவாங்குகள் இரவில் இரை தேடுவன. இக்கண்கள் இம் மிருகத்திற்கு இரவில் நன்றாகவும் நீண்ட தூரம் பார்ப்பதற்கும் உதவியாக இருக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் இரவில் சிவப்பு நிற மின்விளக்குகள் மூலம் (Red Filtered Flashilight) காடு முழுவதும் சீப்பால் தலைமயிர் வாருவது போல் ஒரு இடமும் விடாமல் தேடியே தேவாங்குகளை கண்டார்கள்.

இவ் ஆராய்ச்சியாளர்களின் குழுவினர் மூன்று தேவாங்குகளை உயிருடன் பிடித்து அவற்றின் அளவுகளையும் மற்றும் தேவையான உயிரியல் தகவல்களையும் எடுத்த பின்னர் திரும்பவும் காட்டுக்குள் விட்டுவிட்டதாக Craig Turner கூறினார். இம் மூன்று விலங்குகளும் ஆறு அங்குலத்தில் இருந்து பத்து அங்குலம் வரை நீளமானவை.

தற்போது இலங்கை காடுகளில் 60 இற்கும் குறைவான தேவாங்குகள் இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இதனால் தற்போது இவ்வினம் உலகில் இருக்கும் குரங்கு வகைகளில் அழிவின் விளிம்பில் இருக்கும் இனமாக (most threatened primates) கருதப்படுகிறது.



அருந்ததி ஞா.







